உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சிதம்பரசபாநாதபுராணம்.

---


கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீன

வித்வான்

**சபாபதிநாவலரவர்கள்**

இயற்றியது.


---


இஃது

திருவிடைக்கழி

**ஆறுமுகபிள்ளையவர்கள்**

வேண்டுகோளின்படி

விழுப்புரம்

**இராமசாமிப்பிள்ளையவர்களால்**

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

சென்னபட்டணம்:

பார்த்திப௵ வைகாசிமீ

THE MADRAS RIPON PRESS.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப்பாயிரம்.

---

திருவாவடுதுறையாதீனத்து

ஸ்ரீமத்

## இராமலிங்கசுவாமிகளியற்றியது.

பூமேவுசோணாடுசோறுடைத்தென்றான்றோர்முன்புகலற்கேற்ப [றைத்
மாமேவுமிருவகையாஞ்சோறுடைத்தாயிம்மையொருவகையாஞ்சோற்
தூமேவுநெய்கறிபாலொடுவழங்கியொருவகையாஞ்சோற்றுறையம்மைத்
தேமேவுதனியேதந்தளிக்குமுயர்பொன்னிவளச்சென்னிநாட்டில்: (௧)

இருவகைத்தாமரைமலருமேன்மலரப்பலநாளமிருநீர்த்தோன்ற
விருசுடரையுண்டுமிழுமுரகங்கட்கெளியேமோயாமென்றேமேற்
றிருவினராத்தொகைபிலத்தினின்றும்வந்துபல்செங்கதிரும்பல்வெண்க
திரும்விழுங்கிக்கக்குதல்போலும்வளமைச்சிதம்பரமாஞ்செழுந்தலத்தில்.

அம்புலியுஞ்சிறப்புலியுங்கோட்புலியுமரவுஞான
வம்புமலர்க்குழன்மயிலுஞ்சிறுகளிறுமாட்டினைமுன்வணங்கிவாழ்த்தப்
பம்புபலபசுவுமுய்யக்கேழலுமன்னமுங்காணாப்பரிவினோங்க
நம்புபொதுநடம்புரியுநடராசப்பெருமான்சீர்நண்ணியோங்கி. (௩)

நலம்பொலியப்பரவேமசபாநாதமான்மியத்தைநன்குகற்றோர்
பலம்பொலியப்பயிறோறும்பயிறோறூற்றிருந்துபசுந்தேன்பில்கித்
தலம்பொலியமணக்குமுயர்செந்தமிழாற்பாடியன்பிற்றருகவென்று
வலம்பொலியக்கற்றாங்கேயெரியோம்பியந்நகர்வாழ்மறையோர்சாற்ற. (௪)

இனையவர்கூறியவாறேயவனிமங்கைக்கிருபொருள்சாலீழநாடாம்
வனைமுகத்திலணிதிலகமாகும்வடகோவையெனும்வளமூதூரிற்
புனையுமாதவச்சைவசமயமெனும்பயிர்வளர்க்கும்புயல்போல்வாழ்வான்
றனைநிகர்க்குஞ்சிவபெருமான்பெரும்புகழேபல்காலுஞ்சாற்றுநாவான். (௫)

கொங்கலர்பூம்பொழிற்றுறைசைவாழ்புகழ்ச்சுப்பிரமணியகுரவன்முன்
போ, யங்கவன்பான்மூவகையாந்தீக்கையும்பெற்றவனடிக்கேயடிமையா
னோன், மங்கலவெக்கலையையுமோதாதுணர்ந்தசிவஞா[illegible]னபொற்
செங்கமலத்தாளிரண்டுந்தன்னிருகண்மணிநாப்பண்சேரவைத்தோன். (௬)

வாய்ந்தபெருந்தவமருவம்முனிவரன்போலுரையெழுதும்வலிமையாள
னாய்ந்தவொருகடிகையினிலற்புதக்கற்பனையோங்குமனேகஞ்செய்து,ளேய்
ந்தபுகழ்ப்புலவர்மிகவெடுத்தினிதுபாராட்டவியம்பவல்லான், றேய்ந்தபுக
ழ்த்தென்கலைமுற்றொருங்குணர்ந்தோன்வடமொழியுந்துலங்கவாய்வோன்.

எர்பரவுமெந்நூலும்பிரசங்கஞ்செயுந்திறலாலிணையிலாதான்
சீர்பரவிப்புவித்தருக்கும்புலவர்களுக்கெல்லாமோர்சிங்கம்போல்வா[லாம்
னார்பரவுபொறைகருணைகொடையொழுக்கம்வாய்மைமுதனலங்களெல்
பேர்பரவத்தனைப்பலகாணினைப்போருமெளிதுபெறப்பெற்றுவாழ்வோன்

உற்றநானிலமிருக்குங்காறுமழியாதபுகழுடம்புபெற்றான்
பெற்றதாய்போலன்புதன்பானட்புடையேன்பாற்பெருகவைத்தோன்
கற்றபெரும்பாவலரும்பெருஞ்செல்வமுடையாருங்கணக்கின்மாட்சி
மற்றவரும்புகழ்ந்துவியந்தெதிர்கொள்ளுஞ்சபாபதிநாவலன்றான்மன்னோ.

திசைபரவுநாவலர்கள்பலருமுளம்வியந்துபல்காற்சிரந்துளக்க
நசைபரவுஞ்சிதம்பரசபாநாதபுராணமெனுநாமமோங்க
விசைபரவுஞ்சுவைபெருகப்பாடினனப்புராணத்தையிருநீர்வைப்பின்
மிசைபரவிநீடூழிகாலம்வரையெங்கெங்கும்விளங்கிமல்க. (௧௦)

வேய்ந்தபொருட்கவிவாணர்புகழ்சோழவளநாட்டில்விளங்காநின்ற
வாய்ந்தமகிழூறுந்தாதைமகிழூறுமாறுண்மைமொழிவகுப்பமுன்னா
ளேய்ந்தகுரவமர்ந்தபிரான்குரவமர்ந்தவுயர்தலமென்றெவரும்வாழ்த்தி
யாய்ந்ததிருவிடைக்கழியிலறம்பெருகப்புகழ்பெருகவமருஞ்சீலன். (௧௧)

வயமாரும்புகழ்ச்சுப்பராயவள்ளன்முன்செய்தமாதவத்தின்
பயனாகிவந்துதித்தோன்செல்வமுங்கல்வியுமொருங்குபடிமேற்பெற்றோ
னயமார்மெய்ச்சிவனடியார்தமக்கிளையான்குடிமாறனாயனார்போ
லுயர்வாநெய்கறிபாலோடமுதுதினந்தோறுமமைத்தூட்டுமன்பன்.

தேசுமலர்மகிழடியில்வீற்றிருக்குஞ்சிவபெருமான்செம்பொற்கோயின்
மாசில்பூசனைகாலந்தொறுந்தவறாவகைநடத்தும்வண்மையாளன்
காசிமுதற்பலதலயாத்திரைபுரிவோர்கவிவாணர்சருதுபன்னூ
லாசிலுயரச்சிறுவோர்வறியவர்மற்றெவர்க்குநிதியளிக்கும்வள்ளல். (௧௩)

வளம்பெருகத்திகழன்னசாலைவைத்துப்பெரும்புணியம்வளர்க்குமேலோ
னுளம்பெருகுஞ்சினேகமென்பால்வைத்தன்புமேம்படுமாறொழுகுவோன
சீ, தளம்பரவுமின்சொல்பொறையடக்கமருள்வாய்மைகொடைசாலவுள்
ளோன், விளம்புரியநயசுகுணவாறுமுகப்பெருந்தகைதன்வேண்டுகோளால்.

முன்னுபொழில்விழுப்புரத்திற்றாண்டவராயக்குரிசின்முன்னாட்செய்த
துன்னுபெரும்பாக்கியத்தின்பயனாகியுதித்தநயசுகுணமேலோன்
மன்னுபலநூலுணரெங்கள்கண்மணியாஞ்சபாபதிநாவலன்பாற்கற்றோன்
புன்னுபுகழ்[illegible]குரிசிலெழிலச்சிற்பதித்தான்மன்னோ. (௧௫)

## சிறப்புப்பாயிரம்.

திருவாவடுதுறையாதீனத்து

ஸ்ரீமத்

# ஆறுமுகசுவாமிகளியற்றியது.

பொன்பூத்தபூவுலகப்புருடனுக்குப்பலநாடுங்
கொன்பூத்தபலவுறுப்பாக்குலவவொருதான்றலையாய்த்
தென்பூத்தகாரணத்தாற்சென்னிநாடெனச்சிறந்து
மன்பூத்தபுகழ்படைத்துவளர்சோழவளநாட்டில். (௧)

பலதலமுந்தன்னுள்வியாப்பியப்படுத்துமாகாயத்
தலமதுவாயனவரததாண்டவஞ்செய்தெம்பெருமான்
குலவவயனரிமுதலோர்கொண்டாடக்கண்டவுட
னிலவியபேரின்பருளுநெடும்பணைசூழ்திருத்தில்லை. (௨)

அத்தலமான்மியம்பலவாலவற்றுள்ளுமேமசபை
வித்தகன்மான்மியந்தமிழால்விரிக்கவெனத்தில்லைமறையோ
ரித்தகைநம்பெருமானாரின்னருடாவெனத்தெளிந்து
புத்தமுதாப்புலவர்கொளப்புரிந்தளித்தான்மொழிபெயர்த்து. (௩)

அனையவன்யாரெனினீழத்தான்றவட்டுகோவைநகர்ப்
புனைசுயம்புநாதனெனும்புண்ணியன்செய்தவப்பயன்போல்
வனைபுகழோடவதரித்தோன்வடமொழியிற்சிலநூலுந்
தனைநிகர்செந்தமிழ்ப்பரப்பினெந்நூலுந்தலைகண்டோன். (௪)

எங்கடுறைசையிலமர்சுப்பிரமணியவெழிற்குரவன்
பங்கயப்பொற்பதஞ்சார்ந்துபணிந்துசிவதீக்கையுறீஇப்
புங்கமிகுசிவஞானக்கலைமுழுதும்பொதுச்சிறப்பிற்
சங்கையறத்தெளிந்துபிரசங்கநனியியற்றிடுவோன். (௫)

இன்னுமென்யாம்பலபுகறலியற்பெயர்கொண்டமைக்கேற்பப்
பன்னுகலைஞர்களவையிற்பதியாகும்பான்மையினான்
றுன்னுபரசமயநிலைதுகைத்திறுத்துப்புவியின்மிசை
மன்னுபுகழ்நிறுவுசபாபதிநாவலவன்மாதோ. (௬)

மற்றிவன்சொலேமசபாநாதமான்மியத்தின்வழி
யுற்றசிதம்பரசபாநாதபுராணத்தையொளி
பெற்றவுபகாரமுதற்பெருங்குணங்கள்பெரிதுடையோன்
வெற்றிவடிவேற்கரத்தோன்விளங்கருட்கோரிலக்கானோன். (௭)

தூயகுணக்குன்றமெனுஞ்சுப்பராயக்குரிசில்
பாயதவக்குன்றுதித்தபகலவன்சீரிடைக்கழியி
னாயபெருஞ்செல்வமுளானாறுமுகவேளென்ப[illegible]
னேயவெழிலெழுதாதவெழுத்தினியைத்திக[illegible] (௮)

இதுநமக்குப்பெரும்பயனுமிருமையுமென்றெணியதனைக்
கதுமெனப்பேரன்போடுகவின்கொளூவச்சிட்டளித்தான்
மதுநிகர்சீர்விழுப்புரத்துவாழ்ராமசாமியெனும்
விதுநிகரப்புலகலையான்விளங்குபெருந்தகைமையனே. (க)

---

இந்நூலாசிரியர்மாணாக்கர்

சிதம்பரம்

## அ. சோமசுந்தரமுதலியாரியற்றியது.

திருமகடலைவனருமறையவனெனன், திருவருந்தேடவுருவிறந்தொளியாய்த், தில்லைமாமன்றினல்லவர்காண, வளியொன்றுமையொடுவெளிநின்றருளி, மானநடம்புரிஞானநடராச, னருட்டிறநவிலுமைவகைமான்மியத், திருட்டிறந்துமிக்குமேமசபைநாதத், திருப்பெயர்படைத்தபரப்புறுமான்மியம், வளம்படத்தமிழினில்விளம்புவாயென்று, தில்லைவாழந்தணர்சொல்லிடமொழிபெயர்த், திருந்தமிழ்ப்புலவர்மருந்திதுவாமென, நற்சிதம்பரசபாநாதபுராணச், சொற்பெரும்பெயராற்றோன்றிடயாத்தான், மாணூர்பெருந்தனிக்கோணுசலமும், மாநீச்சுரந்தெறுகேதீச்சரமுந், தயங்கிருகண்ணெனத்தன்பாற்கொண்டு, வயங்கெழிலீழவடகோவைநகரான், பரம்புதண்டமிழிற்பரந்திடுநூலெலாம், வரம்புகண்டுணர்ந்தமதிஞர்சிகாமணி, காமர்சாறெய்வக்கயிலாயபரம்பரைத், தூய்மைசாறுறைசைச்சுப்பிரமணிய, தேசிகராயன்றிருவடித்தாமரை, யாசறத்தன்றலைக்கணியாப்புனைந்து, சைவசித்தாந்தத்தெய்வவமுதுண்டோ, னவஞ்சார்பரமதத்தவர்கோளறுத்துச், சிவஞ்சார்சைவத்திருநெறிவளர்ப்போன், வளங்கெழுமிலக்கணவிலக்கியவண்டமி, ழுளங்கொளத்தமியேற்குணர்த்துமாசிரியன், பசுபதிபரத்துவம்பகர்வடநூல்பல, கசிவுடன்றமிழ்வலோர்கணிப்பமொழிபெயர்த்தோன், சிவனடிபவரையவனெனத்தேறிப், பவமறவழிபடுந்தவநெறிநின்றோன், முட்டறுநூல்கள்மொழிபொருள்விரித்துக், கட்டுரைகூறுமதுகையிற்கதித்து, மேவுஞ்சபாபதிநாவலனென்ப, வத்தகுசிறப்புடைமெய்த்தகைநூலினைத், திருவீட்டைக்கழியிற்சிறந்தகாராளர்க், கொருவிளக்கெனவுதித்தொளிர்சுப்பராயவேள், மெய்த்தவத்தளித்தபுத்திரசிகாமணி, துறுமுநற்புகழ்சேரறுமுகத்தோன்ற, லச்சிறப்பதிப்பித்தளிப்பாயென்னீ, விச்சகம்புகழுமெழில்விழுப்புரத்துத், தாண்டவராயவேடந்தகுணலைய, ஞெண்டகையிராமசாமிவேளிர்பாற், பிரமனெழுத்திற்பிறங்கப், பரவுறவச்சிறப்பதிப்பித்தனனே.

---

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# சிதம்பரசபாநாதபுராணம்.

## காப்பு.

ஞானமிகவளரினஃறிணையவுயர்திணையாகுநவிலஞ்ஞான
வீனமிகவளரினுயர்திணையவஃறிணையாகுமென்றுதேற்றன்
மானவஃறிணைமேலுமாண்டவுயர்திணைகீழும்வடிவிற்காட்டித்
தேனமரும்பொழிற்றில்லைச்சிகரிவாழ்கற்பகத்தைவணக்கஞ்செய்வாம்.

வேறு.

கற்பகநாட்டும்மைவேற்கந்தவேடுணைவிண்ணோர்க்குக்
கற்பகநாட்டில்வாழ்வுகண்டவவிடுவசேனன்
கற்பகநாட்டியத்திற்காதலவெண்ணிற்றில்லைக்
கற்பகநாட்டின்றேகுஞ்சமன்வலிகடப்பிக்கும்மே.

## கடவுள்வாழ்த்து.

### சபாநாயகர்.

பொன்பூத்தமணிமன்றுளானந்தநடங்காணப்புகுவோர்க்கிந்தக்
கொன்பூத்தகுஞ்சிதமென்பாததரிசனத்தினேகூடுமுத்தி
மென்பூத்தபிறமுயற்சிவேண்டலெனுங்குறிவரதாபயத்தின்மேல
மன்பூத்துநடங்குனிக்கும்பெருவாழ்வைப்பணிந்தேத்திவாழ்வமன்றே.

### சிவகாமியம்மை.

நிறைந்திடும்பரனைந்தொழின்முறைநகுயிற்றநிகரிலாச்சிவமுதலாக
வறைந்திடுமேழுபேதமாய்மன்னியடைதரற்கேற்றிடத்தானு
முறைந்திடுசத்திமுன்னெழுவகையாயுயிரொடெப்புவனமுமளித்துச்
சிறந்தசிற்சபையினிருத்தசான்றாகித்திகழ்சிவகாமியைப்பணிவாம். (௨)

## தக்ஷிணாமூர்த்தி.

அனகாரணமுமறிதற்கரியு
மனவாசகநீங்கியமாணருண்மெய்ச்
சனகாதியர்தேறியசற்குருவாய்
முனமானிழன்மேவியைமுன்னிடுவாம். (௩)

## கற்பகவிநாயகர்.

கற்பகப்பிரா, னற்புதத்திருச்
சிற்பதம்வினைக், கிற்பழிக்குமே. (௪)

## வைரவக்கடவுள்.

இருந்துழியிருந்தேயிருநிலமுழுதுமிறைம்மகனுணைசெய்ம்முறையின்
விரிந்திடுமீசனிறைந்தசன்னிதியின்விதியுளியைந்தொழினடாத்த
வரந்தைதசெய்தண்டத்தலைவர்களங்கங்கடைந்தரசாணைசெய்ம்முறையிற்
பரந்தபேருலகந்தொறுமடைந்தீசன்பணிபுரிவடுகனைப்பணிவாம். (௫)

## அறுமுகக்கடவுள்.

தன்னிகரில்பெருங்கருணைத்தடங்கடலாஞ்சிவபிரான்றழற்கட்டோன்றிக்
கொன்னுனைகொள்வேற்படையாற்சூரபன்மனங்கமிருகூறுச்செய்து
துன்னுவிபுதரைவிண்ணங்குடியேற்றித்தோமின்மணம்புணர்ந்தவென்றிப்
பன்னிரண்டுதிருக்கரங்களுடையவறுமுகக்கடவுள்பாதம்போற்றி. (௬)

## திருநந்திதேவர்.

திருக்கயிலைமலையிலருட்கல்லாலநிழலிருந்துதேவதேவன்
பெருக்கமுடையாகமத்துட்பிறங்குமொளரவத்தெழுந்தபீடார்ஞானஞ்
சுருக்கமறப்போதிக்கமலைவுதீர்ந்தருளிமுதற்குருவாய்த்தோமி
லருட்குரியீர்க்கதனையளித்தருணந்திபெருமானுக்கடிமைசெய்வாம். (௭)

## அகத்தியமுனிவர்.

பரந்தபுகழ்வடமொழிக்குப்பாணினியமுதற்பலநூல்பண்ணுமாட்சி, விரிந்
தபுகழ்த்தமிழுக்கொருதான்வகுத்தவிலக்கணநூலேவிளக்கும்வாய்மை
நிரந்தபலவுருத்திரர்விண்ணவர்முனிவர்பணித்தபுவிநீங்கித்தென்பா
லிருந்தருசம[illegible]றிவுறுத்தருளுங்குறுமுனியையேத்திவாழ்வாம். (௮)

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

மண்பரவுசீகாழிக்கௌணியர்தங்குலவாழ்வைமறையோர்தேவை
விண்பரவுபெரியநாயகிஞானங்குழைத்தூட்டவிரும்பியுண்டு
பண்பரவுதமிழ்வேதம்பாடியவெம்பெருமானைப்பரமஞான
கண்பருளியடியாரையாண்டருள்வள்ளலைப்பணிந்துகவிவுதீர்வாம். (௯)

## திருநாவுக்கரசுநாயனார்.

பாயுடுத்துத்தலைமயிரைப்பறித்தெறிந்துநின்றுண்ணுமமணர்பாழி
போயடுத்தங்கவர்புரிந்தவஞ்சமெலாஞ்சிவானந்தநிறைந்துபொங்கி
வாயிடத்துவருஞானப்பதிகத்தாலறுத்தருள்வாகீசர்சீர்த்தி
நோயெடுத்தகொடும்பிறவிப்பிணியொழியவெந்நாளுநுவல்வாமன்றே. ()

## சுந்தரமூர்த்திநாயனார்.

திருந்துபுகழ்த்தமிழ்நாடுசெய்தபெருந்தவத்தினுற்றிகழுமேன்மை, பொருந்
தியுயர்நாவலூர்ச்சிவமறையோர்குலம்விளங்கப்போந்துவான், நிரந்தபொ
ழிறிகழ்வெண்ணெய்ப்பரஞ்சோதியருள்வாரிநிறையவுண்டெம், மரந்தை
கெடத்திருத்தொண்டத்தொகைவகுத்தபெருமானுக்கன்புசெய்வாம். (௧௧)

## மாணிக்கவாசகசுவாமிகள்.

வன்றொடையாற்பொருள்விரவிமயங்கவுயர்நால்வேதம்வகுத்தானீச
னென்றருளாலவற்றைவடித்தானந்தவெள்ளமிருந்தேறயாரு, மன்றுடை
யபெருமானேபரம்பொருளென்றுணர்ந்துயமாமணிநேர்வாக்கின், மென்
றொடையாற்றமிழ்வேதம்வாய்மலர்ந்தவித்தகர்தாள்விரும்பிவாழ்வாம். ()

## தில்லைவாழந்தணர்.

எல்லைகாண்டற்கரியதியாகேசப்பிரான்சுருதியியம்புவாயாற்
றில்லைவாழந்தணர்தமடியாற்குமடியேனென்றெடுத்தசீரார்
நல்லவேதாகமங்கள்கரைகண்டோர்நாமிவரிலொருவரொன்று
சொல்லமாநடராசற்பெறுமூவாயிரமுனிவர்த்தொழுதுவாழ்வாம். (௧௩)

## அறுபத்துமூவர்.

உறுமாலகன்றுப்புறமொதுக்கியுலப்பிலருளேர்பெருக்கியொரு
சிறுமானேந்திசேவடிக்கீழ்ச்சென்றங்கடங்கிநின்றுமிக
விறுமாந்தின்பப்பெருவெள்ளமிடையறாமேநுகர்ந்துவாழ
முறுபான்மும்மைநாயன்மாரடிப்போதுளத்தேயலர்விப்பாம். (௧௪)

சேக்கிழார்நாயனார்.

ஞாலமலைகடறன்னிற்பெரியதெதுவெனவெடுத்துஞாலமாள்செங்
கோலரசனனபாயன்வினவியமுத்திறக்குறிப்பைக்குறிப்பினோர்ந்து
சாலவுயர்திருக்குறண்மூன்றிறையாகவெழுதியவனரசுதாங்கி
வாலறிவாற்றிருத்தொண்டர்புகழ்விரித்தசேக்கிழார்மலர்த்தாள்போற்றி.ெ

மெய்கண்டசிவாசாரியர்.

மைகண்டர்வகுத்துரைத்தசிவஞானபோதமெனும்வடநூறன்னைக்
கைக்கண்டுதமிழுலகமுய்யமொழிபெயர்த்தருளிக்கலைநூல்காட்டும்
பொய்கண்டவுளத்தினர்காணுத*புனிதாத்துவிதப்பொலிவுகாட்டு
மெய்கண்டதேவனடியகந்தழீஇப்பணிந்தேத்திவினையைவெல்வாம். (கசு)

அருணந்திசிவாசாரியர்.

தவமாருந்திருத்துறையூர்ச்சார்ந்தருளிப்பொய்யினைமெய்த்
தவமாகக்கொண்டுழன்முப்புறத்தினருஞ்சாய்ந்திரியச்
சிவஞானபோதநூறமிழுலகந்தெளிந்துய்யச்
சிவஞானசித்தியருடேசிகனைப்பணிகுவாம். (கஎ)

மறைஞானசம்பந்தசிவாசாரியர்.

முரண்டரும்புறச்சமயநூன்முழுப்பொயென்றகற்றி
யரண்டருஞ்சிவஞானநூல்கேட்டினிதாய்ந்து
தெருண்டுநிட்டைசேர்கடந்தையூர்ச்சம்பந்ததேவ
னிரண்டுபோதமுமுடிக்கணிந்திடுக்கண்வேரறுப்பாம். (கஅ)

உமாபதிசிவாசாரியர்.

முட்டுமார்க்கமாங்களைகளையருளினன்முரணிக்
கட்டருட்புடைநூல்சிவந்திகழ்தரக்கண்டு
நிட்டைமேவிவீற்றிருந்தருளுமாபதிநிமலன்
மட்டுருவடிக்கமலமெண்மனத்தடமலரும். (கக)

ஏனைநாயன்மார்.

ஈனமாகியபுறப்பகையகப்பகையெறிந்து
ஞானமாகியசித்தாந்தநன்னெறிதேறி
மோனவாழ்வினிலமர்ந்துவீற்றிருந்தருண்முதன்மை
யேனைநாயன்மார்தமையுமன்பணிந்துவாழ்த்தெடுப்பாம். (உ0)

* புனிதாத்துவிதமெனினுஞ் சுத்தாத்துவிதமெனினுமொக்கும்.

## நமச்சிவாயதேசிகர்முதலியகுரவர்.

தன்னிகரில்கைலாயபரம்பரையிற்சிவஞானபோதந்தந்த
மன்னுபுகழ்மெய்கண்டான்சந்ததிக்கோர்பானுவாய்வயங்கிஞானந்
துன்னிவளர்துறைசைநமச்சிவாயகுருவுடனவன்மெய்த்தூய்மைசான்ற
நன்னர்வழிவந்தெமையாள்குரவர்பலரையும்பழிச்சிநலிவுதீர்வாம். (௨௧)

## திராவிடமாபாடியகாரர்.

குறியமுனியருளியமெய்வரத்தினலவதரித்துக்கோதின்ஞானத்
துறைசைநமச்சிவாயகுருவருட்கடலும்வடமொழிதென்மொழிப்பேர்த்தூய
நிறைகடலுமுண்டுபுனிதாத்துவிதசித்தாந்தநிலவப்பூமேன்
மறைமொழிமெய்ச்சிவஞானபாடியஞ்செந்தமிழ்வகுத்தயோகிவாழி. ()

## அவையடக்கம்.

அருள்பெருக்குமேகசபாநாதமான்மியமதனையாய்ந்துநற்
பொருள்பெருக்குமுயர்தமிழிற்புராணமுறைகூறுகெனப்புலமைசான்ற
தெருள்பெருக்குநடராசன்றிருவடிக்கன்புடைமறையோர்செப்புமாற்றா
லொருவழிப்பட்டெழுமாசைநனிதூண்டத்தமியேனீதுரைக்கலுற்றேன்.

வேல்கொண்டகருந்தடங்கட்சிவகாமசுந்தரியைவிளங்கவோர்தன்
பால்கொண்டோர்சபைவாழுநடராசப்பெருமான்றன்பரந்தசீர்த்தி
மால்கொண்டமனத்தினேன்சிற்றுணர்வுகொடியாக்கவலித்தலோர்புன்
னூல்கொண்டுமதக்களிற்றைப்பிணிக்கவலியில்லொருவனோக்கல்போலும்

இலக்கணமில்லாதியலும்போலிமரூஉவென்பவியல்வழக்காய்மாணப்
புலக்கணமாடருதொல்காப்பியர்முதலோரொடுத்தாள்வரதுபோற்புந்தி
விலக்குவிதியறியாதேன்விளம்புறுபாவினையுமிகமேற்கொண்டான்றோர்
நலக்குவரொன்றுளங்கொண்டுநடராசன்புகழ்கூறநயந்தேன்மன்னோ. (௨௫)

கழிமுடைப்புன்புலையுடலங்கரிசில்சிவஞானமுடையவரைமேவின்
முழுமுதற்பண்ணவன்வடிவேபோன்றுவழிபடப்பெறூஉமுந்நீர்வைப்பிற்
பழியுடைப்புன்புலைநாயேன்பிதற்றுரையுநடராசன்பரந்தசீர்த்தி
தழுவிடப்பெற்றிடலினலத்தமிழ்போலப்பாராட்டத்தக்கவாமே. (௨௬)

வரஞானத்துயர்தில்லைவாழ்தருமந்தணர்விதிசேர்வழிபாடொப்பத்
திருநாளைப்போவார்தம்புன்றொண்டுமகிழ்ந்துகொளுந்தில்லைவாணர்க்
கருள்சாலப்பெரியோர்தங்காப்பியநூல்போலறிவுசிறிதுமில்லேன்
புரைசாலப்பொதிபாவுங்கொண்டருடல்வழக்காகும்புவியின்மீதே. (௨௭)

## சிறப்புப்பாயிரம்.

இருந்துதியுற்றௌிர்வடநூலேமசபாநாதமான்மியத்தையாணர்
திருந்துசிதம்பரசபாநாதபுராணப்பேரிற்றமிழாற்செய்தான்
பெருந்துறைசைச்சிவஞானயோகிகள்பொன்னடிக்கமலமுளத்திற்பேணி
யருந்தகைநற்கலைகடெளிசபாபதிநாவலன்மாண்பாரறிஞர்கோனே.

### கடவுள்வாழ்த்து

முற்றிற்று.

# திருநாட்டுப்படலம்.

கொன்றையந்தொடைமிலைச்சியசடைமுடிக்கூத்த
ரொன்றுபேரருட்பிராட்டியொடுலகெலாமுய்ய
நின்றவம்பலத்தில்லையையகந்தழீஇநீடி
மன்றவோங்குறுபொன்னிநாட்டணிநலம்வகுப்பாம். (க)

நலங்கொள்வான்முகிற்குலங்கலைநிறைவுடைநல்லோர்
குலங்கொள்வாலுணர்வெனநனிவெளிறிவிண்குலாய்ப்போ
யிலங்குமாழிநீர்குழிதரக்குறைத்தறிவில்லோர்
கலங்குநெஞ்செனவுறவிருண்டெழுந்தவிண்கடுகி. (உ)

எங்கணாயகனெரிநிறமேனியுமிமயத்
துங்கநாயகிகருநிறமேனியுந்தொகுப்
வங்கொர்பேருருவமைந்தெனமின்னுடனகல்வா
னெங்கணும்பரந்தேகருமுகில்களுலவினவே. (௩)

மல்லன்ஞாலத்தினுயிரொலாம்விழியொளிமாளத்
தொல்லைவான்சுடர்மறைத்துமற்றவையொளிதுவன்ற
வொல்லைமின்னியும்விண்ணெலாம்பொதிந்துயிர்களுக்குப்
பல்லகேவலசகலங்கள்பண்ணினமுகிலே. (௪)

தொல்லைவான்முகிறடித்தெனச்சூழொளித்தோற்ற
மொல்லைவல்லிருளணைதரவுடன்மறைந்தொடுங்க
னல்லஃதவுத்தெய்தியசிவனருணைவைசே
ரல்லதீவினைத்தொடர்ச்சியினுடன்மறைந்தனைய. (௫)

வானகங்களுமெண்டிசாமுகங்களும்வெளவித்
தானெருங்கராசாண்முகிறழற்பகைதணந்தே
யேனைமாநிலத்திறுத்தல்கண்டெரிசினந்தழுவி
மானவில்வளைத்தனுகரணத்தொனிவழங்கி. (௬)

படித்தலம்வெடிபடப்பஃறலையுடைச்சேடன்
றுடித்தயர்ந்திடமாந்தர்கடுணைக்கையாற்செவிகண்
மடித்தழுங்கிடப்படபடவொலிசெய்துவானத்
திடித்தமர்த்தொழின்முயன்றுநீரப்பெனவிணக்கி. (௭)

விண்மிதித்துயர்சையமாம்வியன்மலையரணை
யண்மிமற்றதைமுற்றுபொதிந்துநின்றங்கேழ்
வெண்மணித்தொகையுதிர்தலினுலிகள்விரவத்
தண்மழைக்கணைதடங்குவடுடைதரச்சொரிந்து. (௮)

வரைவளாகமுமாலதிபொலிதருமாட்சித்
தரைவளாகமுந்தண்டலைவிண்டொடுமருதத்
*துரைவளாகமுந்துளங்கெரியரசுவீற்றிருக்கும்
பரைவளாகமும்வாரியின்மயமெனப்பண்ணி. (௯)

வெம்மையாலுயிர்வெதுப்புறுங்கோடையாந்தூசி
தம்மைமுற்றவுமுருக்கிவெந்தழல்கரந்தொளிப்பச்
சும்மைமாமுரசறைந்தெனத்தொனிசெய்துசலம்போய்ச்
செம்மைமேவிவெண்ணிறம்படைத்தனநனிதிகழ்ந்தே. (௧௦)

மிக்கிருண்டுறவிளங்கியுமேதகமீண்டுச்
செக்கர்மேவியுந்திசையெலாந்திகழ்தரவெளுத்துந்
தொக்கமூவர்முத்தொழிலையும்புரிதருதொடர்பான்
முக்குணங்களுந்தம்வயிற்காட்டினமுகிலே. (௧௧)

முடிவிராவியமலையிடமெங்கணுமுகிழ்த்தே
கடிவிராவியகாந்தள்கள்போதுசெய்காட்சி
நெடியமால்வரைகுளிர்பொருதழுங்கிநின்முகிலுக்
கடியனேன்பொருட்டொழிகெனவங்கைகூப்பியபோன்ம. (௧௨)

வேலையிற்படுதுகிரினைவெண்மணியோடு
சாலவெள்ளிவானீரொடுசொரிந்திடத்தடவு
ஞாலமெங்கணுங்கிடந்தவிர்ந்தெனநளிபசும்புற்
கோலநுண்டுளிகோபங்கணிறைந்தொளிசெயுமே. (௧௩)

---

* துரை,—மிகுதிபாடு.

வேறு.

மழைப்பெயறவிர்ந்துமாருதத்தசைந்துமரக்கிளையாவுமன்புரியுந்
தளிப்பெயறன்ஞ்ன்மாநிலத்துயிர்கடணந்துதுன்பணைந்திலவின்ப
முழுத்துயர்புரியும்புறப்பகையொழிந்துமுரணகந்தழுவிவாழினத்தாற்
களிப்பொருசிறிதுமின்றியெஞ்ஞான்றுங்கவலையுண்மூழ்குநர்கடுப்ப. (கச)

நிலத்திருமடந்தைதகதித்தெழுமுலையினிலவுறவணிந்திடுவயிரக், கலத்தினை
விழையக்குவடெலாம்பொதிந்துகடுத்துவெவ்வேறிழியருவி, தலத்தினி
லொன்றாய்ப்பொன்னிமாநதியின்வழிப்படல்சாற்றுநீண்மறைகள், புலத்
துறைபலவாய்விரிந்துபநிடதப்பொருளொடொன்றாயுறல்போலும். (கரு)

அலையுடைப்புனனாட்டொருபுகழ்ச்சோழரடுபடையதிகன்வாழரண
மலையிடத்துள்ளபொருள்பலகவர்ந்துவழிக்கொளன்மானவான்றோயுஞ்
சிலைமுடிப்பிறங்கியிழிதருமருவித்திரளெலாங்கல்லெனக்கறங்கி
நிலையியற்பொருளுமுலவியற்பொருளும்வாருபுநெறிக்கொளுநிலத்தே.

இருவினைக்கீடாப்பிறந்திறந்துழலுமிமையவர்தமைமதிமயக்காற்
பரமெனக்கொண்டுசெயும்வழிபாடவ்வனுதியம்பகவனுமீசன்
சரணபங்கயத்தேவந்தொருவந்தஞ்சார்ந்திடல்போலுமாற்சையப்
பெருவரைப்பெங்கும்வழிதருஞ்சலிலங்காவிரிப்பெயர்தருபிறக்கம். (கஎ)

போகமேயுதவிப்புலப்பகைவளர்த்துப்பொருவிலாஞானத்தைத்தடுக்கு
நாகநாடிதற்குத்துணையெனவமர்தனலம்படாதெனவெணிக்கங்கை
மாகநின்றிழிந்திப்புண்ணியபூமியுறுதலைமானவான்காறும்
போகியசிமயச்சிகரநின்றருவியிழிந்துகாவிரிவயிற்புகுமே. (கஅ)

வேறு.

கைம்மாறின்றியுலகளிக்குங்கடவுட்கொண்டற்பெரியவேந்
திம்மாநிலத்தேயுயர்சையமிருந்துவிளங்குமுடிசூட்டித்
தெம்மாள்வீழ்த்துப்புனனாட்டைத்திருத்தியாள்கவெனவிடுப்ப
வம்மாபொன்னிப்பேரியாறடுக்கனீங்கிவழிக்கொண்டு. (ககூ)

தேறன்மடுத்துத்தேக்கெறிந்துதிகழுமாரமணிபூண்டு
நாறுவேங்கைசண்பகவீயெனும்பொற்றூசுநலக்கவுடீஇ
மாறிலருப்புப்பகழிமதமாக்கோட்டொருவன்சிலையெடுத்துப்
பாறுகொடிகளபந்தராய்நிழற்றவையம்படர்ந்து. (உ0)

அத்தியாதிமாத்தொகுதியணிசெய்திரண்டுபால்போகத்
தத்துதிரைவான்பரிபூண்டதடவுவையமூர்ந்தொரீஇக்
கொத்தகொடிகள்பலதுவன்றக்கொண்டுகுரைப்பிற்பறையறைந்து
முத்தமூரற்குறமின்னார்படையாத்துவன்றமுடுகியே. (உக)

வேறு.

குறிச்சிபுகுந்துகுரங்குதினைத்தா
ளறுத்துடன்வாரியிதண்களலைத்துச்
செறுத்தெதிர்வேடர்கள்சிந்தினரோட
மறத்துடன்மண்டுபுவெட்சிமலைந்து. (உஉ)

கானவர்வாழ்குடியிற்கடுகிச்சென்
றியானையெயிற்றொடிலங்குபுலிப்பன்
மானவடிக்கணைவார்சிலைவேன்முன்
னானதிறப்பொருள்வௌவியகன்று. (உங)

ஆயர்தமுல்லையடைந்தவண்வாழும்
பாயநிரைத்தொகைபற்றியகத்த
காய்தயிராதியகௌவியமார்ந்தி
யேய்தருபல்வளமும்மிறைகொண்டு. (உச)

அண்டர்கரந்தையழிந்திடவென்றி
கொண்டவர்பாடிபுகுந்துகுலாவி
மண்டியபல்வளம்வாரிவிளங்கு
மெண்டிசைபோற்றிடவஞ்சியையெய்தி. (உரு)

வேறு.

வழியிடைச்செல்வோர்க்கிட்டிப்பதைப்புறவருத்திநாளும்
பழிமலைந்தீட்டிவைத்தபல்வகைவளமுமாங்கட்
குழுமியமறவர்நோவக்கொள்ளைகொண்டழுமாகொண்ட
வழுதிடப்போமென்வாய்மைவிளக்கியாண்டகன்றுபோகி. (உசு)

மருதவைப்பெய்திமள்ளர்வயின்வயினீண்டியாற்றுங்
கரைகளையிடித்துநொச்சிகட்டழித்தவர்மிலைந்த
விரையுறுநொச்சிவாடவியத்தகுதும்பைசூடித்
தெரிவையர்வணங்கிநல்குந்திருமிகக்கொண்டுலாவி. (உஎ)

செழுவயனீங்கிநெய்தலுறீஇயவணுமணர்செய்த
கழிவளம்யாவுமன்னோர்கரம்விதிர்த்தரற்றவீட்டிக்
கெழுவளம்பலகொண்டாழிகிடைத்தெதிரடிவணங்கத்
தழுவியாதரமலிந்துகலந்துடன்சார்ந்ததாலோ. (உஅ)

புண்ணியப்புனலுட்டுள்ளபொருவிலாக்குறிஞ்சிமுன்னு
வெண்ணிடைலங்கள்யாவுமிவ்வகைகுறும்பெறிந்து
திண்ணிதினடிப்படுத்துத்திருந்துறச்செங்கோலோச்சித்
தண்ணளிமிகுந்தெஞ்ஞான்றுஞ்சராசரமோம்பும்பொன்னி. (உக)

திட்பமார்ந்திலங்குஞானச்செல்வர்கடங்கைக்கொண்ட
தெட்பிளவளவைத்தேனும்பயன்பெரிதீதலேய்ப்பப்
பெட்புறக்கவர்ந்துகொண்டபொருளினும்பிறங்கமீட்டு
நட்புறப்பதின்மடங்குபெருவளநல்கும்பொன்னி. (௩0)

திருப்பயில்சங்கமேவிச்செம்பொனின்வண்ணமாகிப்
பருப்பதமுலவியாடல்பயின்றுபாரிடம்வழுத்த
விருப்பொடுமேவிவேட்டவேட்டவாறுதவலாலே
பொருப்புறைகுமரவேளைப்பரமனைப்பொருவும்பொன்னி. (௩க)

அறந்தனைவளர்க்குநீராலரிறபவுயிர்க்குச்சுத்தி
சிறந்தருள்செய்புஞ்சீராற்சிமயத்தில்வளருந்தேசா
லிறந்திடல்பிறத்தல்கூடாவிறையிடம்பிரியாமாண்பாற்
பிறந்திடாவாழ்வுநல்கும்பிராட்டியையமானும்பொன்னி. (௩உ)

நான்முகம்பொருந்திநன்னீர்மிகுந்தஞ்சமேவிநாடார்
மேன்முறையொழுக்கமோம்பியங்குசந்தாங்கிவீழுர்
மான்மதந்தழுவிநாளும்விதிபுரிமாட்சியாலே
தேன்மலிகமலத்தேவிற்கணேசனிற்றிகழும்பொன்னி. (௩௩)

வாரணமேற்கொள்கின்றமாட்சியால்வானோரோடு
தாரணிபோற்றநின்றதகுதியால்வரத்திளைங்கிக்
காரணவரைகடந்துபசுத்துயர்களையுநீரா
ஞரணன்வலாரிபோலுநன்னலமன்னும்பொன்னி. (௩௪)

உயர்ந்தநால்வருணத்தாருமொழிந்துளோர்தாமுந்தொன்னூ
னயந்தருணெறியிற்செல்லச்சிறந்ததோர்துணையாய்நன்கு
பயந்திடுமொழுக்கம்பூண்டபரிசினுற்பலவாசாரம்
வியந்திடவோம்புநீதிமுனிவரைவிழையும்பொன்னி. (௩௫)

தென்றிசையிடமுமேனைவடதிசை -முஞ்சேர்த்தி
துன்றுபல்சிவாலயங்களகந்தழீஇச்சுலவுநீரான்
மன்றமர்பெருமான்றன்னைமனததளியுள்ளேக...
நன்றுறவழிபாடாற்றுஞானிகட்பொருவும்பொன்னி. (௩௬)

அளிமிகவுடையோர்தங்களாக்கைநோவுறவும்யார்க்குங்
களிசெயவுரியரென்றகட்டுரைதேற்றிக்கார்க
ணளிபெயலொழிந்தவேனிற்பருவத்துநாட்டோருண்ணத்
தெளிபுனல்கடுகீண்டுநல்கிடுஞ்செல்வப்பொன்னி. (௩௭)

தேவருமுனிவர்தாமுந்திருந்துமானுடருமற்றை
யாவரும்வேட்டசித்தியெய்திவீடுறற்பொருட்டான்
மூவர்தமுதல்வனெண்ணிமுந்தைநாளளித்தபொன்னிக்
காவிரிமகிமையெம்மாற்கரைந்திடற்பாலதாமோ. (௩௮)

வேறு.

இனநாடியம்புமேன்மைபலவியைந்தபொன்னியாறுலகு
கனனுடென்னும்படிபொறிந்தகடியகோடைதபமுருக்கிப்
புனனுடென்றுதன்பெயராலாருமேன்மைபூண்டறிஞர்
மனநாடுவென்றிபலகொண்டுவயங்குநாடுசோணாடு. (௩௯)

இறைநூலுறுதிப்பொருள்களெனவெடுத்துமொழியுமாண்புடைய
வறமேபொருளேயின்பமேயரியவீடேயெனுநான்கு
முறுமாறெண்ணிமுயல்வாருக்குறையுளாகிப்பலவளமுங்
குறையாதென்றுமிகுந்தோங்கிக்குலவுநாடுசோணாடு. (௪0)

வானோர்க்கிறைவனாகியுயர்மகவான்மனையாளுடன்றுறக்க
மேனாட்டணந்துவந்திருந்துவிரும்புவாழ்வுபெறுநாடும்
பானாக்கெண்ணில்படைத்தபுகழ்ப்பாந்தட்கிறைவன்பாதலநீத்
தானாப்பெருவாழ்வடைவதனுக்கணைந்தநாடுஞ்சோணாடு. (௪௧)

மனுவென்றுரைக்குமொருவேந்தன்வழியேதோன்றிப்பலசோழர்
முனைவென்றரசுவீற்றிருந்துமுழுமாநிலமுமனுநீதி
னனிநன்றோங்கச்சைவநெறிநன்குவளர்த்துநடராச
வனகன்கருணைக்கடன்மூழ்கற்கமைந்தநாடுசோணாடு. (௪௨)

ஒருமூவுலகுந்திருநீற்றினொளியேவிளங்கவோங்குதமிழ்
பெருநீர்வரைப்பிலெம்மொழிக்குமரசாய்ச்சிறந்துபெரிதோங்குந்
திருஞானப்பேரருளமுதந்தெவிட்டவுண்டுதேவாரந்
தருமாளுடைமுத்தமிழ்விரகர்சார்ந்தநாடுசோணாடு. (௪௩)

கலைநீடுணர்வாற்கேள்வியாற்கடத்தற்கரியபலநூற்குந்
தலைநூல்வேதாகமமுழுதுஞ்சடங்கந்தாமும்பிறகலையு
மலைநீர்புகுதாதுணர்ந்துரைக்குமறிவாற்றமக்குநிகரிலருட்
புலவோரென்றுநீங்காதேவாழுநாடுபுனனாடு. (௪௪)

முந்நீரடையுமாறெல்லாமூழ்கியருந்திநலந்தேர்ந்த
நன்னாவலர்கள்காவிரியினலமுஞ்சுவையுமுலகிலுள
வெந்நீர்தமக்குமிலாமையாலிதுவேபுனலென்பதுதோன்றச்
சொன்னார்போலுஞ்சோணாட்டுக்கொருபேர்புனனாடெனத்தொனியால்.

வேறு.

செப்புபுகழாரியத்தின்சிறப்பெழுத்துப்பலதிரிந்து
தப்பில்வடமொழியாகித்தன்னொடுறவாடவருந்
துப்புடையதமிழென்றுந்துரிசொரீஇயரசிருக்கு
மப்பொலிவிற்சோணாடுசெந்தமிழ்நாடாகுமால். (சசு)

வடமொழிக்குந்தென்மொழிக்கும்பொதுவாகவழங்குதலிற்
றிடமுடையளகரத்தைக்கடிந்தொருதென்சிறப்பெழுத்தை
யிடமுடையதன்பெயருளிசைவித்துத்தமிழ்தன்கட்
கடல்வரைப்பிற்சிறந்தோங்கல்காட்டுமென்றபுனனாடு. (சஎ)

பூவிரியுநறுஞ்சாரற்பொதியமலைக்குறியமுனி
நாவிருந்துவருந்தமிழைநனிபயிறலானன்றே
தேவிரிசெந்தமிழாண்டுச்செவிமடுக்கும்பொருட்டந்தக்
காவிரியுஞ்சோணாட்டைநீங்காதுகலந்துறையும். (சஅ)

வேறு.

மலையெங்கும்வெறியாட்டுமதிலெங்கும்விழவாட்டு
முலையெங்குநிரையாட்டுமுரம்பெங்கும்பரையாட்டு
வலையெங்குஞ்சுறவாட்டுவயலெங்கும்பலவாட்டுக்
குலையெங்குஞ்சேல்காட்டுங்குலவுபுகழ்நீர்நாட்டு. (சகூ)

கரையெங்குங்கருங்குவளைகடலெங்குநெருங்குவளை
வரையெங்குமுற்பலங்கண்மரமெங்குநற்பலங்க
டரையெங்கும்பூமரங்கள்சாரெங்குங்காமரங்கள்
புரையெங்குஞ்சொலற்கரியபொங்குபுகழ்ப்புனனாட்டு. (ரு0)

ஊரெல்லாஞ்சிவாலயங்களுரையெல்லாந்தமிழ்வேத
நீரெல்லாஞ்சிவதீர்த்தநெறியெல்லாஞ்சைவநெறி
பேரெல்லாஞ்சிவநாமம்பீடெல்லாஞ்சிவனடிமை
யேரெல்லாஞ்சிவவேடஞ்சோணாட்டுக்கிணையாதோ. (ருக)

நிறைந்தபுகழ்ப்புனனாட்டுநீடுவரைதிகழ்குறிஞ்சி
யுறைந்தசுரங்கெழுமுல்லையவிர்பசலைவயன்மருத
முறைந்தகழிநெய்தலெனவுரைக்குமொருநானிலத்துஞ்
சிறந்ததிணைவளமைந்துஞ்சிறிதறிந்தபடிசொல்வாம். (ருஉ)

உறுபயனைத்தருபொருவிறவவினையையுளத்தகற்றிச்
சிறுபயனைத்தருவேள்விசெய்துவக்குநீரர்களி
னறியவகில்சந்தனத்தூதநாவேழுக்குணவாக்கிப்
பொறியில்வனசரர்புனத்துப்புன்பயிர்செய்துவப்பரால். (ருங)

புலந்திருந்துநெறியெண்ணிப்பொதுளுறுபலசிலையொப்ப
வலந்திருந்துமாமணிகளரித்தெறியுமாகுலவர்
பலந்திருந்துபன்மணியும்பயனில்வறுங்கல்லொப்ப
நலந்திருந்தவெடுத்தெறியுநாவரசைவிழைவரால். (ருச)

அணிதிகழுங்கொடிவள்ளியனையவொளிர்பலசாலைக்
கணிதிகழுமலர்களுலிக்கருவரையின்புறநிற்றல்
பணிதிகழுமடக்குறவர்பாவைமதகரியஞ்சி
மணியுறழ்திண்புயமருவமுருகனிலையுதன்மானும். (ருரு)

புனங்காவல்கொண்டுறையுங்குறமினூர்புள்ளோப்பப்
பினும்பூவைகிளிமகிழ்ந்துபெயர்ந்துமிகவனைதோற்ற
முனங்கூடுநோய்தீரமருந்துண்ணமுன்னையினு
மனுங்காகமலிநோய்களடைகின்றநெறிமானும். (ருசு)

வேறு.

கோகிலங்கிளிமென்பூவைகொடியவேட்கின்மென்றேகொல்
பாகுலவின்குரற்குப்பகையென்றுகொல்லோதேற்று
மாகுலவல்லியன்னகுறமினூர்கவண்கைவாங்கி
யாகுலமவைகொண்டோடவடிபெயர்த்தோச்சுவாரால். (ருஎ)

கயல்விழிக்குறமினூர்கள்கதிர்ப்பொருட்டணையாநிற்குங்
குயின்முதற்பறவையோப்புங்கொள்கையரோனுந்தங்க
ளயிலுடைப்பெருமாற்கூர்தியாமுறைநோக்கிநாளு
மயிலினைக்கடியார்காணிற்றினைகடேய்வணக்கஞ்செய்வார். (ருஅ)

சிறுகுடிக்குறவரானோர்தினைப்புனத்துலவும்போழ்து
மறைவினிற்கிடந்தவள்ளிமாமுதலெடுத்துக்காட்டிப்
பெறுவினைப்பகுதியுந்தவேட்டமேற்பெயர்வார்தங்கட்
கிறைவியர்ப்புணர்த்துநீர்மையிற்றெனக்குறிஞ்சிதேற்றும். (ருகூ)

கறையடித்தொகுதிசீயங்கரடிபாய்மாவேயாதி
மறுகிடப்போகிவேட்டம்வருத்திடுமறத்தரேனு
மறுமுகப்பெருமான்றேவிக்காய்முறைநோக்கிநாளு
மறியினுக்குறுகண்செய்யார்வயச்சிலைவேடர்மன்னோ. (சுo)

ஒருதனிச்சுடர்வேலண்ணற்குயிரெனச்சிறந்தவாட்கட்
டிருநுதற்றேவிமாரைச்சிறப்புடனளித்தமேன்மைப்
பெருமிடற்கடவுண்மேனிபிறக்குவவென்றேயங்கட்
கருமுகிற்குலங்கடம்மைக்காண்டொறுமகவுமஞ்ஞை. (௬௧)

பாசடைபொதுளிமேற்செல்பராரைநீள்சினைவருக்கை
தேசுடைக்கனிகடேக்கிவிண்ணுறீஇத்திகழுங்காட்சி
வாசநீர்தனக்குநல்குநன்றியைநினைந்துவானுக்
காசையிற்கொடுக்கச்செம்பொற்கிழியெடுத்தணைதல்போலும். (௬௨)

தாக்கணங்கமர்ந்தெந்நாளுந்தங்குபைம்புனத்திற்போகித்
தூக்கணங்குரீஇயினங்கள்கதிர்கொய்துதொகுபல்கோட்டின்
மேக்கணங்குடம்பைசேர்தல்வேட்டதொன்றெய்திச்சித்த
மாக்கணங்காயநாடியடைதலைமானுமன்றே. (௬௩)

சேவினம்பரியிலேறுந்தினைப்பகையாகும்வேங்கை
தாவியோர்சரிப்புறத்தைத்தடவிடுமெகினமெல்லா
மேவிமுற்குளத்தமேலுறீஇயாண்கைளெல்லாம்
பாவியோர்தாகிதன்னைப்புணர்ந்துமேம்படுவவங்கண். (௬௪)

வேறு.

வானைமுட்டிடுசெண்பகவியன்சினைவதியுங்
கூனல்வானரமாரலைக்கனியெனக்குறித்து
மேனிமிர்ந்துவாய்வைத்ததுகொளுந்திடவிதிர்ப்புற்
றூனநீங்கிடவொய்யெனத்தேத்திரூலுண்ணும். (௬௫)

வேறு.

பரதனம்விரும்பாவாழ்க்கையடியவர்பழங்கண்டீர்க்கும்
விரதனம்பிகையொடென்றும்விருப்பொடுவீற்றிருக்கு
மரதனகிரியேயன்றியறுமுகச்சாமிமேய
வரதவேரகமுந்தன்கணுடையதுவளக்குறிஞ்சி. (௬௬)

திருத்தகுமேருவென்னுந்திண்சிலைக்கூரையெம்மா
னருத்தியொடென்றுமேவியமர்சிராப்பள்ளிதானும்
விரிச்சிடற்கரியவீங்கோய்வியன்பெரும்பறம்புந்தன்க
ணிருத்தியொப்பெறியுமம்மவெழில்சூழ்தருகுறிஞ்சி. (௬௭)

கைவரைதிரியுஞ்சாரற்கருவரையோடுகோரை
மெய்வரைசெய்யவொண்ணுவியத்தகுகாட்சித்தாகி
யைவரைவென்றோர்தேறுமறுமுகச்செவ்வேண்மேவு
மைவரையுலகமேன்மைவகுத்திடவல்லார்யாரே. (௬௮)

வே று.

மன்னுதன்னிலங்காத்திடமடிவிலாணையினாற்
கன்னிதன்வயிற்காளிகள்பலப்பலகண்டு
துன்னவெங்கணுநிறுத்தியாங்கெரிபடுசூழற்
பன்னெடுங்குரவளித்திடுபாவைகள்பயிலும். (௬௯)

ஈட்டுபேரொழிலரம்பையரந்தரத்திழிந்து
நாட்டியத்திறம்விந்தையைக்காட்டிடுநயம்போல்
வீட்டிருந்திறன்மாருதமலைத்திடவிமலை
கோட்டமுன்றினிலாடுபெகுரவருள்பாவை. (௭௦)

குரவமாட்டிடுபாவைசெய்கூத்தினைப்பாராப்
பரிசிலாகநல்லிரணியம்பலவழங்குதலி
னுரைபெறுந்திறமில்லவர்கல்வியையொப்ப
விளையில்பன்மலருழ்த்திடும்வியன்சினைக்கோங்கு. (௭௧)

நெருங்குபாடலநீண்மலர்தூற்றிடநிரந்த
முருங்கைவெண்பொரிசொரிந்திடமுதிர்சினையிருப்பை
யொருங்குமுத்துகளுதிர்த்திடவோமையொழிந்தின்
மருங்கெலாநிழல்பரப்பிடவைகிடும்பாலை. (௭௨)

மாரிநாளெலாமகங்குளிர்ந்தவிழுநீள்வரகும்
யாரும்வேண்டுபல்வளங்களுமீத்தறமிருக்குங்
கூரும்வேனிலிற்கொதித்தகங்கொளுந்திடப்பேயின்
றேரிலேறிவெஞ்சமம்பலசெய்திடும்பாலை. (௭௩)

வாட்டும்வேனிலிற்புலவுணுமாசையின்மறவர்
கூட்டநீங்கிடாளுமலியுங்கொடியவெங்கழுகு
மீட்டுபேரெழிலெயிற்றியரிளநடைபயில
வேட்டுவெய்யிலிற்கல்லுண்டுகபோதகமேவும். (௭௪)

அடுத்தமாதரார்செலவழுங்குவித்திடவவர்சொற்
றடுத்துநீங்கிவெம்பகையினைநாமறத்தடிந்தே
யெடுத்ததம்வினைமுடித்துமீண்டிகன்மறவீரர்
கொடுத்திடும்பலியரவங்கள்வயின்வயிற்குலவும். (௭௫)

கானமெங்கணுவிரந்துறுதழைமிகக்களுலி
மேனிறைந்தொளிர்மலரொடுதளவினம்விளங்கல்
வான்மிகுந்திடுதாரகாகணமொடுவெழுவித்
தானிடம்புரண்டேதரைசாருதன்மானும். (௭௬)

தழைத்தமல்லிகைகுல்லைமென்மலர்தலைமயங்கி
யுழைத்தகைதந்திடப்பந்தர்களோங்கிடுங்காட்சி
மழைத்தடங்கண்மெல்லிடைச்சியர்பூன்னிறமயிரா
விழைத்தகம்பலம்பலப்பலவிரித்தனவேய்க்கும். (எஎ)

துன்றுபூவையுந்தமாலமுமிருபுறந்தொடநீள்
கொன்றைபன்மலர்பொதுளுபுகுலவிடுந்தோற்ற
மொன்றுபேரருளுமையரியிடம்வலமுறப்பொன்
மன்றினுடுறுசிவபிரானிலையுதன்மானும். (எஅ)

ஆக்கமல்கியமல்லிகைமுல்லைகளணைந்து
மீக்கிளர்ந்துபோய்க்குமிழ்மலர்வயின்மலர்விரித்த
றேக்கமேவினுயிம்மலர்சிறந்ததென்றுனது
மூக்கின்மோந்துநீமொழிகெனவேண்டுதல்போலும். (எகூ)

மாரிநாளினிலாய்ச்சியர்க்கடங்குபுவதிந்து
கூரும்வேனிலிலவர்க்குறுதுயர்புரிகுயில்கள்
பாரின்மாவளங்குறைந்தழிப்பகைவர்கட்கடங்கிச்
சீரின்மேம்படுகாலையிற்றெறுகுநர்க்கடுப்ப. (அ0)

வேறு.

கயலிணைமுனிந்துவேலிணைப்பழித்துக்காவியொர்டிகளுமாய்ச்சியர்க
ணியலினுக்கழிந்தோவிடையருதவர்கடயிர்கடைவுழிநனியெழுந்து
பயில்வுறுமோதைசெவிபுறச்செவியிற்படுதலினஞ்சியோவறியேந்
துயிலுறுதென்றுமொருநிலையின்றிவாவுபுதிரிவனருனம். (அக)

நிறங்கிளர்பிடவம்பிறங்கிடுசாரினிறைபலமேய்க்குநரொருபாற்
றிறங்கிளர்முதிரையாதியவித்தித்தீம்பயன்கொள்ளுநரொருபான்
மறங்கிளர்சேவினினம்பலதழுவிமைந்துறவார்க்குநரொருபா
லறங்கிளர்கான்யாறுடுநரொருபாலயர்குநர்குரவைகளொருபால். (அஉ)

பீடுறுதலைவர்தம்வயிற்காதல்பேணிடார்வினைவயிற்பிரிய
வாடுதன்மிகுந்துதலைவியராற்றியிருந்தறம்வளர்த்திடும்வலத்தாய்ப்
பாடுசேர்முற்கூபுரமுதலெம்மான்பயிலிடம்பலவகந்தழீஇய
காடுறையுலகமேன்மையைவிரித்துக்கட்டுரைத்திடுபவரொவரே. (அங)

வளவிதழ்க்கமலக்கொழுமதுக்குமட்டிவரிச்சிறைத்தும்பிபாட்டயர
வுளமிகக்களித்தங்கிளவனந்துயிலுமொளிர்புனற்றடநிறைமருத
மளவியிப்புறுமொருபுறந்திகழவரும்பெறற்செவிலியிற்பொன்னி
வளைதலுற்றெழுமுகிவளம்பலதிருத்தமகவினிற்றனிநனிவளரும். (அச)

சைவல்க்குழ்லுந்தாமரைமுகமுந்தாவுசேல்விழியுமென்குமுதச்
செவ்வலர்வாயும்பூகமென்களனுஞ்செவ்விளநீரிளமுலையு
மொவ்வுறுமுந்திநாபியும்பரவைச்சகனமுமரம்பையூருவும்வேய்ப்
பைவளைக்கரமுமாந்தளிர்நிறமும்பயிறரமருதமுற்றிடுமே. (அரு)

ஒருமுதற்குடிலையுயிர்வகைக்கிளையவோதுபல்கலைகளாய்ப்பிரிந்து
பரவியெப்புவனந்தொறுமடைந்திடலிற்படுதிரைப்பொன்னிமாநதியுந்
திருவுறப்பொதுளுமலர்கெழுவயல்கடிகழ்தரப்பலப்பலகாலாய்ப்
பிரிதலுற்றெங்குங்களமர்கள்குழுமியொலிசெயப்பெருகியோடிடுமே (அசு)

ஒருமையிற்கிளர்ந்துசதுர்விதத்தினவாயொரோவொன்றிற்சாகைபற்பல
வாய்ப்,பிரிதலுற்றிடுமெச்சாகையின்மறித்தும்பிறங்கனுவாகங்கள்பலவாஞ்
சுருதியிற்பொன்னிமுதலினொன்றாகித்தொகுபெருங்கால்சிறுகாலாய்
விரிவுறக்கிளைத்துயாங்கணும்பரந்துவியன்பணைதோறுமுற்றிடுமே. (அஎ)

கரையிறப்பொருதுதடைபலமுறித்துக்கால்களிற்றாய்நனிகடுகுங்
குரைவளப்பொன்னிநீரொலாநெறியிற்குறுகிடச்செய்துகைவலியாற்
றிருவமிக்குடையவயற்றுறுஞ்செலுத்துந்திறலுடைமள்ளர்களடங்காக்
கரிகளைக்குலவுமங்குசத்தடக்கிச்செலுத்துமாதோரணர்க்கடுப்பார். (அஅ)

வேறு.

திறம்படுமுகிலாம்வேந்தனளித்திடுந்தெளிநீர்யாவும்
புறம்படாவகைப்பணைக்கேபுகுத்திடுமள்ளரானோர்
மறம்படாவழுதியீந்தமாண்பொருண்முழுதுமீச
னறம்படுபணிக்கேயுய்க்கும்வாதவூரடிகளொப்பார். (அகூ)

சங்கினமுழங்குமோதைதண்ணுமைமதழங்குமோதை
துங்கமொடொளிரும்பொன்னிதுடுமெனப்பாயுமோதைத்
யங்குறைமள்ளரீண்டியார்த்திடுமோதைஞால
மெங்கணுநிரம்பிவானத் தப்புறத்திறுக்குமன்றே. (கூ0)

சிலைப்புயமள்ளரானோர்திகழ்மணிகுயின்றசெம்பொற்
கலப்பையிற்பகடுபல்லயாத்தனர்நிறைத்துக்காசி
னிலப்பெருமகள்பொன்வண்ணம்வெளிப்படநிணவழுக்கைத்
தலைப்பிரிதரச்செய்வாரிற்றடிக்கணேருழுவர்மாதோ. (கூக)

வலனுடைமன்னர்செங்கோன்மாணுறச்செய்வதன்றே
ரிலையிற்படையன்றிக்கோலெனக்கொடுகாட்டுவார்போற்
கொலைபுரிகூர்ங்கோட்டானேற்றினங்கடங்குறிப்பிற்போகப்
புலனுடைத்தொழுவர்கோல்கைகாட்டினருழுதுபோவார். (கூஉ)

தகட்டிளவாளையேறுதாளினாற்றம்மைத்தாக்கும்
பகட்டினஞ்சாய்ந்துவீழத்துடுமெனப்பாயும்வானை
முகட்டுறுமீன்கடம்மைமுடுகிடச்செல்வபோல
வுகட்டுணையோடுவிண்போய்க்கங்கைபுக்குலவுமொய்சேல். (௯௩)

அலத்திரள்கிழித்தசால்கடொறுங்கிடந்தவிரும்பொன்னுங்
குலத்தவின்மணியுமுத்துங்களையிருண்மேயுங்கூர்த்த
புலத்தர்சத்திரத்தின்வல்லவயித்தியர்போலமள்ளர்
நிலத்திடைப்பிரித்தசேறுகுழப்பினர்பொருத்துநீரார். (௯௪)

மன்னுறச்சமமாப்பூமிபரம்படித்துழவர்மாண்ட
தந்நிலக்கிழவருனவிந்திரன்றனக்குச்சாறு
முன்னுறப்புரிந்துசாலமொய்த்தனர்நாறுகென்று
செந்நெலின்முளைகைவாரிவித்தினர்சிறந்தநாளால். (௯௫)

அளவின்விஞ்சிடினேநஞ்சாமமிர்தமுமென்றுஞாலங்
கிளவிடும்பழையவார்த்தைவாய்மையேகிளையினான்ற
களமர்கள்பெருக்கியாத்தகலங்கணீரளவின்விஞ்சி
முளைசெயுநாறுநோவமுழுத்துயர்புரிந்தமன்னோ. (௯௬)

சாத்தியமெய்தியாங்குச்சாதனமானபோக்கு
மாத்தரின்முளைகளூறற்கருந்துணையென்றுசெய்யுள்
யாத்தநீர்முழுதுநாறுகிளர்ந்தெனயாண்டுமள்ளர்
கோத்திடுகால்களாலேகவிழ்த்திடக்குறித்தாரன்றே. (௯௭)

நன்னருக்கென்றுநட்டோர்நலந்தவிர்ந்தூறுகண்செய்யிற்
றுன்னலர்போலவெண்ணித்துரப்பராற்பெரியரற்றே
செந்நெலின்முளைகளூறத்தேக்குநீர்நாறுநாற்றைப்
பின்னுறக்கோறனோக்கிக்கவிழ்த்தனர்பெரிதுமள்ளர். (௯௮)

பருவமேவாவுயிர்க்குப்பராபரன்கருணையாலே
யுரியதோர்சிறியபோகமளவறிந்தூட்டன்மானத்
திரமுடைமள்ளரானோர்முளைப்புனல்செவ்விநாடிப்
பெருவயற்பாய்த்தித்தத்தமகவெனப்பேணலுற்றார். (௯௯)

ஆருயிரினையிங்கீட்டுமருவினைநாடியீசன்
சீரியபெரும்போகங்கணுகர்ந்திடச்சிறப்பினான்ற
பேருலகத்தினாட்டும்பெற்றியின்மள்ளர்நாறு
வாரினர்கொடுபோயான்றவளவயனடுதல்செய்வார். (௧௦௦)

சரிமயிர்முடியவெண்ணித்தங்கையாலவிழ்த்தநாற்றைப்
ஞாவுடன்முடிவர்நாற்றின்பருமுடியவிழ்க்கவெண்ணிச்
சுரிமயிரவிழ்ப்பர்சாலவொப்புமைதோன்றலாலே
பொருபுயத்தொழுவர்சில்லோர்தேறவினறிவுபோனர் (கoக)

கீானுறப்பொதுளிநீண்டபாசடைக்கமலக்காட்டிற்
பானிறத்தூவியன்னநுழைந்துசெல்பான்மையென்ன
மேனிமிர்ந்தேறும்பைங்கூழ்மிடைந்தபல்கழனிதோறுஞ்
சூன்முதிர்தவளச்சங்கந்தலங்குபுநுழைந்துபோமால். (கo௨)

பாசொளிவிரித்துவீங்குமரகதப்பசுங்காடென்னத்
தேசுடைத்தாயபைங்கூழ்செழித்துயர்வனமற்றங்க
ணாசையிற்புந்திபோகாதைம்புலமடக்குவாரிற்
கூசியைந்துறுப்படக்கித்திரிவனகூர்மக்கொள்ளை. (கo௩)

களைகளைபருவங்காட்டப்பெருவிறற்கருங்கான்மள்ள
ரிள்மயிலன்னசாயலாற்றியர்யாருமீண்டி
வளவயலேறுமெய்திமலிகளைகளைவாரானு
ரொளிவளையறைபோயங்கட்சலசரக்குறுதிசெய்ய. (கoச)

அம்புயங்களையும்போதிலங்கைமுள்ளுறுத்துமென்பா
ரிம்பரிலிடர்செய்தாருக்கியாரிடர்செய்யாரொன்பார்
பம்புசைவலங்கள்சாலப்பறித்திடும்பொழுதுகூந்த
றம்பெருமினமென்றெண்ணிவீழ்ந்துகைதடுக்குமென்பார். (கo௫)

நாங்களைகளைவான்கையாற்பற்றலுநங்நேர்வார்கீழ்த்
தாங்கரநீட்டிப்பற்றித்தடுத்தலென்னென்பார்சால
வோங்கியகமலமாம்பலுற்பலங்களைவான்பற்றத்
தாங்கணீர்சொரியுமெனபார்தளிர்க்கரஞ்சலிக்குமென்பார். (கo௬)

நட்டிடுநாறியாவுநலிந்தனகளையினென்பார்
முட்டிடுகளைகள்கட்டாமொய்பயிர்செழிக்குமென்பா
ரிட்டிடையிடைகணுவக்களைதுர்இயிளைத்தாமென்பார்
கட்டிடக்களைகளில்லைக்கரையினிற்போதுமென்பார். (கo௭)

அம்பகமுழந்தாள்சாலவவிர்புறவடியாமங்கந்
தம்பெருமினமென்றண்முங்கயன்முதற்சலசரங்கள்
கம்பிதமுறுமாகொள்ளுங்கடைசியர்பார்வைகாட்டி
நம்பியண்மிருகங்கொள்ளுநலமில்வேட்டுவரையொப்பார். (கo௮)

பங்கயங்குமுதமாம்பலுற்பலம்பாசிவள்ளை
செங்கிடையாதிதங்களுறுப்பினமென்றுதேறார்
மங்கலவுழத்திமார்கள்களைந்தனர்பகையாய்வந்தோர்
தங்கிளையேனுங்கோறறருமநூல்வழக்கேயன்றோ. (க0௯)

உறப்பெரியார்களேனுமொருவரில்லொதுங்கிவாழி
னிறப்பவுமவமதிப்பொடெய்துவர்துயரமெல்லாஞ்
சிறப்புடைக்கமலமாதிதிருந்துநெல்வயலுட்சேர
மறப்பிடிநடையார்புல்லின்மதித்தனர்களைந்தார்மன்னோ. (கக0)

கருவிழிச்செவ்வாயாற்றுக்காலாட்டிமாதரானோர்
பெருவிறற்றெழுவரோடுபுலவியிற்பிரிந்தாரோனுந்
திருவமிக்குடையசெய்யிற்சேர்ந்தனர்துருவிப்பைங்கூழ்க்
கொருதனிப்பகையாயீண்டுங்களையெலாமொருங்குகட்டார். (ககக)

வேறு.

களைந்திடுகளையெலாங்கையின்வாரிவந்
திளம்பிடியன்னவர்கரைதொறேற்றியே
தளர்ந்தலைகூந்தல்கடாங்கிக்கையினின்
புளந்தனும்பிடக்கரையொல்லையேறினர். (ககஉ)

வணர்க்கருங்குழலினார்வரம்பிலேற்றிய
கணக்கறுங்களைக்கிடைக்கமலமுற்பல
மணக்குநற்குமுதங்கள்வயங்கறெக்கபல்
பிணக்கிடைமுகம்விழியிதழ்பிறங்கல்போன்ம். (ககங)

வெண்ணிறமலர்களும்விரவுசெந்நிறக்
கண்ணிறைமலர்களும்போனகார்வய
லண்ணல்வான்சுடரொலாமகன்றநீணிற
விண்ணினைச்சாலவும்விழையுமென்பவே. (ககச)

கானுறுமலரொலாந்தொலைபக்கார்வயற்
றேனுகரளியெலாந்தெரிவைமார்விழி
நானமென்கூந்தல்வாய்நகிலமூசுவ
மேனிகழ்த்தினகொலைவிடாதுசூழ்தல்போல். (ககரு)

சிக்கறக்கையினெய்திற்றிநீவிட
மிக்கிருண்டேகுழற்றோற்றமேவல்போ
னெக்குறவுழத்தியருழக்கிநீவிடத்
தொக்கபைங்கூழெலாந்தோற்றமிக்கவே. (ககசு)

வேறு.

தண்ணெனீர்தமக்குநல்கிவளர்த்திடுஞ்செவிலிக்காரை
விண்ணுறீஇமுத்தமாடவிரும்பிமேலுயர்வபோலப்
புண்ணியம்பயக்குஞ்செஞ்சொற்பயிரெலாம்புடையகன்று
கண்ணிறைகாட்சிமேவக்கவின்றுவான்போயவம்மா. (௧௧௭)

தன்னையர்முத்தமாடத்தம்முளங்களிசிறந்தே
யந்நலச்சிறுமகார்கள்வெண்ணகையாடன்மான
மன்னியசெவிலிக்கார்தாம்வான்றளிமுத்தமாட
நன்னரின்முதிர்ந்துபைங்கூழ்நற்கதிர்கால்வமன்றே. (௧௧௮)

நீரிடைநின்றுபைங்கூழண்ணாந்துநெடுநாளாற்றுஞ்
சீரியதவத்தாற்றிங்கட்டேவைநன்மணம்புணர்ந்திங்
கேருடைச்சூனன்றுற்றேயெழிலுடல்பசந்துவீங்கிப்
பாரெலாம்வழுத்தநன்னர்க்கதிர்மகப்பயந்தவம்மா. (௧௧௯)

காரணத்துள்ளயாவுங்காரியத்துளவாமென்று
சீர்நயப்புலமையோர்தாஞ்செப்பிடும்வார்த்தைதேற்றம்
பேரொழிற்றிங்களூற்றுமமிர்தத்திற்பிறக்குஞ்சூலக
ளேருறவெளுத்துத்தண்ணென்றெழுமிளமீடல்கிழித்தே. (௧௨௦)

கொண்டலாஞ்செவிலித்தாயைவிண்ணுறீஇமுத்தங்கொண்டு
மண்டுறவளவளாவிமகிழ்ச்சியின்முதிர்ந்தபின்னர்ப்
பண்டுறப்பயந்துதாங்கும்பாரெனுநற்றாய்தன்னைக்
கண்டிடவிழைந்தபோலக்கதிர்த்தலைவணக்குஞ்சாலி. (௧௨௧)

பேதமைக்காலைமாந்தர்பெரிதுறச்செம்மாப்பெய்தி
மூதறிவடைந்தகாலைவணக்கமேமுழுப்பூணாக
மேதகக்கோடல்போலவியன்கதிருள்ளீடில்லாய்
போதுறச்செம்மாந்துள்ளீடுற்றெனவணக்கம்பூண்ட. (௧௨௨)

நிலவிடவேறுவேறுநிறவுருச்சித்தரானோர்
புலனுறக்காட்டுமாறுபோலநெற்கதிர்கண்முன்னர்க்
கலைமகளுருவங்காட்டியதன்பினர்க்கருணைநீடு
மலைமகள்கோலந்தோற்றித்திருநிறம்வாய்ந்தபின்னர். (௧௨௩)

அறிவுடைப்பெரியோர்வைகுமவையிடைவினயமின்றிப்
பொறியிலாப்பேதைபோந்துசெம்மாந்துநிற்றல்போல
நிறைபரங்கொண்டுசாயுநெடுங்கதிர்ச்சாலிக்குள்ளே
வறியபுன்பதடியாற்றத்தலைநிறீஇநிலையுமன்றே. (௧௨௪)

நின்றவர்குனிந்துகுந்திப்படுத்தெனநீடுசாலி
நன்றுநின்றுறவணங்கிமடங்கிநற்றரைசார்பாக
வொன்றுபுகிடந்தவம்மாவுலகெலாமொடுங்குங்காலை
மன்றவொர்பரைசார்பாகவொடுங்குபுவைகன்மான. (கஉரு)

தொடக்கமுமீறுஞ்சாலவொத்தொன்றாயொழுகித்தோன்றி
னிடைப்பிறவரலவற்றின்பொருளொடுமுடியுமென்பர்
மடற்பெருஞ்சாலிதோன்றும்பொழுதினுமடிந்தபோழ்து
மடுத்தனவெண்மைபச்சைவணமவைக்குபாதியாமே. (கஉசு)

தண்ணியமதியின்பாங்கர்த்தாநுகரமிர்தந்தன்னை
நுண்ணியதுளிகளாகச்சொரிந்தெனநுவலவொண்ணாக்
கண்ணிறைதகவின்கொள்சாலிக்கதிர்தருந்தரளக்கொள்ளை
பண்ணைகளெங்குமீண்டிப்பரவுகால்சீக்குமன்றே. (கஉஎ)

மன்னியசிறப்பின்மிக்கவளங்கெழுவயல்களியாண்டுஞ்
செந்நெலின்வண்ணமாகித்திகழுறுந்தோற்றமேலே
துன்னுபுவிளங்காநின்றசோதிசால்கின்றமாட்சிப்
பொன்னகரத்தின்சாயைபுடவிநீர்த்தோற்றல்போலும். (கஉஅ)

ஆருயிர்க்கருள்விளங்கவணைத்திடுமாயைதன்னைப்
பேரருள்விளங்கியாங்குப்பெயர்த்திடுமீசனொப்பச்
சீரியபைங்கூழாக்கம்பெறீஇக்கதிர்சிறக்கயாத்த
வாரியைக்கதிர்பழுத்தாங்கேகவிழ்த்திட்டார்மள்ளர். (கஉகூ)

வளவயல்யாண்டுமீரம்புலரநீர்வடிந்தபின்ன
ரளவில்சீர்க்குபேரனுக்குமரும்புகழ்வேளாண்மாக்க
ணளிவயறோறுநின்றுநாவலோவெனவிளிப்பக்
களமர்கள்யாருமீண்டிக்களித்தரிவினையின்மூண்டார். (கங0)

நிரைநிரையாகநின்றுநிலவுகூனிரும்புகையி
லுரனுறப்பிடித்துவாழ்நாளுலந்திடுமுயிரின்கொள்ளை
வரமிகுநெல்லிதூதரரிதலின்மள்ளரானே
ரரிதரும்வினையேசாலவமலுவவயல்களெங்கும். (கஙக)

மாவுறுவயல்களெங்குமரியரிவாரியாயா
மேவுறத்தூக்குதூக்கென்றுரைத்திடுசும்மைமிக்க
பாவகாரியரழுங்கப்பழியிலாநடுவனுனை
காவலரொறுக்குமங்கணெழுமொழிகடுப்பமன்றே. (கஙஉ)

அரிகுநரொருமருங்கங்கடுக்குநரொருமருங்கு
வரிகுநர்சென்னிதூக்கிவைக்குநரொருமருங்கு
விரிகளமுறத்தொகுப்போரொருமருங்கொளிகொண்மேருக்
கிரிபலவெனப்போர்யாண்டுங்கிடத்துநரொருமருங்கு. (௧௯௩)

போரினைமலையென்றெண்ணிமுகிலினம்போகமள்ளர்
சீருறயாத்தார்கொண்டுநடத்தலிற்றிறற்கடாக்க
ளேருறப்பிணைத்துவிண்டுச்சாய்த்தெனவிரும்போர்சாய்த்து
நேருறவேற்றிநெல்லுப்பொலிகெனநடத்துவாரால். (௧௯௪)

பண்டியிற்கொண்டுசெல்லுமடிசிலின்பாரந்தன்னைத்
திண்டிறற்பகன்பினின்றுகுத்தவுந்திறள்கொள்வீம
னுண்டெனமள்ளர்பின்னின்றோச்சவும்பகட்டினங்கள்
மண்டுமாத்ரவினாலேவாய்மடுத்திடுவநெல்லே. (௧௯௫)

ஆறலைத்திடுவார்கையிற்பொருண்முழுதளித்திட்டாங்கே
யூறினைப்புரிதல்கைவிட்டொருவல்போற்பலாலநெற்கள்
பேறுறக்கொடுத்திட்டென்னவுழக்கியபெருங்கடாக்கள்
சேறலுற்றனபுறத்தேசிக்குறுதொடர்புநீங்கி. (௧௯௬)

மெய்கொள்சித்தாந்தசைவவியனருட்குரவர்முன்னர்ப்
பொய்கொள்புன்மதத்தர்மாற்றநிலையின்றிப்போதல்போல
வையினையகற்றிக்கூட்டும்பொங்கழிவாரிக்கான்மு
னொய்யெனத்தூற்றமள்ளரோடுவபதர்புறத்தே. (௧௯௭)

திருந்துசிற்றறிவினாலேசிறப்புடையுயிர்கடன்றாள்
பொருந்திடமனத்திருத்திச்செயுஞ்சிறுபூசைகொண்டு
பெருந்தனிப்போகமீசன்வழங்கலின்வயல்கள்பெட்பத்
தருஞ்சிலவித்துக்கொண்டுமேருவிற்கொடுத்தசாலி. (௧௯௮)

மாநிலங்காக்குமொள்வேன்மன்னவர்கரமிறுத்து
மேனிலைகொண்டதெய்வம்பிதிர்விருந்தொக்கன்மேற்கொ
டானெனுமைம்புலத்துஞ்செயுமறஞ்சலியாதாற்ற
வேனைநெற்குவைகளெல்லாங்குரம்பைகணிறையவிட்டார். (௧௯௯)

இலமெனுமெவ்வமென்றுமுறாயாமையிரவலர்க்கு
நலமுறக்கொடுப்பதன்றிநன்னெறிப்பாலர்தத்த
நிலையினிற்சலியார்சென்றுநீடுபல்பயனுமெய்தப்
புலனுறக்கொடுத்தலும்மன்பொருந்துறுகுடிகளெங்கும். (௧௪0)

அறவரையெதிர்கொண்டெய்தியடிகண்மீர்நீவிருற்ற
குறைமொழிந்தருள்கவென்றுவணங்கியின்மொழிகள்கூறி
யிறையுமோர்வழுவுபூணாதறத்தினிற்றிறம்பாதின்ப
முறநனிவழிபாடாற்றியுவப்புறுகுடிகளெங்கும். (௧௪௧)

காஞ்சிகண்முகிலளக்கக்கமுகுகண்மதியளக்கப்
பூஞ்சினைமருதம்யாவும்பொருந்துபல்கோளளக்கத்
தீஞ்சுவையிளநீர்தாங்கித்தெங்குவான்முகடளக்கத்
தாஞ்சிறந்தெங்குஞ்சோலைதழைத்துமேனிமிருமாதோ. (௧௪௨)

தண்டலைபழனுதிர்த்துத்தடங்கிறைமலர்கிழிக்க
மிண்டுறுவாளைசோலைத்தேத்தடைகிழித்துமேற்போர்
*மண்டுகந்தடத்துச்சாயுமர்ச்சினைபற்றியேறிப்
பண்டுமார்க்கண்டர்காஞ்சிபற்றுதனினைப்பிக்குமே. (௧௪௩)

சுரும்புறமலர்ந்தவாசத்துடவைகண்மருங்கிலெங்குங்
கரும்புகள்வளர்ந்துகாமன்பாசன்றச்செவ்விகாட்டு
மிரும்புகள்பொதுளும்வாவியகன்கரைதோறுநீர்நாய்
விரும்புறுநெஞ்சிற்கீழ்நீர்ச்சுழலுவவெழுந்துமேன்மேல். (௧௪௪)

காமமீதூரநாளுங்காமவேள்பகழிதூண்டச்
சேமவில்லாதனேக்கியொறுத்திடுதிறமேபோல
மாமைசால்கழைகுறைத்துவலிகெழுமாலைநாப்ப
ணூமுறையிட்டழுங்கவாட்டுநர்கூட்டமெங்கும். (௧௪௫)

மைந்தருமாதராருமாண்டகவூழ்க்கிர்ம
ரிந்திரபோகமாற்றியில்லறமுறையிற்பேணி
யந்தமின்மறைகடேருவணுதியம்பகவனை
சந்திரமௌலிக்கன்புபெருக்கினர்சார்பவெங்கும். (௧௪௬)

காம்புறழ்தோளியோடுங்கந்தவேளோடுஞ்சம்பு
வேம்பலுற்றினிதுமேவுங்கமலையேமுதலாமெண்ணின்
மேம்படுதலங்கள்யாண்டும்விரவிடநனிவிளங்குந்
தீம்புனலுலகமேன்மைதேவர்க்குமரிதுசெப்பல். (௧௪௭)

எண்டகுமருதந்தன்னையடுத்துறுமெழில்கொணெய்தற்
கண்டகைதம்மைப்புன்னைதழீஇக்கிளர்காட்சிநஞ்ச
முண்டவர்க்கஞ்சாயென்போலுமைத்தனைபொய்ம்முனென்று
விண்டுறவாவளாவிமேவுதல்போலுமன்றே. (௧௪௮)

---

* மண்டூகம், மண்டுகமெனத்திரிந்தது.

அலையெறிசங்கந்தாங்கியாழ்கடற்கரையிற்புன்னை
யிலையறப்பூத்துநீர்கிழியையதரநிற்குங்காட்சி
யுலகெலாங்காக்குமாற்றலுறவரியூக்கிமேனி
யிலகநீறணிந்துநீர்நின்றிருந்தவமியற்றல்போலும். (கசகூ)

நன்றியில்செல்வர்போலுநண்ணுவார்தாகந்தீர்க்காத்
துன்றுவர்ப்பெருநீராழிதோமிலொப்புரவாளர்ப்போன்
முன்றுறுவார்தாம்பெட்டுமுகந்துகொண்டினிதினுண்ண
வென்றுநன்னீர்சுரந்தேயிடையறாதீயுங்கேணி. (கரு0)

கலைக்கடன்முழ்கிமேலாங்கண்டியுந்திருவெண்ணீறு
மிலக்கமில்பெருமைசாலைந்தெழுத்துங்கொண்டுவப்பார்போல
வலைக்கடன்முழுகிமுத்தும்பவளமுஞ்சங்குமாய்ந்து
நலத்தகப்பெரிதுகொண்டுபுலம்பருள்ளுவப்பர்நாளும். (கருக)

ஆயுயிர்கருவிகைவிட்டணைவுழியடைபாழ்வீய
மீயுயர்பறைதன்காட்சிவியத்தகவருளுமாபோன்
மாயிருங்கரைவிட்டாழிவயிற்செல்வார்மயக்கந்தீரச்
சேயிடையுருவங்காட்டிமனத்திடஞ்செய்யுங்கண்டல். (கருஉ)

வரம்பிலாவறுதியீசன்மலரடிஞானந்தங்க
ணிரம்பிடவடங்கியொன்றாய்நிலைபெறுமுத்தரானோர்
திரம்பெறுசிவானந்தப்பேருததியுட்டிளைத்துத்தூங்குந்
தரம்பொரச்சலதியுள்ளேசுறவினஞ்சலியாதூங்கும். (கருங)

ஆசையங்கடலுட்பட்டவாருயிர்தம்மைத்தொல்லூ
ழீசனதாணையாற்றினியைந்துநின்றலைத்தல்போலப்
பாசொளிவிரிக்கும்பௌவம்படர்பலபஃறிதம்மை
வீசிகள்வளியுறைப்பவெழுந்தலைவிக்குமன்றே. (கருச)

சென்றநாள்பலவாலெம்மைத்தணந்துசேட்டபம்போனா
ரின்றும்வந்திலர்களென்றுவளத்தியர்புலம்பியேங்கி
நின்றுறுதிசையைநோக்கிவருந்தநீளிடையில்வங்கந்
தன்றலையினிதுகாட்டியவர்துயர்தணிவிக்கும்மே. (கருரு)

பரநனிசுமந்துசாலவருந்தினர்பாரம்வீழ்த்தித்
தரையிடைக்கிடந்துடம்பையாற்றிடுந்தன்மைபோலத்
திரைகடலோடிவேற்றுத்தீவிற்பல்பண்டந்தேக்கிக்
கரையடுத்திறக்கியேறிநெடுமுதுகாற்றும்வங்கம். (கருசு)

மொய்வரிவண்டுமூசமுறுக்குடைந்தொழுகத்தேற
னெய்தல்கணனிவாய்விண்டுநீள்கழிமலருந்தோற்ற
மைதிகழ்கண்ணீர்சோரநுளைச்சியர்புலம்பிமாழ்க
நைவொடுகழியுங்கண்ணீர்நட்பினிற்சொரிதல்போலும். (கடுஎ)

அளத்திலுப்பமைக்குமேல்லையுமணர்களார்க்குமோதை
நுளைச்சியருணக்குமீன்கணுங்கிடவருநீர்க்காகங்
துளக்குறவோப்புமோதைகூறவினம்பாயுமோதை
வளைக்குலமுழங்குமோதைகடலொலிமாற்றுமாதோ. (கடுஅ)

மறைவழிபாடன்றூற்றிவரம்பெறுபதிநற்கோடி
நிறைகடலுணைகவேட்டகுடிமுல்லைவாயினீடி
யுறைகழிப்பாலையாதியொப்பிலாத்தளிகளோங்கு
மறைகடலுலகமேன்மையளந்துரைக்குநர்கள்யாரே. (கடுகூ)

வேறு.

மணிகொண்டநெடுங்கடல்சூழ்வையமெலாமெடுத்தேத்தும்வரம்பில்சீர்த்
தி, யணிகொண்டபுனனாட்டுநானிலத்தைத்திணைவளனுவறிந்தவற்றுட், டு
ணிகொண்டவளங்கள்சிலவெடுத்துரைத்தேமிப்பாலந்நிலத்திற்றொக்க, க
ணிகொண்டதிணைநிலைவிட்டொன்றொன்றுமயங்கிநிகழ்கதியுஞ்சொ
ல்வாம். (ககூ0)

வளைப்புறத்துக்கறிக்கொடிகடுணர்பொதுளிமலர்ந்தபுனமுருக்கிற்றூவி
யுளைப்பரியதிறற்காளியுக்கிரனையணைந்துறுமோலக்கங்காட்டும்
விளைப்புதியமலர்த்தளவுவிரைமலர்கள்செறிவேங்கைமிடைந்துசுற்றிப்
பரப்புபுகழ்க்கலைக்கிழத்திசதுர்முகனைமருவியுறைபரிசுகாட்டும். (ககூக)

கானவாரணம்போந்துமலைச்சாரிற்றினைக்குரல்கள்கறித்துச்சிந்தத்
தானவாரணம்வெருண்டுகானகம்போய்ப்புன்பயிர்களுழக்கிச்சாடும்
கூனல்வானரங்கள்குரவருள்பாவைமுரம்படுத்துக்கொண்டுமீள
மானவேற்கருங்கணெயிற்றியர்போந்துவரைப்பார்வைவெளவிமீள்வார்.

வயற்கரும்பைவளைக்களிறுபிடியொடுவந்தொடித்துண்டுமகிழ்ச்சிகூர்ந்து
கயற்றடத்துப்புகுந்துநனிகலக்கிமிகவிளையாடிக்கடிதுமீளப்
புயற்றொகுதிநடப்பதுபோற்கருமேதிநடந்தோடிக்குறிச்சிபுக்கு
நயப்பொடவணரம்பைசிதைத்துண்டுமலர்ச்சுனைகலக்குநயப்புமோர்பால்.

மலைக்கிள்ளைமருதத்துச்சினைவைத்துக்கான்முதிரைமகிழ்ந்துவாய்ப்பெய்
தலைப்புன்னையொளியிருந்துநுளைச்சியர்புள்ளோப்புமிசைமடுக்குமன்றில்
குலப்பெண்ணைமடற்சினைவைத்தகன்றேகிக்கான்யாறுகுளித்துக்கோடு
தலைப்பெய்துகுரல்வெளவிமீண்டெய்திக்களிப்பினொடுசாருமங்கண். ( )

கடற்றுறைமடலேறக்கவைக்காஞ்சிதாய்ப்பசலைக்கொடிவஞ்சுகண்ட
லடைந்தேறியதைப்புல்லிவாழ்வுற்றுமகிழ்வெய்துமமைதியோர்பாற்
றிடப்பூகமடலேறத்திரைவேலைத்துகிற்கொடிநீள்புன்னைதாவித்
தொடுத்தேறிநீள்காஞ்சியதைப்புல்லிவாழ்வெய்துந்தொடர்ச்சியோர்பால்

கிடன்மன்னுக்கருங்காக்கைபகற்போதிலெழிற்காஞ்சிக்கனிகளுண்டு
தடமல்குநீர்குடைந்துவிளையாடியிராப்போதுதஞ்சாரொய்து
மடவன்னம்பகற்போதிற்கடற்சார்போய்மீனுண்டுநுளைச்சிமார்த
நடைகண்டுவெள்கினபோற்றுயிலெண்ணித்தஞ்சேக்கைநண்ணுமங்கண்.

மருதத்துச்சிறைவண்டுவிரைப்புன்னைமலர்த்தேறன்மாந்திக்கான்போய்ப்
பருமத்திற்சிவந்திடுங்கையாச்சியர்தங்குழலிருந்துபாடுங்கீதம்
நுரைதத்தவிடைச்சியர்கடயிர்கடையவெழுமோசைகேட்டுநொந்து
திருவத்தவரிணங்கனனிவாவிக்கடற்சாரிற்றிரியுமோர்பால். (கசுஎ)

கானமுயல்பரன்முரம்பிலவிழ்வரகுகறித்துநனிமாந்திக்கண்ட
வூனையுணுங்கொடுஞமலிநனிதுரக்கக்கடற்றுறையொதுங்கிவாழும்
வேனினடுப்பொழுதினிற்கல்விரைதேருமடப்புறவுமேவிக்கொல்லை
தானிருந்துவிளையாடிவரைச்சாரிற்றினைகொய்துசாருமோர்பால். (கசுஅ)

குறவர்மினார்புள்ளோப்பல்குறித்துவிசைகொண்டெறியுங்கவண்கல்கொ
ல்லைப்,புறவமணைந்தளைத்தாழிபிளவுபடவுடைத்திடலுமாயர்பொங்கிக்
கறுவொடுசென்றவரலறமதுக்குடங்கள்கோல்கொண்டுகெடுத்துமோதி
விறலெயினர்துரந்திடலுநனியோடிமுரம்பொளிக்கும்வியப்புமோர்பால்.

கொடிச்சியர்தங்குழனறுங்கோங்குதளவொடுகுமுதநெய்தல்யாண, ரிடை
ச்சியர்தங்குழனறுங்குரவொடுசண்பகந்தாழைகமலமேர்கொள், கடற்கிள
ரும்புன்னைமராஅவேங்கைபாதிரிகள்கடைசியர்பானுறு, மட்டற்கழுநீர்கொ
ன்றையொளிர்பாலையொடுகாந்தணுளைச்சியர்பான்மல்கும். (கஎ0)

மலைச்சந்தொடகில்பாடியூர்பாக்கமிகநாறுமலியுங்கானத்
தலைச்சிந்துபால்வெண்ணெய்தயிரூர்பட்டணம்வரையிற்சாலுமோங்குங்
குலைச்செய்யின்விளைசெந்நெல்கடல்கானமலைதம்மிற்குலவிநீடு
மலைச்சங்குதுகிர்முத்தம்வரைநீடுகானூர்தொறளவின்றோங்கும். (கஎக)

நானிலத்தைந்திணைபிறவுமிவ்வாறுதலைமயங்குமங்கணுகர்
வானிலத்திலருட்டிருவுந்தன்னிலத்திலுறக்கொண்டுமாட்சிநீடிப்
பாநிலத்திலிணையெறியுஞ்சோணாட்டுச்சீர்பாடல்பரமஞானத்
தேநிலைத்தபுகழுடையநாயன்மார்க்கன்றியொருசிறியேற்காமோ. (கஎஉ)

தகைபெறுமிச்சோணாட்டுக்குயிராகியுலகெலாமுறுப்பாச்சாரு
மிகுபுகழ்துன்னிடும்விராட்டெனும்புருடற்கிருதயமாய்விளங்குங்கஞ்சக்
குகைமலராயனைர்திணுக்குமாதாரப்பரவெளியாய்க்குலவுந்தில்லை
நகரணிகள்சிலவெடுத்துநவின்றடரவருவினையினடலைதீர்வாம். (கஎரு)

திருநாட்டுப்படல முற்றிற்று.

---

# திருநகரப்படலம்.

---

திருவளர்பிரமாண்டத்துச்செறிந்தபல்புவனம்யாவு
முருவளர்புலவுறுப்பாயொளிர்தரவுயருந்தில்லை
பெரியவவ்வுறுப்பியாவுந்தொழிற்படப்பிரேரகஞ்செ
யிருதயகமலமாமேலதன்புகழெண்ணற்பாற்றே. (க)

வியன்படைத்திட்டவீசனண்டத்துக்குயிராமேற்செய்ந
நயன்படைதிட்டதில்லைநகரினுக்கவன்கீழ்வாழு
மயன்படைத்திட்டவூருமரிபடைத்திட்டவூரு
மயன்படைத்திட்டவூருநிகரெனல்மடமைப்பாற்றே. (உ)

விண்ணகர்தம்முட்டில்லைவியநகர்க்கொக்குமாட்சி
நண்ணுறுநகரமின்றேனுனிலவளநகங்கொண்ட
மண்ணுறுநகருளொன்றைமற்றதற்குவமையாக
வெண்ணிடன்மடமைமேலுமடமையாயிழுக்குமன்றே. (௩)

திருவினுற்கவினுற்றேசாற்றிருத்தத்தாற்சிறப்புவாய்ந்த
வுருவினுலுயர்வான்மாண்பரலொழுக்கத்தாலோதவொண்ணு
வருமையாற்புகழானன்காலாக்கத்தாலறிவாலுன்ற
பெருமையாற்றனக்குத்தானேயுவமையாம்பிறங்குதில்லை. (௪)

வேறு.

மீத்திகழ்ந்தோங்கும்வாக்கியத்தொகையால்வேதங்களியாவுநன்கெடுத்துத்
தோத்திரம்புரியுநகர்ப்புறமுடுத்துத்தோன்றுபல்சாகைகொள்பொதும்பர்
த், தேத்தடைக்குலிவிளங்குறுதோற்றந்திகழ்சுடர்ச்சூரியர்நகரேர்
பார்த்திடநினைந்துமண்டலத்தோடுவந்துறைபரிசுபோன்றிடுமே. (௫)

மண்டுபேரொளிகொள்பலமணிகுயிற்றிமரகதமணியினேர்பறம்பு
விண்டலமிறங்காவகையயனமைத்துவியத்தகநிறுத்திவைத்தென்ன
வெண்டிசாமுகத்துங்கவடுகள்போக்கியெழிலுடைப்பவளமலர்பொதுளி
யண்டமேலோங்குபித்திகைமருவியழகுறுமளிமிடைவனமே. (சு)

தாரகாகணங்கண்மலர்ந்தவான்போலுந்தவளவாண்மலர்ததைசோலை
நாரநீர்முகிலினெழுகுதல்போலுநறுமதுப்பொழிலினின்றிழிதல்
சேரவான்மீன்களுதிர்வனபோலுஞ்செம்மல்கள்சோலையினுதிர்தல்
பாரவிந்திரவிற்றிகழ்வதுபோலும்பலநிறமலர்நிரலொளிர்தல். (எ)

தினகரகிரணம்வழங்குறுவண்ணஞ்சினையெலாந்தழைமிகப்பொதுளி
நனைமலர்வடுக்காய்ப்பழமதுத்திரள்கள்குறைவறக்கொடுத்திடுநலத்தாய்த்
தனதெழில்காணப்பதித்தவாடிகளின்வாவிகள்பலவகந்தழுவிக்
கனகமாநகரிற்கற்பகநாணுங்கவினுடைத்தாயதுபொழிலே. (அ)

தோடுறுமலர்கடுறுமெழில்வாவித்துடுமெனப்பாய்ந்துநீர்குடையும்
பீடமைத்தோளாரானனும்புயத்தோடம்புயமலர்க்குறுபேதங்
கூடளியறியாதோங்கிரும்பொழிலிற்கூத்தியர்க்கும்மவர்கூந்த
லாடுறுமுகிலென்றகவுறுமயிற்குமாடவர்வேற்றுமையறியார். (கூ)

சேட்டிருந்தடநீரிடையருதுதவித்தினகரவெப்பினுன்மிகுந்த
வாட்டமதகலச்செய்திடுநன்றிநினைந்தபோற்கரையுறுமரங்கள்
பாட்டளியினங்கள்கால்களாலுழக்கப்பருமுகையுடைந்திழிதேனுங்
கோட்டிருவுடைந்துகூர்ந்திழிதேனும்வழங்கியத்தடக்குறைதீர்க்கும். (க0)

மந்தரமதனிற்றுப்பெனவிடங்கொள்வாசுகிபிணித்தனர்வானோர்
முந்தைநாட்பால்கொளுததியிவிட்டுக்கடைந்துழிமுளரிமாதெழுந்தாங்
கந்தின்மாத்தொடரிற்பிணித்திருந்தடத்துளழுத்தினர்மருங்குநின்றீர்ப்பக்
கந்தநீர்மிகுந்தங்கழுந்திடுமடவார்களிப்புடன்கொம்மெனவெழுவார். (கக)

பரிதியங்கடவுட்கருக்கியங்கொடுக்கும்பரிசினிற்பனைக்கைநீர்முகந்து
கரியினங்ககனம்போதரவெற்றிக்கடவுளியெனவிருபுறஞ்சார்
தருவினஞ்சரித்துத்தாரணைகடக்குமனமெனவங்குசத்தனையை
யொருவுபுகடுகித்திரிதருதண்டமளப்பிலவியத்தகவுறுமே. (கஉ)

வேறு.

கரிதடத்திறங்கலிற்கரைபுரண்டுநீர்
சரிதரறேற்றிலர்தடவுக்கைம்மடூஉப்
பருகியுந்தடத்துநீர்பல்கலென்னெனத்
தெரிவையர்கழியிறும்பூதுசேர்வரால். (கங)

தாரலைநெறியினுனெஞ்சுதாவில்சீர்ப்
பேரொளிச்சிவத்தறிப்பிணிப்புற்றார்தலின்
வாரணநிரைபூலதொடரின்வன்றறி
யேருறப்பிணித்துறுகூடமெண்ணில. (௧௪)

விண்ணிடையுலவிடுமேகசாலங்கண்
மண்ணிடையிழிந்தனவழிக்கொண்டேகுமென்
றுண்ணினைந்திசயித்துரைப்பமாந்தர்க
ளெண்ணிலமதகரியேரும்வீதியே. (௧௫)

மாவளம்படவுமிழ்விலாழிமால்கொடந்
தாவளம்படவுமிழ்தானஞ்சேர்ந்துபல்
பூவளம்படமதுப்பொழியுநன்மணக்
காவளம்படநனிகடுகியோடுமே. (௧௬)

காலகட்டுதித்தெனக்கடுகுதாளின
தாலநீண்மடலெனத்தயங்கும்வாலின
வேலையிற்றிரையெனத்தாவும்வெம்பரிச்
சாலைகள்வாசியைத்தாங்கியோங்குமே. (௧௭)

இந்திரனூர்பரிநாணுமேரின
வைந்தொகைசேர்கதியணவிமாணுவ
மந்திரவாசியின்மேற்சென்மாட்சிய
கந்துகவீதிகள்கவர்வ்கண்களே. (௧௮)

இரணியத்தியன்றனயாணர்மேயின
மரகதக்கொடிஞ்சியவைரப்பாரின
தரளநற்றொங்கலமணிசெய்தட்டின
குரகதத்தேர்செறிசாலைகோடியே. (௧௯)

நரலையின்மரக்கலமன்றிநண்ணுறு
மிரதமுமோடுவகொல்லென்றெண்ணிடப்
பரியுமிழ்விலாழியுட்பாரழுந்திட
விரைவுடனோடுவதேர்கள்வீதியே. (௨0)

பல்வகையுறுப்பினும்பதித்தமாமணி
வில்லுமிழ்ந்துருவினைமறைக்கவேகுநர்
செல்லுறுமோதையினன்றித்தேறிடா
வெல்லையில்வளத்தனவிரதவீதியே. (௨௧)

அடற்றனு நூல்வலோரதிசயித்திடப்
படைக்கலம்பயில்பலவீரர்புந்திகள்
கடக்கருந்திறலுடைக்கடவுளர்க்குமுண்
ணடுக்குறவியத்தகவலத்தினண்ணுமே. (௨௨)

தொடைகெழுவிறற்படைக்குரியதோமில்சீ
ருடையணிதேருறுப்புளுற்றுசாலைக
ளடுசரஞ்சிலையயிலேதியாதிபல்
படைசெயுஞ்சாலைகள்பற்பலாயிரம். (௨௩)

படைபலகெழுமிநேர்பகைஞரஞ்சநீள்
புடைநகர்வளமிதுபுகன்றனம்மினி
யுடைதிரையகழியொடோங்குபேரெழி
லிடைநகரணிசிலவியம்புவாமரோ. (௨௪)

வேறு.

கூழைகள்கொண்டல்காட்டக்குலவுருமின்னல்காட்ட
வீழ்தருவேர்வைத்தூவன்மாரியின்மிகுதிகாட்ட
மாழையுண்கண்ணார்செங்கையுலக்கைகள்பற்றிவள்ளை
யேழிசைவாழ்நர்வீழவிசைத்துநின்றிடிப்பசுண்ணம். (௨௫)

வெள்ளிவீழுதலின்வெள்ளியுலக்கைமேலுயர்ந்துமீள
வொள்ளிழைமாதராஞோரிடித்தொறுமெழுந்திட்டோங்குங்
கொள்ளைகொள்செம்பொற்சுண்ணம்பொதிதலாற்குலவும்பல்சீர்
ஞெள்ளல்களெல்லாநாகவீதியைநிகர்க்குமன்றே. (௨௬)

ஈட்டிருவினையினான்மாவிருபயன்றுய்ப்பான்மேல்கீழ்
மீட்டுமீட்டுழிதர்கிற்றல்போன்மெனமென்பூம்பந்து
சேட்படவங்குமிங்குஞ்சென்றுசென்றுழலும்வண்ணம்
வாட்டடங்கண்ணார்கூந்தலலையநின்றடிப்பமன்றே. (௨௭)

பளிங்கினற்குன்றுபல்லபாயொளிபரப்புமோர்பால்
வளங்கெழுமெக்கர்பல்லவனப்புறத்தயங்குமோர்பாற்
றுளங்கொளிமேடைபலசோதிவிட்டெறிக்குமோர்பால்
விளங்குசெய்குன்றுபல்லவியத்தகவோங்குமோர்பால். (௨௮)

* சைத்திரரதமுநாணக்காமவேடனக்குநாளு
மைமத்திர்மருவிப்பூக்கண்மலியுமுய்யானமோர்பா
லயத்துறுகீதம்பாடுமளிக்குலநயந்துண்டார
வியத்தகமதுவிருந்தீவியன்மலரோடையோர்பால். (௨௯)

* சைத்திரரதம்—குபேரன்பூங்கா.

கந்திகளுதிர்த்தபூவுமின்னனார்கழித்தபூணிற்
சிந்தியமுத்தும்வில்விட்டறற்கரைத்திகழ்வாவி
சுந்தரமலிந்தூட்டோன்றறொக்கவான்மீன்களோடுஞ்
சந்திரனிழிந்துவைகுந்தன்மையைநிகர்க்குமாதோ. (௩0)

தேசுடைத்தமதுகாதின்சீரினுக்குடைந்தவாற்றாற்
கூசுறப்பெரிதுமேறியலைத்திடக்கோளுற்றார்போன்
மாசையிற்குயின்றசோதிமணிவடந்தொடுத்திட்டியாத்த
வூசலிற்றிருந்தவைகியுந்தியாடுவர்கண்மின்னார். (௩௧)

சந்திரகாந்தத்தாலேர்தவழ்தரச்சமைத்தகுன்றி
லிந்துவின்கிரணமேவவசும்பிநீரிழியும்யாண
ரந்திவானிகர்க்குமேனியண்ணலார்கைலைக்குன்றிற்
கந்தநீரருவிமல்கிவழிந்திடுகாட்சிபோலும். (௩௨)

ஆடியிற்சமைத்தகுன்றிலகவுறுமஞ்ஞையேறிப்
பீடுடைக்கலாபம்யாணர்பிறங்கிடவிரித்துமேவ
வீடுடைக்குலிசப்புத்தேளியாணர்வெண்களிற்றொடண்மிப்
பாடுசேர்நகர்ச்சீர்நோக்கிலைவிடும்பரிசுபோலும். (௩௩)

விலங்கலின்மீதுகார்கண்மின்னுபுதவழ்தன்மானத்
துலங்குசெய்குன்றுதோறுஞ்சுரிகுழலவிழ்ந்துதூங்கக்
குலங்கொண்மின்னார்களியாண்டுங்குழீஇப்புடைபெயர்ந்தம்மானை
நலங்கொளின்னிசைகள்பாடியாடுபநயப்பின்மாதோ. (௩௪)

மைக்கருங்கூந்தனல்லார்சேவடிவைப்பியாண
ரெக்கர்கடோறும்பூத்ததாமரைக்கானமேய்க்குங்
கைக்களிறனேகமாவிப்பிடியொடுங்களித்துலாவ
லொக்கமைந்தர்கண்மின்னாரோடுலாவுபவெழிலுய்யானம். (௩௫)

அண்டத்தப்புறஞ்சேராழிசிவகங்கையளவியாடி
மண்டுவரகற்றத்தில்லைமாநகர்வளைந்ததோவென்
றெண்டூருமிறும்பூதெய்தவாழ்ந்தகன்றோர்குலாவிப்
பண்டருநகரைச்சூழ்ந்துகிடந்ததாற்பழங்கிடங்கு. (௩௬)

திருக்கிளருலகமெல்லாமகனுறத்தேங்கிவீங்கவ்
வருட்பெருங்கடலுக்கெல்லைகண்டவரில்லையற்றே
யுருப்பெருமிடங்கர்மாக்களொன்றொடொன்றிகலிமோதுங்
குணக்கிடங்காழங்கண்டோர்குவலயத்தில்லைமன்னோ. (௩௭)

கிடங்கயலிறங்கிநின்றுகலக்கிடமறைந்துகீழுற்
றிடங்கர்தமுரற்றுள்பற்றியீர்த்தலுமவற்றைக்கையா
லுடங்குறத்தூக்கிமோதிக்கயமுனமோலமென்னத்
தடங்கடிதோடிக்காத்தோற்சமழ்ப்புறுவிப்பவேழம். (௩௮)

வீங்கிடுமலங்கணீங்கமேலவன்குணங்களாறுந்
தேங்குதம்மறிவினூடேவிளங்கிமெய்ச்சீவன்முத்தி
பாங்குறப்பெற்றோர்த்தாக்கிப்பழவினைபாறல்போல
வாங்ககழ்க்கிளரும்வீசிமதின்மிசைமோதிச்சாயும். (௩௯)

பிலத்துறுமகளிரானோர்பிறங்குபேரகழினூடு
வலத்துடனெழுந்தண்ணாந்துமதில்கொள்பேரழகுநோக்கு
நலத்தினைவிழையக்கஞ்சநாமநீரகழியெங்குங்
குலத்துடனளிகண்மாந்திக்குமட்டமேன்மலர்ந்துதோன்றும். (௪௦)

பணங்கொள்பாப்பரசுமுன்னாட்பதஞ்சலியாகியிந்த
வுணங்கில்சீர்நகரமேவுமொருபிலத்துவாரந்தன்னை
யிணங்கவோர்மருங்குட்கொண்டிங்கிலங்குசீரிருங்கிடங்கின்
கணங்கொள்பல்வளனுமுற்றக்கரைந்திடவல்லர்யாரே. (௪௧)

விண்டுநேரிடினுஞ்சாடும்விறற்பொறித்தொகுதிமேவி
யண்டகோளகைகடந்தேயணிபலவுடைத்தாய்ச்சாலு
மெண்டிசாமுகத்தும்வீங்குமிருளெலாமேயுங்காந்தி
கொண்டமாமணிகுயின்றுவியத்தகக்குலவுமிஞ்சி. (௪௨)

கிடங்கினின்றுகண்டுமீன்கள்கிட்டலும்வாயிற்கவ்வி
யடங்கவெம்பசிநோயுண்டங்கமர்மதிற்பொறிகணன்கு
திடம்பெறுஞானந்தன்னாற்சிவன்கொணர்ந்தூட்டுமென்றோ
ரிடம்பிரியாதுவைகியெய்துமூண்மிசைவார்ப்போலும். (௪௩)

ஓடுவமீள்வவீழ்வவெழுவகொட்புறுவவொன்னார்க்
கூடுவதெழிப்பதாளிற்றுவைப்பனகொண்டுகுத்திச்
சாடுவவென்கண்டுள்ளந்தழைப்பசம்புவின்மெய்ச்சீர்த்தி
பாடுவகிளப்பதன்றம்மதிற்பொறிப்பரிசுமன்றே. (௪௪)

கடுவெளியுறைப்பவிண்ணிற்கங்கைநீரிடைத்தரங்க
படலமிக்கெழுந்துமேன்மேற்புரண்டிடுபரிசுபோல
நெடுமதிற்றலையினோங்கிநிரந்திடுதுவசக்கான
முடிநிரையுதிரவோவாதெறிவனவுலவைமோத. (௪௫)

நெடுமதிற்கிளைத்தபோலநிமிர்ந்தவெண்ணிகேதனங்கள்
படுதிரைக்கங்கைவற்றநக்கியிப்பாரிற்றெண்ணீர்
வெடிபடப்பருகிவெப்பமவிதரவெறிவமின்னு
திடிசெய்துவெள்ளைமேகமழைபெயுமென்னயாரும். (௪௬)

நற்சிவதருமமுற்றிநாததத்துவத்தின்காறு
நிற்புறுபுவனந்தோறுநேர்ந்துயர்போகந்துய்ப்பார்
கற்பனைகடந்தகூத்துக்காண்பாக்கிங்கிறங்கநாட்டும்
பொற்புறுசிமயமென்னக்கோபுரமிஞ்சிமேற்போம். (௪௭)

நாற்றிசைகளினுமிஞ்சிநலத்தகக்கிளர்ந்தெழுந்தே
யூற்றமாரண்டமெல்லாங்கடந்துயர்சிகரியுச்சிக்
கேற்றதோரவதிகூறற்குவமைமற்றில்லையெண்ணிச்
சாற்றின்மற்றொன்றற்கொன்றையுவமையாச்சாற்றலாமே. (௪௮)

குருமணிகுயின்றகீழ்மேற்கோபுரக்கூடத்துள்ளா
னிரைகிளரண்டந்தோறுநிலவிடுங்கதிரோயாதி
விரிகதிர்மண்டிலங்கண்மின்னானொறியும்பந்திற்
றிரிபவால்வழியிளைப்புத்தீர்தரச்சிறிதுதங்கி. (௪௯)

நாலுகோபுரத்தின்சீருநாடுவாரொருங்குநச்சி
மேலைநாள்விரிஞ்சனென்பான்சதுர்முகனானான்விண்டு
சாலமற்றவற்றிலுள்ளகவினெலாஞ்சலியாநோக்கற்
பாலவாநயனங்கொள்வான்பரமன்பால்வரங்கிடந்தான். (௫௦)

மயன்முதற்றெய்வத்தச்சர்மற்றவைகொண்டனுட்பச்
செயலுடைச்சித்திரங்கள்கண்டுசித்திரங்களாவ
ரயின்முகக்குலிசப்புத்தேளாதிவானவர்கள்யாரும்
வியனுடைச்சிகரிநோக்கிவிழியிமைப்பிலரானாரால். (௫௧)

வாதையிலுணர்ச்சியோரும்வகுத்திடற்கரியமாண்பால்
வேதமோர்நான்குபோலுங்கோபுரநான்குமேலா
மாதிரநுய்கனிருத்ததரிசனமடியர்காணப்
போதவுட்புகுத்துநீராற்பளைபோலும்புதவவாயில். (௫௨)

எண்ணுதற்கரியமாட்சிபடைத்தசீரிஞ்சியோடு
நண்ணுபொற்கோபுரச்சீர்யாவரோநவிறற்பாலார்
பண்ணவர்க்கரியமாட்சிநண்ணகர்ப்பரிசுசொற்றாங்
கண்ணுதற்குரியசீர்த்தியுண்ணகர்க்கவின்சொல்வாமால். (௫௩)

நடையினாலுடையாற்சொல்லுநயத்தினால்வினயத்தாற்கட்
கடையினாலவினயத்தாற்கூத்தினாற்கவினாற்பண்ணா [வேள்
லுடையவாடவர்கணெஞ்சமயக்கியொண்பொருள்கொண்டொள்
படையெனவமரும்வஞ்சப்பரத்தையர்சேரிமல்கும். (௫௪)

மாமணிச்சோதிச்செம்பொன்மாளிகைப்பத்திதம்மி
லேமுறப்பித்திதோறுஞ்சித்திரமிலங்குகாட்சி
காமரிற்றமக்குத்தோற்றகற்பகநாட்டார்தம்மைத்
தோமுறப்பரத்தைமார்கள்சிறையிடைத்தொகுத்தன்மானும். (௫௫)

அகத்திலேநலம்பாடென்பதனைத்துணையேனுமின்மை
முகத்திலேவிளங்காவண்ணமரிசனம்பூசிமூடிச்
சுகத்திலேமயங்குமைந்தர்த்தொழும்பர்களாக்கியன்னோர்க்
கிகத்தையேவீடாக்காட்டியிருமனப்பெண்டிர்வாழ்வார். (௫௬)

காமநூற்பொருள்களெல்லாங்கருத்தெனுந்தூணிசேர்த்திட்
டேமுறக்கலவிப்போரிலாடவர்க்கெடுத்திட்டெய்வார்
நாமநீர்ப்புவியிலிவ்வூர்ப்பரத்தையர்நாட்டவைவே
ளோமிகப்புகுந்துடற்றார்நோற்பவர்தமினுமில்லை. (௫௭)

உள்ளினிற்கலப்பிலாராயுடம்பினிற்றானேபுல்லி
யெள்ளினுக்கெண்ணெய்போலப்பொருளினுக்கிசையவின்பந்
தெள்ளிதிற்கொடுத்துச்சூதுமலர்ந்துபொய்காய்த்துத்தேறாக்
கள்ளமால்பழுத்துவஞ்சக்கணிகையர்களித்துவாழ்வார். (௫௮)

துடியிடைக்கொலைசெய்வேற்கட்கவர்மனப்பெண்டிர்சோதி
வடமுலைக்குவட்டுணேருமைந்தரைச்சொருகிமைய
லுடனுறப்புரிதந்தன்னோருடல்பொருளாவிவெளவி
யடலுடைக்கிரவுஞ்சத்தையசித்தறத்தருக்கிவாழ்வார். (௫௯)

மலைத்துணையாகச்செல்வமைந்தர்பால்வாங்கலன்றித்
திலத்துணையேனுமொன்றையவர்கொளக்கொடுத்தறேற்றாங்
கலைத்துணைகண்டசெந்நாப்புலவரிக்கணிகையானை
விலைத்தெரிவையர்களென்றுவீண்படமொழிந்தாரன்றே. (௬0)

சொல்லுக்குத்தோற்றவென்றுசுகங்களைக்கூட்டில்வைப்பார்
பல்லுக்குத்தோற்றவென்றேமுத்தினைப்பணிப்பார்நாற்ற
வில்லுக்குத்தோற்றவென்றேவித்தத்தையிடிப்பிப்பார்தம்
வல்லுக்குத்தோற்றாரென்றுமைந்தரைவியங்கொண்டாள்வார். (௬௧)

ஆட்டுச்சீர்க்கணிகைமாதரகப்பொருள்பகருஞ்சேரி
மாட்டுச்சீரளந்துகூறவல்லவர்யாவரிப்பா
ஞூட்டத்திற்றுணைவுமல்கவளவைகநல்குரவுண்மூழ்க
வீட்டிப்பல்பொருளும்விற்குமாவணவியல்புசொல்வாம். (௬௨)

வேறு.

விளங்குபொன்னினிற்றலம்படுத்துவிண்ணின்மீதுறப்
பளிங்கினிற்சுவர்த்தலமெடுத்துவாள்பரப்பிட
வளங்கொள்வச்சிரத்திறல்வகுத்ததூணிரைத்துமேற்
றுளங்குபச்சையாலமைத்தபோதிகைசுமத்தியே. (௬௩)

உத்திரந்துகிர்க்குலத்தமைத்திருத்தியொளியா
முத்தினைப்பொடித்தசாந்துமீதுபூசிமூடியே
சித்திரங்கள்செவ்விதிற்றிருத்திவாசமூட்டிநே
ரொத்ததொங்கலுலவிட்டுயர்த்தவாவணங்களே. (௬௪)

மலைத்தலைப்பிறந்தவும்வனத்திடைப்பிறந்தவு
மலைத்தலைப்பிறந்தவுமகன்பணைப்பிறந்தவுங்
குலைத்துடன்றணித்தனிகுவைபெறக்குலாவியே
நிலத்தமாடகூடமன்னநிற்பவாவணங்களே. (௬௫)

எந்நிலப்பொருள்களுந்தலைமயங்கவீண்டல்போற்
பன்னிலக்கிளவியுமயங்குறப்பரந்தன
வின்னவுண்டிலையெனக்கிளந்திருமல்யாவையு
நன்னரின்னிறைத்துயார்க்குநல்குமாவணங்களே. (௬௬)

ஏதிலூர்களில்லதாமிகத்தொகுத்திட்டதலாற்
கோதிலாததங்களில்லவேதிலூர்கொடாமையாற்
போதநீடுதம்பொருட்களவிலாமைபூணலால்
வேதவாகமங்களென்னமேவுமாவணங்களே. (௬௭)

தமனியப்பொன்னுடைவர்க்கஞ்சந்திரத்தினன்மணி
யம்மபடப்பதித்திழைத்தகஞ்சுகாதியணிமுடி
*யெயிமிடற்குயின்றகோசிகம்பல்லாடையெழிலொளி
யுமிழ்மணிக்கலன்களின்னவுற்றகூலமாயிரம். (௬௮)

தெருக்களாலொர்நாலுபாலும்வந்துவந்துசேர்சன
நெருக்கினெள்ளிடவெளியிலாதுகூலநிறைவுறும்
பரக்குமோதைசெவிகளைச்செவிடுறச்செய்பரிசினல்
வரப்பில்பண்டம்யாவருங்குறிப்பினோர்ந்துமாற்றுவார். (௬௯)

---

* எயி—கூட்டம்.

பல்மணிக்குலக்குவைபரந்துவில்விரித்தலிற்
குலவுமாவணத்தெருக்கள்கூடுமைந்தர்மாதர்தந்
நிலவுகண்சுழன்றுமின்னிநீரிறைக்கவழிபிழைத்
துலவவுமிடம்பெறாமலோவியத்தினிற்பரால். (௭0)

வாதையின்றியேதிருத்தொகுத்துநல்குமாட்சியாற்
போதநீள்புறப்பொருணுனித்துநாடுபுந்தியாற்
றீதுறாதுபொருளினுண்மைதூக்கிநன்றுசெய்தலா
னீதிமன்னரொன்னநாய்கர்நியமமுற்றுநிலவுவார். (௭௧)

ஐம்பொறிக்குமேற்றயாவுங்குறைதலின்றியமலலா
லிம்பருக்கொர்போகபூமியென்னவோங்குமாவணந்
தம்பெருக்கவளவுதாமறிந்திடாததகுதியா
லும்பருக்கொருவமையாகியோங்குவார்கள்வணிகரே. (௭௨)

விளங்கிடும்பதார்த்தம்யாவுங்கூற்றமூன்றுமேவுறா
துளங்கொளத்தெரித்தியல்வகுக்குமொண்மையாளர்போல்
வளங்கொள்பன்மணிக்குவைவகுத்தநற்றிவாத்தொறுங்
களங்கறத்தெரிப்பர்சாய்கர்னையின்மேருமேற்றா. (௭௩)

மின்னனார்பரப்பிவிற்குங்கோங்கமென்மிளிர்தொடை
பொன்னிறங்களுற்றநல்லபொன்செய்மாலையென்னவு
நன்மணங்கலக்குநல்லநறியசம்பகத்தொடை
யென்னவுமயங்கிமைந்தரினிதுகொண்டுவப்பரால். (௭௪)

வேறு.

கற்பகந்தேனுசிந்தாமணியொடுகொருநாணச்
சிற்பரனருச்சனைக்காந்திரவியம்பலவுஞ்சேமித்
தற்பகலிடையறாமேயளித்திடும்வளமைசான்ற
பொற்பமராவணச்சீர்புகன்றிடற்பாலர்யாரே. (௭௫)

சின்மயக்கோயிறன்னையுடுத்தருட்சிறப்புவாய்ந்த
பொன்மயப்புரிசைநான்கின்புறத்தவாய்நான்குபாலுந்
தன்மையிற்சுத்தமாயாபுவனமாய்த்தயங்குமாட்சி
நன்மையிற்சிறந்தவீதியணிசிலநவில்வாமன்றே. (௭௬)

திருவருட்செல்வந்தம்பாற்சிவணிடச்சிவனூலாற்றிற்
புரியிடைத்தொகுவார்செய்யும்புண்ணியத்தாயசீர்த்தி
யுருகெழப்பரந்துமேலேயொளிர்தலிற்றரளப்பந்தர்
வருமுகிறடக்கவிண்ணிற்றிகழ்தரவயங்கும்வீதி. (௭௭)

காரணிநுழையவோங்குங்கதிர்விடுதரளப்பந்தர்ச்
சீரணிகுயிற்றியாத்தபன்மணிச்செவ்விச்செம்பொற்
றோரணநிரையுஞ்செந்தேன்றுளித்திடத்தொடுத்தவாசத்
தாரணிநிரையுநான்றுகவின்செயத்தயங்கும்வீதி. (எஅ)

அந்தணர்கரத்திற்றானமாதரத்தளித்துவாக்குங்
கந்தநீராறாய்மின்னார்சிதர்த்தகுங்குமங்கலந்து
சுந்தரமிகுந்துதோன்றக்கொழித்திடுவெண்டறொல்லைச்
சந்தனன்னகரோர்கால்கள்வழுக்கிடச்சாரும்வீதி. (எகூ)

கறையடிப்பனைக்கைநால்வாய்க்களிமதகரிகளூற்றும்
வெறியுடைமதமும்யாணர்விளங்குநற்சுழிகொணீள்வாற்
புறமயிர்க்குரத்தாட்பாய்மாப்பொழிந்திடுவிலாழிதானு
நெறிபடச்சகடோற்றினொழுகிடநிமிரும்வீதி. (அ0)

விரைபடத்தெளித்தசந்துமிளிர்தரநாற்றுந்தார்வீழ்
பெருமதுப்பெருக்குமொன்றாய்ச்சேறுபட்டிடப்பிறங்கு
மிரணியத்தகடும்யாணர்ப்பருமணித்திரளும்யாரு
மருவுறப்பதித்துக்கால்கள்வழுக்காமனடப்பர்வீதி. (அக)

மாலைகளுருக்குந்தேறன்மலிந்துசெய்சேற்றையந்த
மாலைகளுருக்குந்தாதேபுலர்த்திடும்வாட்கட்சாயற்
கோலமங்கையர்நீர்வண்டலாட்டினிற்குழம்புசேற்றைக்
கோவமங்கையர்தூஉஞ்சுண்ணம்புலர்த்திடுங்கொடிநீள்வீதி. (அஉ)

அணங்கனார்கனைந்துவீசுமாடகத்தாரும்யாணர்
மணங்கமழ்மலர்மென்றாரும்வரம்பில்பன்மணியின்றாருங்
கணங்கொண்மாக்கரிதேர்வீரர்கதிக்குமற்றவர்போனாரு
மிணங்கிமிக்கிடையூறாற்றுந்தோற்றத்தாலிலங்கும்வீதி. (அங)

அரசிளங்குமரரூருமணிமணித்தேரும்யாணர்
விரியொளிமணிப்பொன்மாடமேடையுமிடைந்துநாலும்
பருமணிப்பொலஞ்செய்தாருநெருங்கிவில்பரப்பலாலே
யிரவினும்பகலேபோலவிருள்வரவறியாவீதி. (அச)

சீரணிவிளக்கமாடிதிருந்துறத்திகழ்தலாலும்
பூரணபசும்பொற்கும்பம்வரிசையிற்பொலிதலாலு
மேரணியரம்பைபூகங்கனியுடனிணங்கலாலுந்
தோரணப்பொலிவினாலுந்துலங்குபுசிறக்கும்வீதி. (அரு)

ஆரணம்பரவுமேலோனற்புதத்திருக்கூத்தன்பா
னேருறத்தொழுதுவாழுநேயத்திற்புகுதாநின்ற
நாரணன்முதலாந்தேவர்ட்டமுநரலைசூழ்ந்த
தாரணிமன்னரானோர்கூட்டமுந்தணவாவீதி. (அசு)

அங்கணனணிவிழாவிற்றழங்குதுந்துபியுமன்பர்
சங்கரசிவநடேசசம்புவென்றெடுத்துப்போற்றுந்
துங்கவின்னிசையுந்தோமில்சோபனவொலியுந்துன்று
மங்கலமுரசம்விம்முமோதையுமாறாவீதி. (அஎ)

அற்புதத்திருக்கூத்தாடுமெண்ணலாரகிலமீன்ற
தற்பரைக்குமாரரோடுதத்துவமணித்தேரேறி
யிப்புவியண்டமுய்யவெழுந்தருள்ஞானானந்தப்
பொற்புறுவீதிமாட்சியாவரேபுகலுகிற்பார். (அஅ)

அரியயற்ககந்தைபோகவனாதியம்பகவன்மேனாள்
விரிசுடர்க்கனலியாகிவியத்தகவுயாந்தாலொப்பப்
பரிபுரப்பதமின்னார்கள்பயிறரத்திருவினோங்கு
மெரிமணிப்பசும்பொன்மாடநிரைகள்விண்ணெழுந்திட்டோங்கும்.

இந்திரநீலத்தாலேயெழில்பெறவெடுத்தசோதிச்
சுந்தரமாடப்பந்திதண்ணமுதூற்றுந்தூய
சந்திரமண்டலத்திற்கப்புறஞ்சார்வதொன்னாண்
விந்தமேலெழுந்துகோள்கள்கதிகெடவிளங்கல்போல. (கூ0)

உமையிடத்தொருபேரண்ணலொப்பிலாநடங்காண்பாக்குத்
தமனியவுலகத்தாரிந்நகரிடைச்சாரநாட்டுஞ்
சிமயமற்றிவைகொலென்னத்திகழொளிவைரத்தாலே
ரமைதரச்சமைத்தமாடமளப்பிலவெழுந்துவிண்போம். (கூக)

வேறு.

பத்தியிற்சித்திரம்பலவிளங்குபொற்
பித்திகள்பலவுடன்பிறங்குசோதிவெண்
ணித்திலமாளிகைநிரைகள்வேதன்வாழ்
சத்தியவுலகமீக்கிளர்ந்துசாலுமே. (கூஉ)

இருடுரந்தொளிசெயயாணர்மேவுபல்
புருடராகத்தினிற்புனைந்தமந்திரங்
கருடனூர்மாயவன்காமுற்றேயுறை
பொருடுறுவைகுண்டமீதுபோலவால். (கூங)

*பளகறுமோவியப்பத்திபஃறிக
ளொளிவைடூரியத்தியற்றுமொப்பில்சீ
ரளவுபொன்மாளிகையாதவன்கிளர்
தெளிதருமண்டலமீதுசெல்வவால். (௯௪)

புரைதபப்பவளத்திற்புனைந்தமாளிகை
யுரைகொள்கோமேதகத்துயர்த்தமண்டப
மரகதமணியினாலியற்றுமண்டப
நிரைநிரையாகவிண்ணிமிர்வகோடியே. (௯௫)

பானுவின்சிலையினிற்குயின்றபாயொளி
மேனிலமதனெதிர்காலும்வெய்யதீ
வானிலவின்சிலைபதித்தமாளிகை
மாநிலவெதிருமிழ்நீரின்மாயுமே. (௯௬)

ஒண்ணுதன்மாதரார்குழலுக்கூட்டலிற்
றண்ணியநறும்புகைதனக்குங்காருக்கும்
விண்ணுறுமாடமேல்வேறுபாட்டினைப்
பண்ணிடலரிதுமின்பயிதலில்லையேல். (௯௭)

பண்ணிறைமாடமேலாடும்பைந்தொடி
யொண்ணகைமாதரார்தமக்குமூங்கணை
விண்ணவர்மாதரார்தமக்கும்வேற்றுமை
கண்ணிமையாவழிக்காணவில்லையே. (௯௮)

பலகணிதிறந்திடுமெமயம்பார்த்துறை
கலைநிறையம்புலிதனக்குங்காரிகைக்
குலமினார்முகமதிதமக்குங்கூடரா
விலைகளங்கெனிற்பகுப்பறிதலில்லையே. (௯௯)

தண்மதிக்குடற்கறைசகசமன்றுதான்
விண்ணுறுமிந்நகர்மாடமேவுதோ
ரொண்ணகையார்முகச்செவ்விக்கொவ்வுறா
துண்ணிறைதுயர்சுடக்கறுக்குமொள்ளுரு. (௧00)

புயறுமாடமேலுலவும்போழ்தினின்
மயல்சுரர்பெரிதுறுவாரென்றெண்ணியோ
வியலணிதிருந்துறவெய்தியும்பினுஞ்
செயலணியிந்நகர்மாதர்செய்வதே. (௧0௧)

* பளகு—குற்றம்.

மிஞ்சுபேரழகுடைமின்னனார்மிளிர்
மஞ்சிவர்மாடமேல்வதியும்போழ்தினி
னஞ்சுமிழெயிற்றராநண்ணிக்கவ்வுமென்
றஞ்சனங்கண்ணினுக்கெழுதவஞ்சுவார். (௧௦௨)

நன்னர்யாழ்நரம்புகைவருடிநங்கைமார்
இன்னரமணைதரக்கீதநூன்முறை
பன்னிசைசெவிமடுத்துவப்பர்பாணரப்
பொன்னகரரம்பையர்நாணுட்பூப்பரால். (௧௦௩)

பண்ணுறுயாழிசைக்கிசையப்பாடிசை
தண்ணுமையிசைவழிதழுவக்கானடை
கண்ணிணைகைவழிநெஞ்சங்கண்வழி
நண்ணிடவரங்கிடைநடிப்பமின்னனார். (௧௦௪)

கரங்கடாமரைமலரென்னக்காரளி
விரும்பிவீழ்ந்தெழுந்திடவீநறுங்குழற்
குரும்பைமென்முலையவர்குழுமியெங்கணு
மரும்பிடமகிழ்கழங்காடுவாரரோ. (௧௦௫)

இறந்துபேரின்பவீடெய்தினார்களும்
பிறந்துவாழ்வுறவிழைபெரியவிந்நக
ரறந்தவாநரர்சிறப்படைந்துகாண்கிலார்
சிறந்தவரமரரேயென்றுசெப்புவார். (௧௦௬)

வேறு.

மடவனநடையினார்களெதிரெதிர்வைகிவெள்ளைப்
படிகநாய்சிவப்புமேவக்கரமலர்தொட்டுப்பைந்தேன்
றொடையணிமுதலவொட்டித்தோல்விவெற்றிகணோக்காராய்க்
கடிகைபோக்கிடவட்டாடுங்கம்பலைமாடமல்கும். (௧௦௭)

தங்களுக்கிறைவனானென்பதஞ்சலியாகிச்சார்ந்தீண்
டங்கணனடனங்கும்பிட்டமர்சிறப்பிந்துநாக
மெங்குவான்கிளர்ந்துதுள்ளுமியற்கையின்யாணரின்ப
மங்கலக்குதலைமைந்தர்விடும்படம்வானினூடும். (௧௦௮)

தொன்மறைவகுக்குமேலாமறமெலாமவணசூழ்ந்து
நன்னெறிபிறழாதீட்டும்பொருளெலாமவணநாடிச்
செந்நெறிநின்றுதுய்க்குமின்பெலாமவணதேர்ந்து
பன்னருஞ்சிறப்பின்வீடுபேறுமற்றவணபன்னில். (௧௦௯)

வேறு.

பல்கலையுநான்மறையுமுழுதுணர்ந்துசிவவேள்விபலசெய்ந்நீரா
ரொல்லைதவிர்நடராசனிணையடிக்கங்கணுக்கராமிரும்பேறுற்றோர்
சொல்லரியஞானமுதனுன்குமுணர்ந்துலகெலாந்தொழுமாநின்றோர்
தில்லைவாழந்தணர்கள்செம்பொன்மணிமாளிகைகள்சிறக்குமோர்பால். ()

அப்புனிதப்பெருந்திருக்கூத்தாடுமொருபெருமான்மன்றகலாராகி
யொப்பிலருட்பலபணிசெய்யுரிமைதமதெனக்கொண்டேயொழுகுமாண்
டிப்பியநற்கலைபலவுமுணர்ந்துதிருவருட்செல்வந்தேக்குநீரார் [பார்
தப்பிலகம்படிமைமிகுவேதியர்தம்மாளிகைகடயங்குமோர்பால். (கககக)

பலநீதிநனிதேறிப்பகையெலாங்கட்டறுத்துப்பரவைசூழ்ந்த
நிலமீதுதமதாழிதனியுருட்டிக்குடிகளறநெறிநீங்காது
செலுமாறுநனிசெங்கோல்செலுத்தியொளிரைந்திறத்தினுறுதீங்குதீர்த்து
வலமேவுபெருங்கீர்த்திவாளரசரரணிடங்கள்வயங்குமோர்பால். (ககஉ)

வளம்படுதம்பொருளேபோற்பிறர்பொருளுமிகப்பேணிவாணிகஞ்செய்
துளம்படுதந்நடுவுநிலைபுறத்தினிற்கோறாக்குபுநன்றுணர்த்திமுன்னூல்
விளம்புநெறிகடைப்பிடித்துமிக்கவிருநிதிக்கிழவர்பலருண்டென்னத்
துளும்புபெருந்திருவினுயர்வசியர்மணிமாளிகைகடுலங்குமோர்பால் (ககங)

இத்தரையிற்றுவிசரொருமூவருந்தொன்மறைகளினிதெடுத்துக்கூறுந்
தத்தநெறிசலியாதுதலைநின்றுகதிப்பவுழுதொழிலாற்றாங்கிச்
சத்தியமொப்புரவுபொறைவேளாண்மைகலையுணர்வுதம்மாற்சாரு [ல்.
மெத்துபுகழ்தமதெனக்கொண்டாள்சதுர்த்தர்வளமனைகள்விறக்குமோர்பா

ஓங்குபுகழ்நால்வருணத்துயர்ந்தோர்கடம்முண்மணம்புணரமாறிச்
சாங்கரியமுற்றுதித்தோர்தத்தமக்குவிதித்தவழிதலைநின்றொற்றி
வீங்குபுகழொடுதழைத்தநால்வரும்வாழுமறையிடங்கண்விறந்துசூழ்ந்து
பாங்குபெறத்தழுவிவளம்படவாழுமணிவீதிபரக்குமெங்கும். (ககரு)

வேறு.

அறுதிசைவனுஞ்சிவபிரான்முகமைந்திலடைந்து
பிறுதிமாறின்றியாகமமன்றநெறிபேணி
மறுஇமூனறினுஞ்சிவனருட்பணிபுரிமாண்பா
ரிறுவகன்றநல்வேதியரிருக்கைகளீண்டும். (ககசா)

அரியஞானிகடிருமடமொருபுடையணவும்
பெரியயோகியர்திருமடமொருபுடைபிறழுங்
கிரியைபேணுநர்திருமடமொருபுடைகெழுமுஞ்
சரியையாளர்கடிருமடமொருபுடைதழுவும். (ககஎ)

அன்னசாலைகளொருபுடையரியமாமுனிவர்
பன்னசாலைகளொருபுடைபலகலைவிதங்க
ணன்னர்நான்மறையாகமமுறைப்படநாடும்
பொன்னின்மாமுடிப்பட்டிமண்டபமொருபுடையே. (௧௧௮)

பேதைநீர்மையிற்கலாய்க்குமாணுக்கரைப்பெரியோ
ரோதிடும்பிரதிஞ்ஞையேயதைவலியுறுத்து
மேதுவேயதைநிறுத்திடுமுதாரணமிவற்றான்
வாதைதீர்பொருடெருட்டறப்புறமெங்குமலியும். (௧௧௯)

இரண்டினைத்தலைமேற்கொண்முப்பானெனவிசைக்கு
மரண்டருந்திறத்தறமெலாநானெனதென்று
முரண்டரந்தருட்கூத்தையர்சேவடிமுன்னித்
தெருண்டுளோர்செயுஞ்சீரறச்சாலைகள்பலவால். (௧௨0)

கீதமேம்படுநான்மறையோதுபல்கிடையு
நாதமேம்படுநால்வர்செந்தமிழ்பயில்களனும்
போதமேம்படுதொண்டர்தம்புராணமுநடேசன்
வேதமான்மியமைந்துமோதிடங்களுமிகுமே. (௧௨௧)

உம்பர்நாயகனொருதனிக்கோயிலையுடுத்த
பைம்பொன்மாமதின்மிசையிடபம்பலபயிலும்
வெம்பறன்கடையெண்டிசாமுகத்தினுமேவி
யிம்பர்நல்லறமிறுத்திடாதோம்பவெண்ணினபோல். (௧௨௨)

வேறு.

நவந்தருமைந்தொழினடத்தநாதனார்
நவந்தருபேதமாய்நண்ணிடச்சபை
நவந்தரச்சமைந்தெனச்சிகரிநான்குமொண்
ணவந்தருகூடங்கணண்ணியோங்குமே. (௧௨௩)

அண்ணலார்திருவபிடேகமாடுசீர்
வண்ணவாயிரமணிக்கால்செய்மண்டபம்
புண்ணியமுனிவருஞ்சுரரும்பூதரும்
மண்ணகத்தடியருநெருங்குமாட்சித்தால். (௧௨௪)

நீற்றொளிதிகழ்திருமேனிநின்மலன்
மாற்றருமறைநெறியுயிர்மணந்திட
வேற்றசீர்ப்பரைதனைஞானமாமண
மாற்றுபொன்மண்டபங்கவினுமாங்கோர்பால். (௧௨௫)

புங்கவரமிர்தினைப்பொதிந்தபெட்டியி
னங்கணனருள்வடிவாய்மலப்பிணி
சிங்கிடத்தமிக்குமொர்தீர்த்தமாஞ்சிவ
கங்கைசூழ்மண்டபங்கவினுமாங்கொர்பால். (கஉசு)

அமரர்வாழ்வுறத்திருவுளங்கொண்டன்றொரு
சமரம்வேட்டயிற்படைதாங்குசெங்கைநங்
குமரவேள்சின்மயக்கோட்டமன்பர்தந்
திமிரவெவ்வினைகெடத்திகழுமாங்கொர்பால். (கஉஎ)

அநாமயனங்கரனுருவாகனன்
விநாயகனெம்பிரான்விமலக்கோயினன்
மனுதியின்வழிபடுமடியர்வாழ்வுற
வினுதுரந்தருள்கொழித்திலங்குமாங்கொர்பால். (கஉஅ)

அமபிகைபரைசிவகாமியன்னையா
ரிம்பர்வாழடியவையாத்திட்டின்னல்செய்
வெம்புறுபிறவிநோய்வீட்டிமேவுசீர்ப்
பைம்பொனாலயமொளிபரப்புமாங்கொர்பால். (கஉகூ)

வேறு.

பரசிவன்கருணையாலேபல்லுயிர்க்கருள்வழங்க
வருவுருவாயஞானமேனிகொண்டளப்பில்சாகைச்
சுருதியொர்வடிவாயோங்குந்தூயவானீழன்மேவு
மொருதிருமூலட்டானமுறையிடந்தொளிருமோர்பால். (கஙo)

மாதவன்விரிஞ்சனாதிவானவர்முனிவரோனே
ராதரம்பெருகவேத்தவளப்பிலானந்த
நாதனேலக்கமேவுநலங்கிளர்தேவமன்றென்
றோதுபேரம்பலம்வானுற்றொளிவிரிக்குமோர்பால். (கஙக)

கார்த்திருமேனிமாயோன்முதலியோர்கலங்கியோட
வீர்த்தெழுமாலங்கண்டத்தடைத்தருள்சுரந்தவண்ணல்
லூர்த்துவநடங்குயிற்றுமொருபெருநிருத்தமன்றம்
வார்த்தைகட்கதீதமானதிருவிளைவயங்குமோர்பால். (கஙஉ)

வேற்றுப்புன்சமயத்தெய்வம்யாவையும்வினையுட்படுத்
தோற்றுத்தன்றுணைதாங்கத்தொலைவின்றிநிலவலாலே
நீற்றுச்செஞ்சடைப்பிரானேபதியெனநிறுவுந்தம்ப
மேற்றுச்சீர்க்கொடிவான்போகப்பொதுவின்முன்னெழுந்திலங்கும்

வேறு.

கவினெலாமொருவழிப்படத்திரண்டரோகாமர்
நவமணிக்குவைகுயின்றுசித்திரமுயிர்நண்ணச்
சிவணியோர்பசும்பொற்சபைக்கெதிருற்றிடத்திகழு
மவதிநீர்பெருந்தெய்வமாமண்டபமதுவே. (௧௬௪)

காதனந்தியம்பெருந்தகைகாவல்வீற்றிருப்பாய்
வேதமோதினர்தில்லைவாழந்தணர்மிடைந்தே
போதொராறினுநிருத்தர்பூசனைபுரியிடனாய்ச்
சோதிமேவுபொன்னம்பலமலவிருடீரக்கும். (௧௬௫)

சுத்தமாயைமுன்னனதத்துவம்பலசூழ்போம்
பித்தியாதிபல்லுறுப்புமாய்ப்பிறங்கிடப்பெரிய
சத்தியொன்பதுந்தூபிகளாகிமேற்றயங்க
வித்தையாவுமைம்பீடத்துந்தம்பமாய்மிளிர. (௧௬௬)

ஏற்றமாகுமைஞ்செழுத்துமைம்படிகளாயிலங்கச்
சாற்றுறுமனுரகசியஞ்சதாசிவபீட
மேற்றிகழ்ந்திடமகேசனைங்கரன்சூலிவிசாக
னாற்றனந்திசண்டேசுரனகன்புடையடுப்ப. (௧௬௭)

ஆடகப்பெருங்கிரிமிசையணவுதென்சிகர
மாடொர்சிற்சபைவிளங்குமற்றதன்பெருமகிமை
நாடியிற்றெனவுரைப்பரிதெவர்க்குமெய்ந்நடன
மாடுமப்பொதுவியதமாவளப்பருஞ்சிவமே. (௧௬௮)

மோனஞானிகடேறிடுமுடிவில்சீர்த்தில்லை
மாநகர்ச்சிறப்பெனதுசிற்றறிவிற்குவசமோ
வானவாதரத்தொருசிலவறைந்தனனணிப்பொன்
ஞானமன்றுடைநாதன்மான்மியமினிநவில்வேன். (௧௬௯)

திருநகரப்படல முற்றிற்று.

---

# நைமிசப்படலம்.

பூமகட்கொருநிலயமாய்ப்போக்கறுசீர்த்தி
நாமகட்கணியரங்கமாய்நவிலுமெண்ணன்காஞ்
சேமநல்லறக்குயிரதாய்ச்சிறப்புறுந்தகைத்தான்
மாமலர்த்திருப்படப்பைசூழ்நைமிசவனமே. (௧)

வில்லமாதுளைபாதிரியாத்திமாவிலிங்கை
குல்லைசண்பகஞ்சாதிமாலதிகொன்றைபலாசு
நெல்லிசூதம்புன்னாகந்தாடிமம்வன்னிநீப
மல்லிகாதியிற்கிளர்ந்திடுநைமிசவனமே. (௨)

தருப்பைவல்லியச்சருமமேர்மரவுரிமான்றோல்
சிருக்கொடேர்பெறுசிருவநூல்சமிதைத்தொன்முறைகோ
விருப்பினீந்திடுகௌவியம்வேதிகையங்கி
வரத்தின்மேவுடசத்ததுநைமிசவனமே. (௩)

தேவபாடையின்மாதவச்சிறுவர்களோதும்
பாவுமூவறுவித்தையும்பலமுறைகேட்டுக்
காவின்மேவுறுபூவையுங்கிள்ளையுங்கனிவா
னுவிணேதிடக்கிளர்வுறுநைமிசாரணியம். (௪)

ஓமத்தீப்புகைமேகத்தினுருமிகக்காட்டச்
சாமப்பேரொலியதன்பெருமுழக்கதைத்தயக்க
வாமத்தீப்பொறிமின்னுருவயக்கவாக்குறுநெய்
காமத்தூவலாக்கிளர்வுறுநைமிசாரணியம். (௫)

ஒருவனாகியசிவபிரானிருகழலொருமுக்
கரணமாரநான்மறைவழிகசிந்துபாசித்துத்
திருகுமைம்புலங்கடிந்துசெய்தறுதொழில்சிவஞ்சா
ரரியமாதவரிருப்பதுநைமிசவடவி. (௬)

ஏற்றின்மேல்வரும்யாகவேந்தாகுமீசனுக்குப்
போற்றுமூவெழுவேள்வியும்பூர்வமிமாஞ்சை
சாற்றுநீதியாற்றேவர்தம்பசிப்பிணிதணப்ப
வாற்றுமாதவர்வாழ்வதுநைமிசவடவி. (௭)

பாசவேரறத்தரித்திடுகண்டிசாபாலம்
பேசுமுத்திறவிபூதிசங்கரனுமைப்பிராட்டி
தேசுகாட்டமெய்ப்புறமகத்தைஞ்செழுத்தெண்ணு
மாசிருபதர்வசிப்பதுநைமிசவடவி. (௮)

அத்தகைப்பெருநைமிசாரணியம்வாழாசில்
சுத்தமாதவர்தொல்புகழ்வசிட்டனையெதிர்ந்து
தத்தமன்பினிற்பணிந்துபொற்றவிசிடையிருத்திப்
பத்திமேம்படப்பாத்தியாதிகடந்துபழிச்சி. (௯)

நூலமைப்பினிற்பூசனை நுனித்துநன்காற்றிச்
சீலமாதவச்செல்வனேநின்றரிசனத்தால்
வாலுணர்ச்சியுற்றியாமெலாம்வாழ்வுபெற்றனமென்
றேல்வுறப்பினும்பலமுறையிறைஞ்சினர்விருப்பால். (௧௦)

வணங்குமாதவர்க்கருமறைவசிட்டமாமுனிவ
னிணங்குமோகையினுசிசொற்றிருக்கவென்றருளக்
கணங்கொண்மாதவரிருந்தனர்கைதலைகுவியா
நுணங்குகேள்வியோற்பார்த்தொன்றுநுவறன்மேயினரால். (௧௧)

நைமிசப்படல முற்றிற்று.

# புராணவரலாற்றுப்படலம்.

அரியபல்கலையுமங்கமோராறுமரிறபவுணர்ந்தனைஞானம்
பெரிதுநன்கடைந்தேவுனைசெயவல்லபெரியருட்சிறந்தனைபிறங்கு
மிருவகையாகிப்பரவுறுகாண்டத்தியலும்வேதாகமபுராணம்
வரன்முறைதெரிந்துமேம்படுபுலமைமன்னினைமாதவரோறே. (௧)

ஆதலிற்பெரிதுமேம்படுபொருளாயனைத்தினுமுயர்ந்ததாயாய்ந்திட்
டோதுதற்கரிதாநுண்ணியபொருளொன்றுன்வயிற்கேட்டினிதுணருங்
காதன்மிக்கடைந்தேமாயினமவ்வார்த்தைதக்கதீதமாய்க்கதித்துயர்ந்தோங்கு
மேதகுதெய்வத்தலங்களுட்கலியைவென்றுமேம்படுமுயர்தலத்தே. (௨)

மறைமுடிபுணர்ந்தஞானிகளறிந்துவழிபடுந்தரத்ததாயாண்டு
முறைதருமெல்லாப்பொருளினுமடங்காதுயர்ந்ததாய்த்தனதியலுணர்ந்து
முறையுளிவழிபாடாற்றுநர்வேட்டவேட்டவாறுடன்முழுதருளுங்
குறைவிலானந்தம்வழங்கருண்மூர்த்தியாதுநீகூறெமக்கென்றூர். (௩)

அவ்வுனைகேட்டுவசிட்டனுமேலோனகமகிழ்ந்தாரிடர்வதனஞ்
செவ்விதினேக்கிமுனிவிர்நீர்கேட்டசிவரகசியமுனைக்கின்று
மிவ்வகலிடத்துப்புண்ணியம்பயக்குமெழிற்சிவதலங்களுள்வீடுந்
திவ்வியபோகந்தானுநன்களிக்குந்திருக்கோயில்சிதம்பரமாமால். (௪)

அத்தகுதலத்தினேங்குசீர்த்தேவர்க்கரியமெய்ஞ்ஞானவாகாய
நித்தியமன்றிற்சிவபிரானியதவானந்தநிருத்தநன்கியற்றுஞ்
சித்தநற்கமலத்தேமறைபொருளாய்ச்சிறந்தகாரணமதாய்வேதாந்
தத்தினுற்றெரிக்குஞ்சோதிபுண்டரீகபுரத்திடைத்தரிசிக்கப்படுமால். (௫)

என்றுரைத்தருளும்வசிட்டனைநோக்கிமுனிவரரியம்புவரெந்தாய்
நன்றுநீயுரைத்தமறைப்பொருள்கேட்டுநாமெலாமுளமகிழ்சிறந்தே
மன்றவப்பதியின்மகிமையுமீசன்மற்றவண்மாநடங்குயிற்ற
னின்றவப்பெரியவேதுவுமறியவிரும்பினநிகழ்த்துதியென்றார். (௬)

நற்றவர்க்கரசாயறிவினிற்சிறந்தவசிட்டனம்முனிவர்கணயந்து
சொற்றிடுமுரைகேட்டறிவினிற்சிறந்தீர்தூயநும்மறிவெலாநலத்தை
யுற்றுநோக்குவவாயிருந்தனநலஞ்சேரும்முடையிவ்விருவுலக
முற்றுமுய்ந்திடுதற்கேதுவாம்வகுத்துமொழிகுதுங்கேண்மினீர்முறையால்.

வேறு.

அங்கண்மாநிலத்துள்ளபஃறலங்களுளறவீ
றிங்குநாமெடுத்தியம்பியசிதம்பரமிதுதான்
மங்கைபாகனுரெவற்றிற்குமேலெனவகுத்த
துங்கமேவியபழம்பதியென்பதுதுணிவீர். (௮)

நலத்தினுக்கொருவீடதாய்ஞானநன்குணர்ந்தார்
புலத்தினுக்கதிசயந்தருஞ்சிதம்பரபுரமெய்ப்
பலத்தினைத்தருமதன்பெருமகிமையைப்பரமன்
மலத்தினைத்தெறுமறுமுகக்கடவுட்குவகுத்தான். (௯)

வலங்கொள்வேலுடைக்குமரவேள்மகிமையானிறைந்தே
யிலங்குமற்றதைநந்தியம்பெருந்தகைக்கிசைத்தான்
கலங்கிடாதுமெய்யுணர்ந்தவந்நந்தியங்கடவுள்
புலங்கடிந்திடுசனற்குமாரற்கதைப்புகன்றான். (௧௦)

அருளினீடியசனற்குமாரப்பெயரண்ணல்
பொருளின்மேம்படுபுராணங்கள்பதினெட்டும்வகுத்துத்
தெருளினீடியர்வாதராயணமுனிதேறி
யிருளினீங்குமாறன்னதையினிதருளினனால். (௧௧)

போதநீடியவாதராயணமுனிபுராண
மோதுநீரருட்டலைமைசேர்சூதனுக்குரைத்தான்
மேதையாளர்கடேறிடவதனையம்மேலோன்
காதலிற்சிவாலயந்தொறுங்கட்டுரைத்திட்டான். (௧௨)

தூயமாமுனிவீர்தலந்தீர்த்தங்கடலங்குந்
தேயமெங்கணும்யாத்திரைசெய்தியான்சென்று
பாயசீர்த்திகொள்சனற்குமாரப்பெயர்படைத்தோன்
மேயமாதவவனத்தினைமேயினனொருநாள். (௧௩)

கருணையாலவனுரிதிகாசத்தொடிலங்கும்
பொருவிலாதவிப்புராணத்தையெனக்கெடுத்தியம்பத்
திரமுறச்செவிமடுத்துநன்குணர்ந்தனன்றெளிவு
மருவமற்றுமக்குரைத்தவாசுருக்கினன்வகுப்பேன். (௧௪)

புராணவரலாற்றுப்படலமுற்றிற்று.

# பிச்சாடனப்படலம்.

முன்னர்மாதவத்திரோர்பன்முனிவர்கடேவதாரு
நன்னர்மாதவவனத்தின்வைகினர்ன்னோர்ஞானந்
துன்னுமாதவங்கடேறப்பெருமையினிகமஞ்சொல்லுங்
கன்மமேபிரமமென்றுகடைப்பிடித்தொழுகலுற்றார். (௧)

உத்தமதவத்தினலேதாமிகவடைந்தவொப்பில்
சித்தியினனுஞானத்திருவிழியிலாமையானும்
புத்தியிற்றருக்குமிக்குப்பொருவிறந்தொளிர்சிவப்பேர்த்
தத்துவம்போற்றார்நெஞ்சிற்சாலவுமவமதித்தார். (௨)

வியன்றிரவியங்கொண்டன்னோர்வேட்டுமென்வேள்விவேள்விப்
பயன்றருசிவபிரான்றட்பத்தியைமறந்தொழிந்தார்
நயன்படாநெறியினிங்ஙனுள்பலகழிக்குநீரான்
மயன்முதிர்ந்தனராய்ச்சாலமனத்தருக்குறுவாரானார். (௩)

ஒழுக்கத்தாற்றவத்தாலோம்பும்வேள்வியால்யோகந்தன்னால்
விழுப்பத்தைத்தருங்குணத்தாற்பொறுமையாற்றுறவான்மெய்நூற்
பழக்கத்தாற்சதாசாரத்தாற்சாங்கியப்பயிற்சிதன்னு
விழுக்கின்மந்திரத்தாற்சாபவருளினுற்பெரியம்யாமே. (௪)

வாசகவாச்சியத்தையுணர்பெருவலியினுலும்
பேசிடுஞ்சொல்வின்முட்டைப்பெரிதுநன்கொழிக்குநூலின்
மாசுதீரறிவினுலுமகங்கள்செய்வலியினுலுங்
காசினிதன்னிலெம்மையொப்பவர்க்காண்கிலேமால். (௫)

விளங்கிடுமுலகமெல்லாம்வெறும்பொயென்றுணருமாறு
களங்கறவுணர்த்துஞானங்கலைஞர்க்குமரிதாமந்த
வளங்கெழுஞானந்தானுங்கருமமேபற்றிமாணுந்
துளங்கிடுநீழல்செல்வோர்பற்றியேதொடர்தல்போல. (௬)

கன்மமேசித்தியெல்லாங்கொடுத்திடுங்காயந்தன்னாற்
பன்னுவாக்கதனானெஞ்சாற்பண்ணுவானலனுயர்ந்தோர்க்
கின்னறீர்கருமத்துண்மையறிந்தவனாகுமின்னோன்
றுன்னிடுமிணைமற்றில்லாச்சுகத்தையெஞ்ஞான்றுமன்றோ. (எ)

ஆதலிற்கருமநிட்டைபெற்றளப்பிலராயாழ்ந்த
வேதபாரகர்களானோமெம்மினும்வலிமிக்குள்ளோ
ரோதின்மற்றியாண்டுமில்லையெனவுளத்துன்னினாரம்
மாதவர்பன்னிமாருந்தமையங்ஙன்மதிக்கலுற்றார். (அ)

திருமகளென்னுமாதுமனத்திடஞ்சிறிதுமில்லாள்
பொருவில்சீர்வாணியெல்லார்நாவிலும்பொருந்துநீராள்
சுரகுருமனைவிசோமப்பிரபையைக்கௌதமப்பே
ரிருடிதன்மனைவிதன்னையினையரென்றறிதுநன்றே. (கூ)

பாற்றுமைம்புலத்தரானமுனிவர்தம்பன்னிமாரு
ளாற்றின்மேம்படுவோர்தம்மையினையொன்றறிதுநோன்பு
போற்றுபுகணவர்சேவைபுரிதருபெண்டிர்யாவ
ரேற்றசீர்வசிட்டன்றேவியொருத்தியேயெமைநேர்கிற்பாள். (கா)

அந்தகாசுரனுக்கஞ்சியன்றுசங்கரனார்சீர்கொ
ளிந்தமாதவவனத்திலெம்மிடத்தினிலிருத்தச்
சந்தமங்கலநிறைந்தகௌரியுந்தணந்தாளென்னி
லெந்தமங்கையர்தங்கேள்வர்பணிகெடத்தணந்திராதார். (கக)

நாம்பதிவிரதம்பூண்டேநற்குணமுடையேங்கேள்வர்க்
காம்பணியவையேயன்றிப்பிறசெயலறியேமென்றா
வோம்புறுவிரதசீலமுடையவம்முனிவரில்லார்
தாம்பெரிதகந்தைகொண்டுதருக்குமிக்குற்றார்மன்றோ. (கஉ)

கருமமேபொருளாக்கொண்டமுனிவர்க்குங்கற்பின்மிக்க
திருமனையார்க்குமிங்ஙன்சித்தத்திற்கிளர்செருக்கங்
கொருபகற்கொருநாளேற்றமாய்மிகுந்தேறிற்றும்பர்
நாரவர்தருக்குநோக்கிப்பொறாதுளநடுக்கமிக்கார். (கரு)

உலகெலாநடத்துமாற்றலுடையபேரீசனாயு
நிலவுமாசாரம்யாவுநிறுவுவோனாயுமெல்லாம்
வலியினிச்சித்தாங்காற்றுஞ்சுதந்திரனாயும்வானோர்
தலைமைசேர்கடவுளாயுந்தனிப்பெரும்பகவனாயும். (கச)

சித்தசித்தனைத்தையுந்தன்றிருமேனியாகக்கொண்ட
வித்தகனையுந்தானேவிளங்கிடுபிரபுவையும்
பத்தியில்பாபாசாரம்பாற்றுவோனையுமான்ம
தத்துவநாதனையுந்தடையில்பேரறிவனையும். (௧௫)

கயிலைவீற்றிருக்குமொப்பில்கறைமிடற்றிறைவனன்னோர்
செயலழித்தகந்தைநீக்குநெறியினாற்றேவர்முன்னாப்
பயிலுயிர்க்குறுதியொன்றுபயந்திடத்திருவுளத்து
நயனுடையருளினாற்றானிலையணநாடலுற்றான். (௧௬)

வரம்பெறுதேவதாருவனத்துவாழ்முனிவரானோர்
பரம்பொருள்கருமமென்றும்பயனையக்கருமந்தானே
திரம்பெறீஇக்கொடுக்குமென்றுஞ்சித்தியிற்றருக்குமிக்குப்
புரம்பொடிபடுத்தநஞ்சீர்போற்றிலர்மறந்தொழிந்தார். (௧௭)

தருக்கினதின்மையன்றேதருமசாதனமாமன்னோர்
பெருக்குறுசெயற்குவேதப்பிரமாணமில்லையின்னுஞ்
செருக்குடனிடம்பமென்பதீவினைக்கிரண்டுகண்ணா
யிருக்குமிங்கிவைகெடாமேலுயிர்க்கறிவுதித்தலில்லை. (௧௮)

தருக்கினைப்பெருக்குகின்றவந்தணர்தம்மைவன்மீ
னிருக்குமோர்தடாகம்போற்கொண்டியாவருமஞ்சிமேவார்
திருக்கிளர்தருமமோங்கத்தீவினைப்பாலயாவுஞ்
சுருக்குறவவர்தருக்கைத்தொலைத்திடன்முறைநமக்கே. (௧௯)

ஆதலான்முனிவர்முன்னரவர்கள்பத்தினிமாரெல்லாம்
பேதுறீஇக்கற்புநீங்கிப்பெரிதுமோகத்தினாழக்
கோதில்சீர்வடிவமொன்றுகொண்டுபோகுவமென்றெண்ணி
நாதர்பிச்சாடனச்சீர்வடிவொன்றுநயப்பிற்கொண்டார். (௨௦)

வரநதியோடுகூடிவயங்குசெஞ்சடையைவாசம்
விரவுமல்லிகைமென்றொங்கலாக்கினன்வேணிமேவும்
பொருவிலாப்பிறையைத்தாழைப்பூந்துணர்மலராச்செய்தான்
பிரமர்தங்கபாலந்தம்மையாடியாய்ப்பிறங்கக்கண்டான். (௨௧)

மும்மையிற்பிரிந்தகங்கையொழுக்கினையுலகமூன்றுந்
தம்வயமாக்குநெற்றிக்குறிகளாய்த்தயங்கச்செய்தான்
வெம்மையைச்செய்யுநெற்றிவிழியினைவிளக்கமேவி
வம்மையொடப்பனானென்றிலகமாயமரச்செய்தான். (௨௨)

அச்சுவதரனற்கம்பளன்னெனவழைக்கநின்ற
நச்செயிற்றரவிரண்டைடநகுமணிக்குழையிரண்டா
வைச்சனன்செவியிற்சங்கின்வயங்கிடுகெளத்துநஞ்சை
முச்சகம்வியக்கக் * காலேயகமதாக்கண்டான்முன்னோன். (௨௩)

மங்கையர்கலசக்கொங்கைவயங்குகுங்குமம்போலன்பர்
தங்கணெஞ்சினைவசிக்கச்சண்ணித்தநீற்றின்போர்வை
பொங்குறுசீதவாசச்சந்தனப்பூச்சாமல்கத்
துங்கமால்விடையுயர்த்தசோமசேகரனினைந்தான். (௨௪)

சததளமருவுங்கஞ்சநடுவுறத்தயங்குஞ்சோதி
விதுவின்மண்டலமதென்னவிளங்கிடக்கபாலந்தன்னைக்
கதுமெனவிடக்கரத்திலேந்தியேவலப்பாற்கையி
லிதமுறவொலிக்கும்யாணர்த்தமருகமெடுத்தானெங்கோன். (௨௫)

கடியகார்க்கோடகப்பேர்நாகத்தைக்கடியிற்காமர்
நெடியசூத்திரமதாகவணிந்தனன்புள்ளிநீள்வாற்
கொடியவல்லியத்தோறன்னைக்கோலநுண்டுகிலதாக்கி
யுடையெனக்கொண்டான்யாவுமுடைமையாக்கொண்டநம்பன். ()

வேதத்துக்காதியாகிவிளங்குசீர்ப்பிரணவத்தைப்
பாதத்தின்மிளிர்சிலம்பாத்தரித்தனன்பகரவொண்ணாப்
போதத்தைக்கொடுக்கும்வாய்மைச்சுருதியைச்சரணப்போதிற்
றூதர்க்கானந்தமூறப்பாதுகையாத்தரித்தான். (௨௭)

எந்தைதானிங்ஙன்கொண்டவிணையிலாதோங்குமாட்சிச்
சுந்தரமேனியாலுந்துலங்குசீர்நீற்றிற்றீட்டுஞ்
சந்தமெய்க்குறியினாலுந்தனிவிழிப்பார்வையாலு
முந்துமூவுலகுமோகமூழ்கச்செய்கிற்பானானான். (௨௮)

எம்பிரானணையாற்றூல்யௌவனகுலத்துக்கெல்லா
நம்புறுதெய்வமாநாராயணியெனுஞ்சீர்நாமக்
கொம்பனாள்சத்தியாகிக்குலவினளவடன்மேனி
வெம்புதிசீராயெங்ஙன்விளம்புவன்றவத்தின்மிக்கீர். (௨௯)

செக்கர்வானிறத்துச்சாயறிருந்துபொற்றுகிலுடுத்தாண்
மிக்கமாதவர்க்குங்காமம்விளைக்குஞ்சீருருவமைந்தா
ளிக்குவின்மதன்றனுத்தியானத்தினிலங்குஞ்சோதி
மிக்கபூங்கொடியேபோலவிளங்குறுகாட்சிமிக்காள். (௩0)

* காலேயகம்—கழுத்தணி.

சாயலன்மந்தகாசபல்லவத்தானிலங்கும்
வாயினள்சிலம்பிரேனைசவருவிக்கவிணையாகின்ற
தூயமென்றூவியன்னப்பறவையையிழுத்துத்தோன்றுஞ்
சேயமென்சோதிவாய்ந்ததிருப்பதாம்புயத்தண்மன்னே. (ருக)

சித்தசன்சீர்த்தியோடுதிறற்பிரதாபந்தன்னை
யொத்தசெம்பஞ்சுதோய்ந்தவெண்ணகவொளியண்மார
னத்திரம்பொதிந்ததூணிபோன்மெனவழகுவாய்ந்த
மெத்தொளிமணிகொள்சங்கவியனுறுப்புடையண்மாதோ. (ருஉ)

சீருடைத்திறல்கொள்வேழத்துதிக்கையிற்சிறப்புவாய்ந்த
வூருவின்சலனந்தன்னையுடையண்மிக்கொளிசெய்கின்ற
வேருடையெகினப்புள்ளொடிலங்குசீர்ப்புளினம்போலுஞ்
சாருமேகலைபொருந்துஞ்சகனதேசத்தண்மன்னே. (ருரு)

வழுவலுநீவிபந்தமெழில்கொண்மும்மடிப்புவாய்ந்து
குழிதருநாபிச்செவ்விகுலவுதன்னுதரநேர்வார்
விழிதமக்கிலக்காகின்றதெனவெழுநாணம்விஞ்சிக்
கழியிறக்குற்றுமேவுங்காட்சிசாறலையண்மாதோ. (ருச)

வயிற்றுடனொட்டித்தோன்றுங்கருமைசாலுரோமவல்லி
புயற்பெருந்தோற்றங்காட்டவதன்றலைமுளைத்துப்பூத்த
வியத்தகுபூங்கொத்தென்னவிளங்குபொற்றனத்தள்காந்தி
நயப்புறுநதியிற்றோன்றும்வீசியினைகுபொற்றோள். (ருரு)

வளைகண்மூன்றுறப்பொருந்திமங்கலம்வாய்ந்துகற்றோ
ருரைகளுக்கடங்காதியாணர்சீசங்குபோன்றொளிர்கழுத்தா
டிருநலங்கனிந்தசோதிமுகமதிகாலுஞ்சீத
மருவுவெண்ணிலவுபோலவயங்குபுன்சிரிப்புவாய்ந்தாள். (ருசா)

காமசாகரத்திற்றோன்றுங்கதிர்கிளரதரமென்னும்
வாமமார்பவளவாயள்வதனச்சீர்கனிந்துதூற
லாமெனவயங்குமூக்கேரணியினிற்றூங்குமுத்தா
ணுமவேணிலைக்கண்ணாடிபோன்மெனநகுகதுப்பாள். (ருஎ)

கண்ணொளிகடிதுபாயமண்டலாகாரமாகி
நண்ணுவபோல்விளங்குநகுமணித்தோடுபூண்டா
ளெண்ணிலாமதனபாணங்களுக்குறுவலியையீயப்
பண்ணுகாரணமாயோங்குங்கடைக்கணேர்ப்பணைப்புவாய்ந்தாள். ( )

அட்டமிப்பிறையைச்சாலவவமதித்திடுநுதற்கட்
பட்டிகையொடுவயங்குந்திலகத்தள்கழுநீர்ப்பைந்தா
ருட்பொதிந்திலங்குதம்மிலத்தினாலேர்வாதேவில்
லிட்டெழுமேகந்தன்னைச்சாலவுமெள்ளாநின்றாள். (௫௯)

மதிகளோர்நூறுகோடிவழங்கிடுபிரபைமானப்
புதுநிலவுமிழும்யாணர்கனிந்தபூரணமுகத்தா
ணதிவளர்சடிலத்தெம்மானன்னுதல்விழித்தீச்சுட்ட
சுதனைமுன்போலவாக்குந்தோற்ற*மாதுமைசிறந்தாள். (௬௦)

காமவேள்முனிவர்தம்மையகப்படுத்திடுவான்கண்ட
மாமைசேர்°மாகுபோன்றுமாமாயையமயக்கும்வண்ண
நாமவிச்சைகளனைத்துமொருவழித்தொகுத்துநல்கு
மேமமாருருவுபோன்றுமிறப்பவுமுருச்சிறந்தாள். (௬௧)

திருமகன்மாயமோகநாட்டியஞ்செயவமைத்த
பிரதமவிரங்கந்தன்னைப்பெரிதலங்கரிப்பாளானாள்
சுரதவின்கரணமெல்லாந்தோற்றுகாரணமாய்மிக்க
விரதர்யாவருக்குமிச்சைமிகவிளைவிக்கலுற்றாள். (௬௨)

மாதர்சாலின்பலீலையேவடிவெடுத்ததென்னக்
காதலாங்கடலுட்டாழ்ந்தாடவரெலாங்களித்துத்தத்தம்
போதமாண்டிடுமொழிங்ஙன்வடிவொன்றுபொருந்திநின்றா
ளாதிநாராயணிப்பேர்மோகினிச்சத்தியம்மா. (௬௩)

ஒருபரிக்கிரகசத்தியாகியமாயோனுற்ற
திருவுருவதனைக்காமற்றெறுபிரான்றிருக்கண்சாத்திப்
பெரிதுளமகிழ்ச்சிபூத்துப்பிறங்குசீர்த்தேவதாருப்
பொருவின்மாதவவனத்துப்போதரப்புந்திசெய்தான். (௬௪)

பிச்சாடனப்படலமுற்றிற்று.

# தேவதாருவனப்படலம்.

விருப்பொடுவெறுப்பிலாச்சம்புமேதகு
இருப்பயிறருப்பைசாறேவதாருவென்
றுரைப்புறுவனத்தினையுயவலூர்தியான்
மருக்குழலவளொடும்வல்லையெய்தினான். (௧)

* மாதுமை—அழகு. ° மாகு—வலை.

உய்திறமுணர்விலாவுறுவர்காலையிற்
செய்திடுகருமநூன்முறையிற்செய்யியர்
மெய்திகழாசிரமத்தைவிட்டகன்
றெய்தியவற்றமோர்ந்திறையுட்போயினன். (உ)

கருமமேபரமதாக்கொண்டகாமர்நற்
பிரமசாரியர்களெம்பிரான்றன்றேசுசால்
பொருவிலாத்திகம்பரப்புனிதக்கோலங்கண்
டருநகைநிலவெழவயர்தந்தாரரோ. (௩)

ஆசிரமத்தினுளுறையுமாரொழிற்
பாசிழைச்சாயன்மாதவத்தர்பன்னியர்
தேசினிற்கற்பினிற்சிறந்துளார்செலு
மீசர்பேரெழிலுருவினிதுநோக்கினர். (௪)

தடையிலாவறிவுடைச்சம்புமோகினி
யுடனவணேகிடாமுன்னரோர்மதன்
றொடர்புறுமோகனகுணங்கடுன்னின
மடமிகுமவர்கடம்மனத்தினென்பவே. (௫)

பனவர்தம்பன்னிமார்பயிக்கமூர்த்தித
னினியபேரெழிலுருவினிதுநோக்குகண்
ணனியதன்வயத்தவாய்நடப்பப்பேர்கிலர்
மனமிகவுருகிடவியப்பின்மன்னினர். (௬)

மறைமுடிவினிற்றிகழ்பரமன்வானுத
லிறைவிநாராயணியோடங்கெய்தலாற்
குறைவில்சீர்முனிவராசிரமங்கோதகன்
றுறுநலமுறீஇப்பரிசுத்தமுற்றதால். (௭)

கைக்கபாலத்தினர்விழிகள்காமுறு
நக்கராமிவரொருநாரியோடுறீஇப்
புக்கனரொன்கொலோபுந்திகொள்குறிப்
பிக்கண்வந்திடற்கெனவெண்ணுற்றாரரோ. (அ)

முனிவர்தம்பன்னியர்முடுகிவீதியி
லனகர்தம்மெழிலுருவமையநோக்குறும்
வினையினராயினர்விமலரன்னுழி
யினிதுறவெழுப்பினர்தமருகத்திசை. (௯)

கன்னமூலங்களைவசிக்கக்கண்ணுத
வின்னிசைபடத்தமருகத்தெழுப்பிசை
மன்னுசீராசிரமத்தைச்சாலவுந்
தன்வசமாக்கியெவ்வழியுஞ்சார்ந்ததால். (௧௦)

சதிபடத்திருவடிபெயர்த்துந்தற்பரன்
விதியுளியபிநயம்விதம்படச்செய்தும்
பதிவிரதத்தினிற்றருக்கும்பாசிழை
மதிமுகத்தியர்க்குமால்வருவித்தேகினான். (௧௧)

ஒருபெரும்பிச்சகருவந்துவந்தன
ரிருடிகள்பன்னிகாள்பயிக்கமேந்திநீர்
விரைவின்வந்திடுகெனவிளித்தல்போலிசை
திரையினிற்றமருகத்தெழுந்துசென்றதே. (௧௨)

துடியொலிதாபதத்துறையுந்தோமில்சீர்
மடவனநடையுடைமாதரார்செவிப்
படுதலுங்காதன்மீதூரப்பண்வழிக்
கடிதுசென்றண்மினர்கபாலமூர்த்தியை. (௧௩)

ஒருபொழுதினுமுனருறப்பெறுதவோர்
வரமுறுமோகனவிசையின்மாதவர்
திருமனைக்கிழத்தியர்சித்தம்யாவையும்
பெரிதிசைவயத்தனவாய்ப்பிறழ்ந்தவே. (௧௪)

மங்கையர்கூட்டமிக்குறலின்மாரற்கா
யெங்கணாயகன்றுடியிசையடக்கியே
துங்கநாராயணித்தோகைமீதுகண்
ணங்குசாத்தினன்மயலவர்க்குச்செய்யவே. (௧௫)

நிருமலன்றிருக்குறிப்பறிந்தநேரிழை
பெரிதுமாயத்திறத்துறுவர்பெண்டிர்த
மரியகற்பழித்தனளாசைமேம்படப்
பருவரலுழந்திவைபகர்தன்மேயினார். (௧௬)

நம்வசத்தன்றியெங்நெஞ்சநக்கனார்
தம்வசத்தாகுவதடைஉடந்தென்பா
ரம்மவீததிசயமாமென்பார்குழீஇ
வம்மினாடுதுமிதன்வண்ணம்யாமென்பார். (௧௭)

நந்தம்வாள்விழிக்கிவணமண்ணாநக்கனா
ரிந்திரப்பேருருவிலக்குறுமுனம்
புந்தியின்வலியுநல்லொழுக்கும்போனதிங்
கெந்தமாதிரத்திலென்றறிகிலேமென்பார். (௧௮)

* சவியினையிருணனிவசிக்குந்தன்மைபோ
லிவர்மயல்பெரிதுமெம்மறிவையீடழித்
தவசமதியற்றிடுமாகுலங்கொடும்
பவமிதின்மேலதுபார்த்திலோமென்பார். (௧௯)

யாவர்கொலறிகிலெம்பயிக்கமேற்றிட
மேவினரொருவர்நாம்விலக்கவெண்ணுதல்
பாவமென்பார்முறைபயிக்கமீவதே
யாவதென்பாரினுமாய்வதுண்டென்பார். (௨௦)

அதிதியைக்கண்களானோக்கலாமென்பா
ரதிதியினோடுபேச்சாடலாமென்பா
ரதிதியையினிதுபசரிக்கலாமென்பா
ரதிதிபூசையினரிலணுகுறுதென்பார். (௨௧)

மன்றநங்கணவர்கள்வருக்கவித்திற
நன்றுமுன்கேட்டனநாமெலாமென்பா
ரின்றுநாமையமுற்றிதன்றிறத்திவ
ணின்றுநாடுதன்மிகைநிச்சயமென்பார். (௨௨)

இனையனபலமொழிந்திதயந்தேற்றியம்
முனிவரர்பன்னியர்வீதிமுந்தியும்
மனைகளுட்பலகணிவந்துநின்றுமப்
புனிதர்பொற்பினைவிழிபுதையநோக்கினார். (௨௩)

இற்பணிமறந்தனராகியெம்பிரான்
சிற்பரவடிவமேநோக்கிச்சேயிழைக்
கற்பகவல்லியன்னார்கள்கண்கடா
மற்பமுமிமைப்பிலராயினாரரோ. (௨௪)

தங்களுள்ளத்துறச்சாருமாதர
மங்கணாந்திடமிகவரிமதர்க்கணார்
செங்கையிற்பயிக்கமீந்திடற்குச்சேறல்போ
லெங்கணாயகன்புடையெய்தினாரரோ. (௨௫)

* சவி—ஒளி.

பண்டெலாமிம்முனிபன்னிமார்மயல்
கொண்டழிதரநிலைமயக்கல்கூடிலாத்
திண்டிறற்காமனச்செவ்விநோக்கிச்சேர்ந்
தண்டவாணன்சரணம்புநாவினான். (௨௬)

விரகசோகம்மிகவிமலனார்புடை
மருவியங்கவர்புரிகிறியின்மங்கையர்
பெரிதுமால்கொண்டரோபிறங்குமன்னவ
ரரியபேருருவெழில்விழியினார்ந்தனர். (௨௭)

நிருமலர்பேரொழினோக்கிநீடுறப்
பரவசமடைந்தனர்பயிக்கஞ்சிந்திடக்
கரவளைகழலுறக்கலன்களோடுடை
யுருவினின்றுகுதரவுருகினாரரோ. (௨௮)

வேறு.

அச்சுதனாதிவானோர்நேறருமமலவீச
னிச்சையையெழுப்பமோகவிருங்கடற்படிந்துமீட்டுப்
பொச்சமிலறிவெழுப்பச்சிவானந்தப்புணரிதோய்ந்தும்
பிச்சர்களானார்கற்பிற்றருக்குமபபேதைமின்னார். (௨௯)

இந்தநீர்மையினான்மாதருருதிறத்துணர்வுமெய்தச்
சுந்தரமேனிவள்ளறேமிலாட்டயர்ந்துசூழ்ந்திட்
டந்தமாமோகவாழியழுந்திடுகின்றவன்னோர்
பந்தியைவவ்விநீங்கியப்புறம்போயினானல். (௩௰)

பாதுகைபெயர்த்திட்டையனுடலேபயின்றவ்வண்ணம்
வீதிகடோறுமேகியையந்தேர்விருப்பினன்போ
னாதமிக்கெழுந்துசெல்லத்துடியறைந்துநடந்தான்
டாதரங்கவனைக்காணார்துணுக்குற்றுவறிதுநின்றார். (௩௧)

அனிவசனீயராற்றவெகுளுறுநீரரம்ம
தினையளவேனுமங்கண்விருப்பிலர்கடிதுசென்று
ரினைபணாவிரும்பியில்விட்டெய்தியதறிவன்றென்று
புனையிழைமாதர்யாரும்புலம்புற்றுச்சாம்பினாரால். (௩௨)

சுத்தமெய்ஞ்ஞானமேனிச்சோதிதன்பாலில்வைத்த
சித்தமாமையறம்மைச்செலுத்திடத்தெரிவைமார்க
ணித்தர்போந்திசையைநோக்கிப்போகிநீளிடையிலன்னோர்
தத்துவாதீதமேனிதரிசித்தங்கணித்தாச்சார்ந்தார். (௩௩)

பயிக்கத்துக்கென்றுவந்தெம்மறிவினைப்பலிகொண்டுள்ள
மயக்கத்தைமாறீந்தெங்குப்போகின்றீர்மாயம்வல்லீர்
முயக்கத்தைதயருளீராகிற்செலவொட்டோமெனறுமுந்திக்
கயக்கத்துப்பலங்கழ்த்திக்கபாலியைத்தடுத்துநின்றார். (௩௪)

சலமிலரானஞானசங்கரர்தருக்குமாதர்
குலமடநாணமச்சம்பயிர்ப்புறக்கொண்டுபின்னு
நலமிலர்போலப்போகநாரியர்காதல்கூர்தந்
துலைமெழுகென்னவுள்ளமுருகினர்தொடர்ந்துபோனார். (௩௫)

காந்தசன்னிதியைமேவுமயமெனக்காமற்காய்ந்த
வேந்தல்சன்னிதியைமேவுமிளமுலைத்துவர்வாய்வேற்கண்
மாந்தளிர்மேனிமுத்தநகைமதிவதனமஞ்சங்
கூந்தல்வேய்த்தோளார்சாலவசிப்புண்டுநிலைகுலைந்தார். (௩௬)

இலைநமக்கொப்பென்றெண்ணியிறுமாந்தவிலைகொள்வேற்கட்
குலமடமாதர்காமக்குரவையிற்படியவஞ்ச
மலிபெருமாயைநீரான்மயக்கினன்மயக்கநீக்கி
யலகில்சின்மயவானந்தமுயிர்க்கருளமலவள்ளல். (௩௭)

பலியிடுங்கருத்துப்பொச்சாந்தருந்தவர்பன்னிமார்கண்
மலிபெருங்காமலீலைநோக்கியேமயங்கிநிற்ப
விலைமலிசூலத்தெந்தையீந்திவிர்பயிக்கமென்று
சொலிநகையாடியன்னோர்துயர்தரக்கரந்துபோனான். (௩௮)

கரந்தருண்ஞானனந்தவள்ளலார்வடிவங்கண்ணுந்
திரிந்ததம்மனமுநீங்காமரபினுற்றெறிவைமார்க
ளரந்தையினோடுமீண்டங்கடைந்துமந்திரங்கடோறும்
வரந்தருபணிமறந்துமயல்கோட்பட்டார்போன்றுற்றார். (௩௯)

வேலையங்கதிற்புறம்போம்விழுத்தவமுனிவர்யாருங்
காலையினியதிமுற்றிமனைப்புரிகருமமோம்பச்
சாலுமுட்டருக்கினோடுதவவனந்தணந்தங்கெய்தி
வாலறிவிழந்துசாம்புமனைவியர்தம்மைக்கண்டார். (௪0)

காண்டலுங்கதமுட்டோன்றநிகழ்ந்ததென்னென்றார்காதன்
மாண்டசீர்மக்களிங்குப்பலிதேருவான்போல்வந்தொ
ராண்டகையிவர்க்குமாலீந்தகன்றனனென்றாரன்னோர்
யா ண்டையனென்றுநேடியேகமாதருந்தொடர்ந்தார். (௪௧)

போனமாதவர்கணூராயணியொடுபொருந்தியொப்பின்
ஞானவாரிதியோர்தூயமரநிழனண்ணக்கண்டார்
மானமுள்வெதுப்பச்சொல்வார்மதனலீலைகளினுலு
மேனியினெளியினுலும்வியத்தகுநீரனின்னேன். (சஉ)

இவனொருமருங்குநின்றுளிணையில்பேரழகுவாய்ந்தா
டவமயல்பெருக்கிக்கண்ணூற்சாலவும்வசிக்கின்றாளென்
றுவமையிலிருவர்சீனையொருவருக்கொருவரோதி
யவணனிசினந்துபோந்தாரறவுமாலடைந்துநின்றூர். (சங)

தணிவிலாவெருளிதூண்டத்தம்முனநின்றூர்தம்மை
மணிவிழிக்கடையான்மாயவிலாசத்தான்மயக்கிநாரா
யணிமிகுமோகவாழியழுந்திடச்செயலுமன்னோர்
குணமிகத்திரிந்துகாமக்குளைகடற்படிந்தார்மன்னோ. (சச)

கற்றநூன்மறந்தாரோம்புந்தவவொழுக்கங்கண்விட்டார்
மற்றிவளெனக்கெனக்கேயுரியளாமெனமாறுடிச்
சிற்றிடைக்குறுகண்செய்யும்பெருமுலைத்தெரிவைமாட்டுப்
பற்றுவைத்தவசராணூர்காமத்திற்பழிவேறுண்டோ. (சரு)

அரன்வசமானூரந்தவெழின்மிகுமமர்செய்வாட்கட்
டெரிவைநல்லார்களெல்லாந்திறம்பிடச்சித்தமங்கட்
பெரிதுமம்முனிவர்யாருமரிவசமானூர்பெட்பாற்
றிருவமாவனம்வேள்சாலையீதெனத்திரிந்ததாலோ. (சசா)

இருடிகள்யாருந்தத்தமகளிரினிழுக்குற்றிங்ஙன்
விரதவாசாரம்விட்டுத்துயருறவிமலமூர்த்தி
பெரிதவண்மயக்கும்யாணர்மோகினிப்பெண்டினேடு
விரைவினின்மறைந்தானன்னோர்வியப்பொடுதுனுக்கமெய்த. (சஎ)

மயக்கமென்மெலவகன்றுதொல்லுணர்வெய்திமற்றக்
கயக்கெடுமதியராயமுனிவரர்கைதவத்தாற்
பயிக்கமேற்கொண்டுபோந்துவிரதத்தைப்பங்கஞ்செய்த
வயக்கருமத்தையெண்ணிமானத்தீச்சுடவெருண்டார். (சஅ)

பழியினுக்கஞ்சான்போந்துவிரதத்தைப்பங்கஞ்செய்த
விழிதகைதருக்குநீங்கவபிசாரவிட்டிவேத
வழியுறப்புரிதுமென்றுவல்லையிற்கலப்பைகோலிக்
கழிசினத்தயர்ந்தார்வேள்வியெழுந்ததுகைம்மாவொன்றே. (சகூ)

கூரியதுதன்னைக்காலாற்காலனைக்காய்ந்தசீர்த்தி
யாளனுழைவிடுத்தாரையன்வெளிநின்றங்கதைக்கிழித்தே
யுரியையுத்தரீயமாகவணிந்தனனுறுவர்காணூஉ
வெரிவிழித்தரக்கையோமக்கனலிடையெழுப்பிவிட்டார். (௫0)

தழல்விழிச்சொரியவந்ததறுகண்வள்ளுகிர்கொள்பேழ்வா
யுழுவையைக்கிழித்துத்தோலையுடையெனத்தரித்தானெந்தை
யெழிலுடைச்சூலமொன்றையிருடிகளெழுப்பியேவ
வழகுடைக்கரமற்றொன்றிலையனேற்றருளினனால். (௫௧)

உருத்தவரெழுப்பிவிட்டவுரகங்கள்சீறியெய்த
விருப்பினுபரணமாகவுருத்திரன்றரித்தான்வெய்ய
நெருப்பினைப்பிறப்பித்தன்னோர்விடுத்திடநிமலமூர்த்தி
திருக்கரமொன்றிலன்னோர்திடுக்கிடவேந்திநின்றான். (௫௨)

உறுவர்பின்னுயரநோக்கியெரியெழவிழிக்குமோர்வெந்
தறுகண்மாபூதமொன்றைத்தழலினின்றெழுப்பிவிட்டார்
மறமிகுந்ததுவிரைந்துவருதலுமொருதன்றாளா
லிறையவன்மிதித்துநின்றானிருடிகணடுக்கமுற்றார். (௫௩)

அவிசாரத்தானேசெய்தவபிசாரகருமம்யாவுஞ்
சிவனார்தம்வலியினாலேசிதைந்துவீண்செயலாய்மாளத்
தவமோகநீங்கஞானந்தலைப்பட்டுமுனிவர்து
நவமாகிவிளங்குகின்றதெனவிறும்பூதுநண்ணி. (௫௪)

மந்திரத்தோடுசாலப்பயன்றருமாட்சித்தாய
தந்திரக்கிரியையாவுங்கடந்ததுசாற்றநின்ற
முந்துதத்துவமாயுள்ளதனைத்திற்கும்வேறாய்மூத்த
திந்தமெய்ச்சிவமென்றுண்மையறிந்துநன்கேத்தலுற்றார். (௫௫)

இச்சையாலெல்லாந்தோற்றிநிறுத்திமீட்டொடுக்குஞான
விச்சையோய்நமவனாதிவிமலனேநமவிளங்குஞ்
சச்சிதானந்தரூபநமநமசம்புதாவில்
பொச்சமார்மாயாதீதநமநமபொருவில்சோதி. (௫௬)

மாயிருஞாலநீயேவாரியானதுவுநீயே
காய்தருமங்கிநீயேவாயுவாகாயநீயே
பாயிரும்பரிதிநீயேபனிமதிக்கடவுணீயே
மேயவாருயிர்கணீயேநீயலாற்பிரபுவேறியார். (௫௭)

தக்கனார்வேள்விப்புக்கதேவர்கள்யார்க்குந்தண்ட
மிக்குறப்புரிந்துகாத்தாயந்தகாசுரன்வெருண்டு
திக்குளார்நடுங்கத்தீமைதிருத்திடச்சூலந்தன்னாற்
புக்கடர்த்தவன்வணங்கப்பூதநாயகப்பேறீந்தாய். (௫௮)

மதத்தினாற்கயிலைவெற்பையெடுத்தவாளரக்கன்வட்கப்
பதத்திருவிரலானூன்றிப்பாடல்கேட்டுய்யக்கொண்டா
* யதத்தினையிழைத்தவேள்விக்கிறையவன்றயரவன்னாட்
கதத்தவன்றனதுவாகுத்தம்பனங்கண்டுகொத்தாய். (௫௯)

அகத்தினின்மறமிகுந்தங்ககங்கரித்தெழுந்துசாலச்
சகத்தினைவருத்துந்தீயசலந்தரற்றடிந்தாயன்னாண்
மிகத்துயர்வினைத்துவாய்மைவேந்தர்க்குக்கொலைசூழ்பொல்லாப்
பகைத்திறற்பரசுராமற்கருள்வரும்பரிசுசெய்தாய். (௬0)

அளவைகட்கதீதமானவுனதியலறிவினாலே
முளமதித்துணர்வதெங்ஙன்கருமவாதனையினுற்ற
பளகுறுத்தருள்வாயென்றுபழிச்சினார்முனிவர்நஞ்சைக்
களனடைத்தமரர்க்காத்தசிவபிரான்கருணைகூர்ந்தே. (௬௧)

வாங்கியநுசுப்பின்வீங்குமணிமுலைமகடூஉயாக்கை
நீங்கியம்மாயனென்பானிகரிலாவொருதொன்மேனி
தாங்கினனன்றுதித்துநிற்பச்சராசரமனைத்துநீங்கா
தோங்குதன்சொரூபந்தன்னையுறுவர்க்குக்காட்டியோதும். (௬௨)

தூயராமுனிவீருங்கடருக்கினைத்தொலைத்தாட்கொள்ள
மாயநீர்மையினாலிங்ஙன்மற்றியாமாடல்செய்தே
நேயநீர்மையினானீவிர்நிகழ்த்தியதுதிகொண்டேமெய்
யரயநஞ்சொரூபங்காட்டிவெளிநின்றேமும்முனம்மா. (௬௩)

நித்தியானந்தமேவிவாழ்கநீரேவநேர்போ
மத்தமால்யானைரூபமதத்தினையழித்தோமற்றைச்
சித்திரகாயரூபவுமதகங்காரஞ்செற்று
மெய்த்துநும்மோகரூபவியாளத்தையணியாக்கொண்டேம். (௬௪)

நீர்படைத்துந்துங்கோபவடிவமாநெருப்பைநந்தஞ்
சீர்படைத்திலங்குகையிற்றரித்திட்டேமுங்கட்மைப்
பேர்படைத்தொளிருமானையங்கையிற்பிடித்தேம்பாவப்
போர்படைத்திடும்பூதத்தைமிதித்திட்டேம்பொருமத்தாளால். (௬௫)

---

* அதம்—கொலை.

அவகன்மமகங்காரம்பொய்யறிவெலாமகன்றீர்ஞானச்
சிவதன்மம்பேணியெம்பாற்பத்திமைசெய்துஞானந்
தவநன்குபெறுகநுந்தந்தரும்பத்தினிகளெல்லாம்
பவமன்றநீங்கியுங்கட்குரியராய்ப்பயின்றுவாழ்க. (சுசு)

இன்னணமருளியெங்கோன்முனிவரர்ஞானசித்தி
துன்னிமெய்வாழ்வுகூடத்தூயவானந்தநித்த
சின்மயநிருத்தந்தன்னைத்தெரிதரத்தரிசிப்பித்தான்
பன்மறைமுனிவர்கண்டுசிவானந்தக்கடற்படிந்தார். (சுஎ)

மோகமாசகலஞானம்விளங்கியொர்முடிவிலாமெய்ப்
போகவாழ்வுடையரானமுனிவரர்பொய்தீர்கித்தப்
பாகமார்குகையுணிர்த்தமூர்த்தியைப்பதிட்டைசெய்தா
ரோகனும்மயக்கலுன்னியிருஞ்சிறையிடுவார்போல. (சுஅ)

அவநெறியகற்றிஞானவானந்தவாழ்வுகூட்டுஞ்
சிவநெறிநிறுத்தியொப்பின்முனிவரைத்தேவதாருத்
தவநிறைவனத்தினின்றுஞ்சாரதகணங்கள்சூழப்
பவநெறியனுக்குமாதிபகவன்மாலொடுமறைந்தான். (சுக)

மூவருமறிதலேற்றமுழுமுதற்பரமன்றுரு
காவனத்தவரையாண்டவியத்தகுகாதைசொற்று
நாவலர்பரவுசீர்த்திநாகர்கோனடங்காண்பாக்குத்
தாவறவினிதுநோற்றுவரம்பெறுசரிதஞ்சொல்வாம். (எ0)

தேவதாருவனப்படலமுற்றிற்று.

# அனந்தப்படலம்.

அமரர்போற்றிடத்திருக்கயிலாயத்தையடைந்து
கமலைகேள்வனைப்பதிசெலக்கடைக்கணித்தருளிச்
சமலருய்ந்திடத்தனிப்பெருங்கருணையங்கடலாம்
விமலநாயகனோலக்கமேவிவீற்றிருந்தான். (க)

துங்கமேவுமால்கயிலையைத்தணந்துபோய்த்தொலைப்
பொங்குபாற்கடலமளியையடைந்தொளிபொதுளுங்
கங்கைசூடியத்தாருகவனத்திடைக்காட்டுஞ்
சங்கைதீர்நடவசத்தனாய்ச்சார்ந்துவீற்றிருந்தான். (உ)

தாண்டவப்பெருங்காட்சியிற்சார்பசுபோத
மாண்டுநித்தியானந்தயோகத்திடைமன்னி
நீண்டமாயவனிட்களாதீதநேர்ந்தமர
வாண்டுவாழ்திருமாதுகண்டதிசயமடைந்தாள். (௩)

ஒலிவழங்குருவிடத்துறுதீபமோரசைவற்
றிலகுநீர்மையிற்சலிப்பறநிட்டைவீற்றிருக்குஞ்
சலசலோசனமூர்த்தியைத்தன்னிகரனந்தன்
பலநெடுங்கணாற்பார்த்ததிசயித்திவைபகரும். (௪)

உரைவழங்கிலனென்னுடன்றேவியையுற்றுப்
பரிவினோக்கிலனெம்பிரானசைவறப்பயில்வா
னொருபகற்கணுமுன்னியான்காண்கிலர்வொருபே
ரரியகாட்சியாம்புதுமையீதாகிடுமம்மா. (௫)

இன்னநீர்மையினிருவருமகத்துளெண்ணுற்றுப்
பின்னர்மாதவன்றிருமுகநோக்கியெம்பெரும
வுன்னையாவருந்தியானமுற்றானந்தமுறுவா
ரென்னைகாரணந்தியானமுற்றிருத்திநீயென்றார். (௬)

வேறு.

பனித்துழாய்மோலிவண்ணப்பன்னவனவர்சொற்கேளா
வெனக்கினியவரோகேண்மினிணையில்சீர்த்தேவதாரு
வனத்தொருசிவபிரான்செய்மாநடங்கண்டேன்மற்றத்
தனிப்பெருஞ்செவ்விதொட்டென்கருத்ததிற்றங்கிற்றென்றான். (௭)

விண்டிவ்வாறுரைப்பக்கேட்டவனந்தனுந்திருவுமேலோய்
பண்டுதாருகவனத்திற்பரன்புரிநடனங்கேட்பான்
மண்டுமாதரவுகொண்டேம்வகுத்தருளென்றுவேண்டக்
கொண்டன்மேனியனிருத்தவரலாறுகூறியிட்டான். (௮)

ஆனந்தக்கூத்தின்வாய்மையரிசொலக்கேட்டனந்தன்
றானந்தக்கூத்துக்காணவாதரங்கொண்டான்சாலப்
பானீக்கமலச்செங்கைப்பண்ணவன்பரிசோர்ந்தீச
னானந்திரெழுத்தோரைந்துமவன்செவியறிவுறுத்தான். (௯)

வேதமந்திரங்கட்கெல்லாமாதியாய்மேலைவீடங்
கோதுவார்க்கீயுமுத்தியொப்பிலைந்தெழுத்துமுள்ளக்
காதலிற்பெற்றனந்தன்விடைகொண்டுகைலையெய்தி
யோதுமற்றதன்றாழ்வைகியருந்தவமுஞற்றலுற்றான். (௧௦)

காலினையுட்கொள்ளாமேயாயிரத்திரட்டிகண்ணு
மேலுயர்த்தொளிசெய்பானுமண்டலமேவவைத்து
நாலுபாலினுஞ்செந்தீயைவளர்த்ததனுப்பண்மேவிச்
சாலநூறாண்டுகாறுந்தவமரிதுழந்தான்மன்னோ. (௧௧)

அருந்தவமினையநீராலுழந்திடுமனந்தனுள்ளந்
திரிந்திடாநிலையையிந்தவுலகொருமூன்றுந்தேறப்
புரிந்திடநினைந்துநாதன்விதியுருக்கொண்டுபோந்து
பெருந்தவம்புரியுமன்னோனெதிருற்றுப்பிறங்கநின்றான். (௧௨)

அஞ்சத்தினேறிப்போந்துதன்னெதிர்நிற்குமந்தக்
கஞ்சத்தோன்றன்னைச்சேடன்கண்டனன்மதியானாகி
நெஞ்சத்திற்சிவன்றானன்றிநேயத்தானோற்பானானான்
வஞ்சத்தைமேற்கொண்டங்கண்மறைமுதல்வகுக்கலுற்றான். (௧௩)

யாதுவேண்டினைச்சேடயாருநோற்பரியவிந்த
மாதவமுழக்காநின்றாய்வரந்தரவந்தேம்வேண்டிற்
றோதுதியென்னவுன்னாற்கொடுப்பதற்கொல்வதன்று
போதிநீவந்தவாறேயென்றுபின்னரும்புகன்றான். (௧௪)

சம்புவின்பரமானந்ததாண்டவந்தரிசிப்பான்யா
னிம்பர்மாதவஞ்செய்கின்றேனிப்பிறப்பினிலப்பேறு
நம்புமெற்கெய்தாதாயினடுத்தசன்மத்துநண்ணும்
வெம்புபாவனைதப்பாதுசித்திக்குமென்னும்வேதம். (௧௫)

அனந்தனிவ்வாறுகூறக்கேட்டிடுமயனசித்து
மனந்தனக்கதீதமானவானந்தநடனமற்றுன்
சினந்தவிர்தவத்துக்கெய்தப்பெறுங்கொன்மற்றதனைச்சேர
நினைந்ததுமதியன்றென்றுநிந்தித்துமறைந்துபோனான். (௧௬)

இறையவன்மறைந்துபோகவிணையில்சீரனந்தனென்பா
னுறுதிகொண்மனத்தனாகியுக்கிரதவத்தைச்செய்தான்
கறைமிடறணிந்தமேலோன்றரிசனங்கொடாமைகண்டு
குறைசெய்துதலைகடம்மைக்கொழுங்கனலிடையோமித்தான். (௧௭)

செயற்கருமுறையாலிங்ஙன்சேடன்மன்செய்யாநின்ற
வியத்தகுதவத்தையெம்மான்கண்டுளமகிழ்ச்சிமேவி
வயப்பெருவிடைமேல்கொண்டுமலைக்கொடியோடுந்தோன்றி
நயப்புறத்தரிசனத்தைநாகர்கோற்கருளினானால். (௧௮)

சயிலாதிமுதலாம்பூதகணம்புடைசாரத்தோன்றுங்
கயிலாயநாதன்றனைக்கண்ணுறக்காணுமுன்ன
மெயினீங்குதலைகண்முன்போன்முளைத்தனவியாளப்புத்தே
ளுயலானேனென்றுவிம்முற்றிறைஞ்சினன்றுதிக்கலுற்றான். (௧௯)

திகழிராசதகுணத்தாற்சகத்தினைச்சிருட்டிசெய்துந்
தகுதமோகுணத்தினாலேயனைத்தையுஞ்சங்கரித்து
மிகுதருசத்துவப்பேர்வியன்குணத்தானிறுத்து
நிகழ்திரிமூர்த்தியானநின்மலப்பொருளேபோற்றி. (௨0)

ஏகமாங்ககனங்காலவுபாதியினிலங்கிவெவ்வே
றாகவேகாணல்போலவகண்டசின்மயமாமேனி
பாகமார்தொழிலின்பேதம்பற்றிவெவ்வேறுகொண்டு
மோகநீங்கினருக்கென்றுமறிவேயாமுதல்வபோற்றி. (௨௧)

நிரஞ்சன்போற்றிமாயைநீரினுலகம்யாவுந்
தரும்பர்போற்றிபொல்லாவாணவந்தகைவாய்போற்றி
பரம்பொருள்போற்றியொப்பில்பசுபதிபோற்றிவீடு
விரும்பினர்க்கருள்வாய்போற்றிவினையெலாஞ்செய்வாய்போற்றி. ()

அட்டமூர்த்திகளாயாண்டுமெணித்தாகிவிளங்கியான்ற
மட்டில்வேதாகமங்கள்பயன்படவைத்தாய்போற்றி
கட்டழல்சொலித்தற்கேற்றகாமகாட்டத்தாய்போற்றி
வட்டவாணுதலுக்கீந்தவாமபாகத்தாய்போற்றி. (௨௩)

தானவப்பிறங்கலெல்லாம்பொடிபடத்தகர்க்கத்தக்க
மானவச்சிரமேபோற்றிகருணைவாரிதியேபோற்றி
வானவர்க்கிறைதோள்யாத்தமந்திரவிறையேபோற்றி
பானல்போற்பிறங்கநஞ்சைமிடற்றினிற்பதித்தாய்போற்றி. (௨௪)

கொடியவந்தகனென்றோதுந்திமிரநாமறக்கொதித்துக்
கடியுமாதித்தபோற்றியரியயன்கருபநாதர்
முடிகளில்விளங்குஞானமுளரித்தாளுடையாய்போற்றி
படியில்கைவல்லியப்பூங்கொடிக்கொருபற்றேபோற்றி. (௨௫)

ஆயிரத்தொகைகொள்வாயாலிச்சித்தபிதற்றியந்தோ
பேயனேன்பிழைத்தேனின்பப்பேரறிவுருவாமுன்னை
நாயகவறிந்துபோற்றனுயினேற்கெளிதோவென்று
பாயிரும்பணங்கொள்சேடனிவ்வாறுபழிச்சலோடும். (௨௬)

நாரிக்கொர்பதியாமீசன்றிருவுளமகிழ்ந்துநாட்சேர்
வேரித்தண்கமலம்போலவிளங்கருண்முகத்தாற்சேட
யாருக்கும்புரியலாகாவிருந்தவமுழந்தாயற்றாற்
பூரித்தமகிழ்ச்சியேமாய்ப்போந்துன்முன்வெளிப்பட்டேமியாம். ()

காரிபில்கெயிற்றுப்பேழ்வாய்க்கட்செவிக்கரசகண்டோ
ரியாருமஞ்சிடவுருத்ததிரிபுரம்படுப்பவேந்து
மேருவென்றுரைக்குமொப்பில்வேதண்டங்குனிக்கமேனா
னாரியாயமைந்துசேர்த்திபடைத்தனைநாகர்போற்ற. (உஅ)

வெண்டிரைசுருட்டுங்கங்கைநதியெனவேணிமீது
மண்டலவடிவமாகமணிப்பணாமுடிவிரித்தேர்
கொண்டவாபரணமாதிகோலநம்மவயவந்தொ
றெண்டகுபணிகள்பல்வேறாகுதிசேடவின்னும். (உகூ)

ஆதிகூர்மத்தினாலுமட்டநாகங்களாலு
மோதுமேழ்வெற்பினாலுமூன்றிடற்கரிதாநந்தங்
கோதில்சீர்வடிவாயோங்குங்குவலயந்தன்னைச்சென்னித்
தீதுதீர்வகையொர்நீயேதிடமுறப்பரித்துநின்றாய். (௩0)

நிசிசரற்கிறைவன்மேனாணிகரிறன்றலைகடம்மை
வசியினாலரிந்தோமித்தான்மற்றெமதருளைவேண்டிக்
கசிவினாயிரமானின்சீர்த்தலைகளைக்கனவின்மாடே
யசியினாலரிந்திட்டோமமாற்றினையதிகனீயே. (௩க)

நீசெயுக்கிரதவங்கண்டுன்னெதிர்நினைந்ததீவா
னாசையின்வெளிநின்றேமியாமகன்றிடேநினையெஞ்ஞான்றும்
பேசினீதானுமெம்மைப்பிரிதராய்வேட்டபேசென்
றீசனாரருளச்சேடனிதனைவிண்ணப்பஞ்செய்வான். (௩உ)

பண்டொருதேவதாருவனத்திடைப்பத்திநீடுந்
தண்டுழாய்மௌலியந்தச்சதுர்முகன்முதலாந்தேவ
ரொண்டகுமுனிவர்பூதரியாவருந்தரிசித்துய்வா
னண்டர்நாயகநீகாட்டுமற்புதநடனந்தன்னை. (௩௩)

ஒருசிறுநாயினேனுங்கண்டிடவிழைந்தேனுன்றன்
றிருநடங்காணாநாட்டமாயிரத்திரட்டிசெவ்வே
பரமுறக்கொண்டெனுன்றன்பரமவானந்தநிர்த்தம்
வரமுறப்போற்றாநாக்கள்பற்பலவொருங்குவாய்ந்தென். (௩௪)

நித்தியநடனத்துண்மையறிந்திடாதிருந்துநீடும்
வித்தைகள்பதினெட்டும்யான்மேம்படவறிந்தென்மேலா
மத்திருநடனங்காணினல்லதுசெல்வனாகே
னுத்தமகணங்களுள்ளுமொருவனாய்த்திசேரேன். (௩௫)

நான்முகக்கடவுள்வல்லனாசாகித்தியத்திற்
கூன்முகச்சங்கமேந்திகீதத்தில்வல்லன்கோல
நீன்மவிமிடற்றினெந்தாய்நீயவையிரண்டினோடு
மேன்மையிற்றிகழானந்தநிருத்தமும்வல்லைமேலும். (௩௬)

மானங்கைக்கொண்டஞானவாரிதிவிசுவான்மாவா
நீநம்புற்றென்றுமாடுநீர்மையாணிகரின்ஞான
வானந்தக்கூத்தேமேலதைசவொடுதொனிகளெல்லாம்
பானங்கைக்கீந்தோயுன்றன்பாடலொடாடலேயாம். (௩௭)

திருமிகப்பெற்றோர்மீட்டுந்திருவினைத்தேடுமாறு
பெருவிருப்புறுதல்போலப்பிறைமுடிப்பெருமயாருந்
தெரிதரக்காணுவுன்றன்றிருவுருக்கண்டுநாயே
னுருகியுட்கரைகின்றேனுன்றிருநடக்காட்சியுன்னி. (௩௮)

பாடுசேருலகுக்கெல்லாநாயககௌரிபங்க
நாடுசீரணிமாவாதிசித்தியெட்டினுநன்றாம்
வீடுபேறதனினுஞ்சீர்மேவுநின்னடங்காட்டென்று
சேடனாதரவினோடெம்பிரார்த்தித்துத்திருமுன்னின்றான். (௩௯)

ஈசர்புன்முறுவலோடுமனந்தனையினிதுநோக்கி
நேசவாருயிர்கட்கெல்லாமானந்தநிமித்தமான
தேசுசானடமுனக்குக்காட்டுதுஞ்சேடவென்றா
ராசைமீதூரக்கேட்டங்கனையனங்கணனுக்கோதும். (௪0)

வரம்பிலாவுயிர்களீன்றவருள்வளிரிமையவல்லிக்
கருங்கொழுகொம்பேநாயேன்விழிகளான்முகந்துண்டாரப்
பரங்கெழுமிந்தநன்னரிடத்தொருபரமவின்பந்
திருந்துசீர்நடனமெந்தாய்திகழ்தரக்காட்டிடென்றான். (௪௧)

பாப்பரசிங்ஙன்வேண்டக்கேட்டருள்பரமவள்ளன்
மாப்பெருங்கருணைகூர்ந்துவாய்மலர்ந்தருள்வான்யாணர்
மீப்பொலிந்திலங்குசோதிப்பணாமுடிச்சேடமேலோர்
நாப்புகல்சீர்த்திபூண்டநாடுபேர்மனுக்கடம்முள். (௪௨)

இணையிலாவிளைவதப்பேரெண்டிசாமுகத்துமேவ
வணையுமொர்நீதியைந்தாமனுவினந்தரத்திலாங்க
ணனுருபுகழாகின்றதிருநல்லுகத்துஞான
மணமலிமுதற்பாதத்துவருபிரபவப்பேராண்டில். (சங)

பரவுவைகாசித்திங்கட்சுக்கிலபக்கந்தன்னின்
மருவிடுங்குருவாரத்திற்றசமியில்வந்துகூடு
மிருகசீரிடத்துமேவும்புண்ணியயோகந்தன்னிற்
பொருவிருண்டவங்காண்பிப்பாம்புண்டரீகப்புரத்தே. (சச)

மன்னுயிர்த்தொகைகளெல்லாம்வயங்குபேரருளாலீன்றுங்
கன்னிகைப்பருவநீங்காக்கௌரிதன்கணவனிங்ஙன்
பன்னிடக்கேட்டசேடன்வெளிப்படப்பரமமுத்தி
துன்னுமிக்கயிலைதன்னினதற்குயர்வெவன்சொல்லென்றான். (சரு)

அறிஞருக்கரசனனவனந்தனீதுரைப்பக்கேட்டு
மறியிணைக்கரத்திலேந்துமொருபெருங்கருணைவள்ளல்
குறைவில்வேதாகமத்தும்புராணத்துங்கூறிவைத்த
நிறைவுடைப்புண்டரீகபுரமேன்மைநிகழ்த்தலுற்றான். (சசு)

அனந்தப்படலமுற்றிற்று.

# புண்டரீகபுரப்படலம்.

பரவுகால்சீத்துநிலவுகால்யாணர்நித்திலப்பருமணிவரன்றுந்
திரைகொளேழ்கடலுமேகலையாகித்திகழ்தரபபூண்டுயிர்புரக்கு
முரவுசால்சீர்த்திப்பெருநிலமடந்தையொருமைசான்மனத்தளாயனந்த
மருவுபேரன்பாலெமைநினைந்தரியமாதவநெடும்பகலுழந்தாள். (க)

நெடும்பகல்கழிந்துநீணிலமடந்தைநியதியின்வழுவுறாளுற்றுங்
கொடுந்தவமகிழ்ந்தேமாகிமுன்குறுகிக்கொள்வரமுணர்த்துநீயென்றாந்
தடம்புவிமடந்தைதாழ்ந்தனளெழுந்துதனிப்பெருங்கருணையங்கடலே
மடம்படுநாயேன்விழிக்கிலக்காய்நீவந்ததேமாதவப்பேறாம். (உ)

ஆயினுநாயேனகத்துறுநினைவையடிகளுக்கெடுத்துரைக்கின்றேன்
பாயிருங்கலைதேர்யோகிகளுடையபன்னிரண்டங்குலவிறுவாய்
மேயதோர்சிகையினக்கிரமதனின்விமலமாநிருத்தநீபுரிதி
நேயவென்னிதயகமலத்துமர்தநிருத்தத்தைக்குனித்திடல்வேண்டும். (ஙு)

என்மனக்கஞ்சத்தெம்பிரானீசெய்திருநடமிப்புவியாவு
நன்னரிற்கண்டுவழிபடப்பெற்றுப்போகமுத்திகளைநன்கடைய
வன்மலிமிடற்றோயடியனேற்கிதனையருடியென்றிரந்தனளதனாற்
பன்மறைத்தொகைகள்பாடயாமவடனிதயத்துத்தாண்டவம்பயில்வேம். ()

அந்தநற்கமலவிதயமதிடைபிங்கலைகளுக்கரியதாய்நடுவின்
வந்தமெய்ப்பெரியசுழுமுனைநாடிமார்க்கத்துக்கெளியதாய்வயங்கு
முந்துமாதிருகாக்கரங்கள்கேசரமாமுயங்கிமுக்கோணமுள்ளுடைத்தாய்ச்
சந்தவெட்டிதழ்கள்பொருந்தியேகளங்கந்தணந்துசுத்தியுமிகவுடைத்தாம் ()

பரமஞானிகளாலறிதரப்படுமெப்பங்கயஞ்சச்சிதானந்தப்
பெருமுதற்பொருளாய்விளங்குமத்துவிதப்பெற்றித்தாஞ்சிதம்பரமாக
வுரைசெய்மற்றதுதான்பரமதாய்த்தகரத்துறுபொருளாயுயர்வீடாய்ப்
பிரமமாயதற்குக்கோசமாய்வியப்பைத்தருவதாய்ப்பிறங்கிடுமின்னும். (௬)

பேதநாற்சாலஞ்சுகோதயந்தகரவித்தைமாயாபுரப்பேர்த்தாய்ப்
போதவப்புரத்தினுட்பொருளாகிக்கோதிலாத்தேகமாபுரமா
யோதுபுண்ணியமாய்ப்பவித்திரமாகிமகத்துமாயுற்றிடுமொப்பில்
வேதமேயாதிவித்தைபஞ்செனட்டுமெரிறபவிரித்துநன்குணர்ந்தோய். (௭)

பிரணவவடிவாயமிர்தமாய்மூன்றாய்ப்பிறங்கிதழ்த்தாகியவ்வியத்த
பரசிவமாகியக்கரவடிவாய்ச்சிந்தனைக்கதீதமாய்ப்பயிலு
மருவினதாகிவிகோசமாயட்டப்பிராசாதரூபமாய்ச்சாந்தி
மருவிநுண்பொருளாய்ப்பழம்பொருளாகிவயங்கிடுங்கமலமற்றதுவே. (௮)

தாரகமனந்தஞ்சூக்குமந்தீப்தஞ்சனாதனம்பிரணவஞ்சோதி
பூரணவியாபிபிரமமோங்காரம்வேதமூலம்மெனப்புகன்ற
சீருடைப்பதினோர்பிரணவநாமங்களைச்சிதேந்திரியனாய்விநாகங்
கூறிதயத்தனாகியேகணிப்போன்கோதின்முக்கோணத்தினடுவே. (௯)

ஒளிர்பரைமகிழநாம்புரிகின்றவுவமையிலானந்தநடன
மெளிதினிற்கண்டுமுத்தனாகின்றான்சிதம்பரமெனப்படுமிதுவே
வளனுடைத்தேகமற்றதுநாமேதேகியாய்ப்பிரபுவாய்மன்னி
மிளிர்குவமிங்ஙன்விளம்புவதன்றிவேதமுநடங்கண்டதிலையால். (௰)

பொருவிலாப்புண்டரீகமாபுரந்தான்போகமோக்கங்களைப்புருடர்க்
கொருதலையாகக்கொடுத்திடுங்கைவல்லியந்தரும்பரிசினாலொப்பி
றிருவளர்கயிலைமலையின்மற்றதுமன்சிறந்ததாற்றென்கடற்கரையில்
வரனுடைச்சோணாட்டொளிர்புனற்பொன்னிமாநதிவளைஇயததுவே. ()

மேதகுதில்லைவனமெனும்புனிதவியன்பெயருடைத்தஃதனந்த
நீதில்ப்புரத்தினியக்கர்கந்தருவர்சித்தர்வித்தியாதரர்சுரரோ
யோதுசாரணர்கின்னரரரம்பையர்களுயர்பெருநிரும்பன்மாகும்ப
ஞதியகணங்நணமதடியார்களாகமமனைத்துநன்குணர்ந்தோர். (கஉ)

சனகனேமுதலாம்யோகியரென்றும்தவம்புரிந்துறைகுவரதாஅன்று
தினகரனென்பான்றக்கிணாயனத்தினூர்தியைத்திருப்பியெஞ்ஞான்றுங்
கனிதருமனத்தச்சிதம்பரதலத்தைவலம்புரிந்தேகுவன்காண்டி
யினுமதன்பெருமைபலவுளவனந்தவெடுத்தியாமியம்புதுங்கேண்மோ. ()

மிகுபிரளயத்துங்கரையினைக்கடக்கவருணனஞ்சிடமெதுவிளையும்
பகையொருசிறிதுமின்றியேயெவருந்தவம்புரியிடமெதுபாரிற்
றெருகுமிடமெங்குமெய்துருச்சுகுணஞ்சுலபமாயுறுமிடமெதுமற்
றகமகிழ்தரக்காவேரியாறென்றுமணவியேபெருகிடமெதுவே. (கச)

பதிவிரதத்திற்றவறிடார்மடவார்பயிலிடமெதுதொகுபுருடர்
விதியுளியறத்தாறோம்பிடமெதுகோநிரையெலாந்தேனுவாய்வேட்ட
திதமுறக்கொடுக்குமிடமெதுமரங்கள்கற்பகதருக்களாயீண்டி
யதிகமாப்பலனீயிடமெதுநதிகள்கங்கையாயமரிடமெதுவே. (கரு)

மனிதர்களெல்லாந்தேவராய்வாழுமிடமெதுவனிதையர்தெய்வப்
புனிதமெல்லியர்கள்விரும்புறுமழகுபொருந்துறுமிடமெதுபுடவி
யினிதுநல்லுறுதிப்பயன்மிகவுடைத்தாயிலங்கிடமெதுவியல்பாக
வனகமேலோங்குமிடமெதுவதுபுண்டரீகமாபுரமெனவறிவாய். (கசு)

புண்டரீகப்பேர்பொருந்துமத்தலத்துப்பொருவிலற்புதத்திருநடன்
மண்டர்கள்முதலோர்கண்டுயவென்றுமகல்கிலமாய்நனிவிளங்கி
மண்டுபேரருளாற்புரிதருகின்றேமகிதலத்தெப்பதிதனக்கு [றே.
விண்டவிப்பெருமையனைத்துமுண்டின்னும்விளம்பவின்றநுவம்மவொன்

வேறு.

தன்னிகர்புண்டரீகபுரத்துவாழ்தவத்தர்க்கெல்லா
மன்வியாக்கிரபாதப்பேர்படைத்தவன்மற்றெறம்பத்திக்
குன்னையேநிகர்வானெம்மையுன்னினன்புலன்வேறின்றிப்
பன்னெடுங்காலமாகவருந்தவம்பயிலுகின்றான். (கஅ)

மற்றவன்யாவனென்றும்பன்னெடுங்காலமாக
நற்றவம்யாதுவேண்டிநவையறப்புரியுமென்று
முற்றுநீயறியவேண்டிஉணர்த்துவமுகந்துகேட்டி
கற்றவர்தங்கட்கெல்லாமரசனுய்க்கதித்துநின்றோய். (க௯)

புண்டரீகபுரப்படலமுற்றிற்று.

# வியாக்கிரபாதப்படலம்.

சித்தர்சாரணர்சேர்தரு
சுத்தமாரிமத்தொல்கிரி
மித்தைநீங்கிவிளங்கினன்
மத்தியந்தினமாமுனி. (க)

அத்தகைப்பெயரந்தண
னித்தலத்தினிலெம்வயிற்
பத்திநன்குபழுத்துளான்
புத்திரத்தவம்போற்றினன். (உ)

நந்தநல்லருளாலவற்
கிந்தமாநிலமேத்திட
வந்தில்வந்துதித்தானொரு
மைந்தன்வல்வினைமாற்றுவான். (ங)

பாலனய்வளரும்பதத்
தேலுநல்லறிவெய்தியே
ஞாலவாழ்வினைநச்சிடான்
மேலைவீடுவிரும்புவான் (ச)

பிறவிவேலைபிழைத்துநல்
லுறுதிசேரவுனிப்பெரு
மறையின்வல்லபிதாக்கழன்
முறைவணங்கிமொழிகுவான். (ரு)

யோகவாதனமுற்றுறை
வாகைசேர்தவவத்தகே
டேகவாதனைசெற்றிடற்
காகுநற்றவமாற்றவே. (சு)

எண்ணினேனிணையில்தவம்
புண்ணியப்புரமுத்தியைத்
திண்ணமீயிறைசீக்கதி
பண்ணுமாமனுப்பன்னுவாய். (எ)

என்றுகூறுமிரும்புதல்
வன்றன்மாமுகமன்பொடு
நன்றுநோக்கினனடியே
யொன்றமாமுனியோதுவான். (அ)

வேறு.

என்குலம்பவித்திரமெய்தியுய்ந்தது
தன்பெருந்துயர்கெடத்தரணிமங்கையு
மன்பயனடைந்தனள்யானுமாண்டன
னுன்கருத்தருந்தவத்துறுதிகூடலால். (கூ)

பலபொருள்படப்பரம்பகர்ந்தவேதமு
டலதின்மெய்ப்பொருடெளித்தறையுமாகமக்
கலைகளும்பரகதிக்குரியகாட்சிசே
ருலைவினற்றவஞ்சிவார்ச்சனையென்றோதுமே. (க0)

செய்திடுந்தவமெலாஞ்சித்திமுத்திகண்
மெய்பெறக்கொடுத்திடவிளங்குநற்றலம்
பொய்தவிர்ந்திலங்குமொர்புண்டரீகப்பே
ரெய்துமச்சிதம்பரமெனுமத்தொல்லைநூல். (சக)

தேவருந்தேவர்கடம்மிற்சீர்த்திசான்
மூவருந்தொழப்படுமுழுமுதற்பொரு
டாவில்புண்டரீகமாபுரத்திற்றங்கிய
மாவருட்பரசிவனென்னுமற்றவை. (௧௨)

அந்தமில்சித்தியொடரியவீடுநற்
சிந்தையிற்கணிப்பவர்சேரநல்குமா
மந்திரமைந்தெழுத்தென்பமற்றவை
புந்தியிற்றெளிகவீதுண்மைபுத்திர. (௧௩)

ஆதலிற்புத்திரவரியவீடுறக்
காதலிற்புண்டரீகப்புரத்தொளிர்
வேதரூபத்தினின்விளங்கவ்வானிழற்
சோதிலிங்கத்தினையடைதிதுண்ணென. (௧௪)

வேண்டியவேண்டியாங்கருளிமேன்மையோ
டாண்டுவீற்றிருந்திடுமறுதியெண்குணக்
காண்டகுசிவபிரான்கைக்கொண்டுன்பணி
மாண்டிடவினையருள்வழங்கும்போவென்றான். (௧௫)

தந்தையிங்ஙனமுபதேசந்தந்திட
மைந்தனுமனத்திடங்கொண்டுமற்றவற்
சிந்தையன்பினிற்றொழுதெய்தச்சென்றனன்
கந்தமார்புண்டரீகப்புரத்தரோ. (௧௬)

வேறு.

திருத்தகுபுண்டரீகபுரத்தினைச்சேர்ந்தொராலம
ரத்திருமூலந்தன்னின்மன்னியசிவபிரானை
யருத்தியிற்பணிந்துபோற்றியருச்சித்தங்கிருப்பானோர்நாள்
விரைப்புதுமலர்கள்கொய்யவிடியன்மேவுமுனெழுந்தான். (௧௭)

வரன்முறைநியதிமுற்றிக் *கரண்டகமெடுத்துவண்பூத்
தருமரமொன்றின்மீதுதாளூறமிதித்திட்டேறி
விரைமலர்குற்குமேல்வைவியன்றருப்பணிநனைந்து
சரண்வழுக்குற்றுமற்றோர்பற்றிலன்றரையைச்சார்ந்தான். (௧௮)

சிவசிவவென்றுசொல்லிமழமுனிசேராமுன்பூ
வவனெதிர்தோன்றிநின்றேயபயமீந்தருளியைய
விவனைதவிரும்பினுந்நீயீகுவமெனரூங்கேட்ட
தவமுனிபணிந்துநாதசாற்றும்விண்ணப்பங்கேளாய். (௧௯)

---

* கரண்டகம—திருப்பூக்கூடை.

அடியனேன்விடியுமுன்னரணையும்வைகுறுத்தொறண்மிக்
கடிமலரினம்பறித்தல்கருதியேகொன்றைபுன்னை
நெடியபாதிரியசோகஞ்சண்பகம்பகநீள்கோட்டுப்
படியில்கேசரமேயாதிமரங்களிலேறும்பண்பன். (௨

அரித்திரளூழுதூழக்காலரித்திடாமுன்பூக்கொய்யும்
விருப்பினனாதலாலேவிமலநீவழுக்காக்கால்கை
மருப்புதுமலரின்மேவும்வழுககளைநோக்கச்சோதி
பரப்புநுண்ணோக்கவாகப்படைத்தருள்குறையீதென்றான். (௨௧)

அளப்பருமறைக்குமெட்டாவனாதியம்பகவனாநீ
வெளிப்படநின்றுவேண்டிற்றுனையெனக்கொள்ளான்வேறொன்
றுளப்பரிவாலுன்பூசைக்குறுவதேநயந்தானென்று
களிப்பினாவிமயவல்லிபிரோரிக்கக்கருணைகூர்ந்தியாம். (௨௨)

பத்தியெம்வயிற்பழுத்தோய்வழுக்குறாமேநின்பாதங்
கைத்துணைவியாக்கிரத்தின்கால்கைபோலாகக்கண்கள்
சுத்தியாநோக்கவீகள்விரல்களிற்றோற்றவென்று
சத்தியோடேகரந்தாஞ்சகலவித்தையுமுணர்ந்தோய். (௨௩)

அம்முனிகையுங்காலுமங்ஙனமேவப்பெற்று
விம்மிதமெய்தியாரும்வியாக்கிரபாதனென்னச்
செம்மைசேருளத்தினோடுதில்லைமாவனத்தின்மேவி
யெம்மையெப்பொழுதுமர்ச்சித்திருக்கின்றான்விருப்பின்மன்னோ. (௨௪)

ஆங்கவன்வியாக்கிரேசப்பெயரினாலாராதுள்ளத்
தோங்குபேரன்பின்மேல்பாலொப்பில்சீரிலிங்கமொன்றைப்
பாங்குறப்பதிட்டைசெய்துபூசனைபயில்வானோர்நாள்
வீங்கருண்மூலத்தானமேவிவீற்றிருக்குநம்மை. (௨௫)

விதியுளியருச்சித்தேத்தியாதரமிகுந்தெம்முன்னர்ப்
பதுமவாதனத்திருந்துபாவனாயோகமுற்றா
னதுபொழுதினிலன்னானமலமார்மனக்கண்ணாடிக்
கதுமெனவெமதானந்ததாண்டவங்கதுவிற்றன்றே. (௨௬)

விருப்புறச்சமாதிதன்னில்வெளிப்படுபரமானந்த
நிருத்தமென்விழிக்கிலக்காய்நேர்தரக்காண்பலென்றே
யொருப்படுமுளத்தினாலேயோங்காரேசுரற்பதிட்டை
யருத்தியிற்புரிந்துபூசையாற்றினன்போற்றியாண்டே. (௨௭)

மாணுக்கரோடுகூடிமறப்பிலராகிநஞ்சேர்
பூணுக்கொண்டொழுகுசூழ்வாயிரமறைமுனிவர்பூமேற்
காணுக்கவேள்வியோம்புங்காட்சியர்தம்மோடேகா
லூணுக்கொள்சேடயோகபாவனையுற்றிருந்தான். (உஅ)

அப்பெயர்ப்புண்டரீகபுரத்திலானந்தக்கூத்தை
யொப்பிலப்புலிப்பாதற்குமுனக்குங்காட்டிடுதுமிந்த
வைப்பிலிப்பிலத்துவாரவழியினுன்மறைந்துபோந்து
திப்பியமானதீர்த்தஞ்சேர்ந்ததின்மூழ்கிமன்னோ. (உகூ)

ஆயிரந்தலையையுங்கண்டாண்டையோரஞ்சாவண்ண
நீயிருந்தலையைந்தோடுபதஞ்சலியாய்நேர்ந்தங்க
ணேயிரென்றோதிநாதனேகினனிறைஞ்சியன்பாற்
பாயிரும்பணங்கொள்சேடன்பரனருள்சிரமேற்கொண்டே. (௩0)

கழியுளக்காதறூண்டக்கடிதினிற்பிலத்துவார
வழியுருத்தெரியாவண்ணமறைந்துபோய்மாசிறீர்த்தஞ்
கெழுமிநற்றேகமெய்தியாவருங்கேளாய்நண்ணப்
பழவுருத்தணந்தாண்டிற்றூன்பதஞ்சலியெனவெழுந்தே. (௩௧)

வேறு.

அனந்தனூர்நோற்றுவரம்பெறுபரிசுமனையவற்கெம்பிரானங்கண்
மனந்தவிர்ந்திலங்குபுண்டரீகப்பேர்மாபுரமாட்சியினோடு
சினந்தவிர்புலிக்கான்முனிவரனிலையைச்செவியறிவுறுத்ததும்புகன்று
முனந்தனக்கெட்டாமுதல்வனத்தில்லைநடந்தருமுறையினிமொழிவாம். ()

வியாக்கிரபாதப்படலமுற்றிற்று.

# திருநடனப்படலம்.

நாகதீர்த்தத்தினின்றெழுநாடுசேர்ப்
போகிவேந்தன்பொருவிறவம்புரி
பாகமாரும்வியாக்கிரபாதப்பேர்
யோகிதன்னையுவகையொடண்மினுன். (க)

பாயசீர்த்திவியாக்கிரபாதப்பேர்
மேயினானைப்பதஞ்சலிமேவுத
லாயிரங்கதிர்ப்பானுவையாங்கொளித்
தேயுகூடுந்திறத்தினையொக்குமால். (உ)

மேதைநீடுவியாக்கிரபாதன்மெய்ப்
போதநோக்கிற்புரிந்துணர்ந்திங்கிவன்
மாதொர்பாகன்மலர்க்கழற்கன்பனென்
றோதிசேடனிடத்தன்பனாயினான். (௩)

ஓகைவிஞ்சவுறுவரிருவரு
மேகநாயகனெங்கள்விழிக்கிலக்
காகவந்துநடந்தருமாறுநஞ்
சோகநீங்கவெனத்துணிந்தாரரோ. (௪)

மாநடந்தரிசித்திடுமாசையா
னார்னடைந்தவுடப்பினையோம்பிலர்
வானடைந்துமகழ்ந்துமரியயன்
றுமயங்கவெழுந்தனித்தாணுவை. (௫)

தங்களுள்ளத்தவிசிலிருத்தியே
பொங்குமன்பிற்புரிந்தனர்பூசனை
கங்குலும்பகலும்புலங்காதியே
வெங்கொடுந்தவமாற்றுதன்மேயினார். (௬)

கமலமார்சிவகங்கையின்மூழ்கியு
மமலசர்வசிவவெனவன்பொடு
குமலநீங்கவரன்பெயர்கூறியும்
விமலநீற்றினைமெய்யுறப்பூசியும். (௭)

சிற்பரன்விழித்தோன்றுந்திருவருட்
பொற்புடைத்திருக்கண்மணிபூண்டெஞ்சீர்
வற்கலையுடுத்துஞ்செபமாலைகொண்
டுற்பவங்கெடவைந்தெழுத்தோதியும். (௮)

பாடுருத்திரசூத்தபாராயணம்
பீடுறச்செய்துந்தத்தம்பெயரினான்
மாடுறப்பிரதிட்டைசெய்மாலிங்க
நாடியர்ச்சனைநன்குறவாற்றியும். (௯)

மூலத்தானமுதல்வனையோர்ந்தறு
காலத்துங்கமலாதிகடிகமழ்
கோலத்தூமலர்கொண்டருச்சித்துமா
வாலத்தண்டுடைவாழைவருச்கையே. (௧௦)

நாளிகேரமுதற்பலநாடொறு
நீளுமன்பினிவேதித்துநேரிலா
வாளிருங்கதிர்ச்சூரியமண்டலத்
தாளுமீசனடிவழிபட்டுமே. (கக)

சிவதருப்பணஞ்செய்துந்திருந்துமெய்ச்
சிவமிருந்துறயோகஞ்செலுத்தியுஞ்
சிவனுவக்குந்துதிபலசெப்பியுஞ்
சிவனடித்தொண்டர்கூட்டத்தைச்சேர்ந்துமே. (கஉ)

அண்டர்நாயகனாலயம்போய்வலங்
கொண்டிறைஞ்சியுந்தாருக்குலவடிக்
கண்டிருந்தவிருந்துங்கந்தம்பல
முண்டுநாள்களொருசிலபோக்கியும். (கங)

நீரருந்திச்சிலபகனீக்கியுஞ்
சேருங்காலுண்டுசில்பகல்போக்கியுங்
கோரவைங்கனலுப்பண்குலவியே
சாருறும்பகல்சிற்சிலதள்ளியும். (கச)

சிற்சில்வைகறிகழ்புனனின்றுமோர்
சிற்சில்வைகலொர்காலினிற்சேர்தந்துஞ்
சிற்சில்வைகல்பிராணற்சிறைசெய்துஞ்
சிற்சில்வைகல்சிரங்கிழக்குற்றுமே. (கரு)

மாரியும்பனியுங்குளிர்வாடைமீக்
கூருங்கூதிருந்தாங்கியுங்கோரமாய்ச்
சேரும்வேனிலின்வெய்யிலிற்செங்நின்று
பாரும்வானமுமேத்தப்பயின்றுமே. (கசு)

அத்துவாக்கொளொராறையுஞ்சோதித்து
மெய்த்திடும்பசிதாகமோகம்மிகு
சித்தசோகஞ்சரையொடுசேரிறப்
பித்திறத்தடை*யூர்மியெய்தாதுமே. (கஎ)

வேறு.

இந்திரன்முதலாந்தேவரொம்பதமெமைமீத்திந்த
வந்தணர்தம்மைச்சாருங்கொல்லெனவையமெய்தத்
தந்தமதுறுதியானேயொருவருக்கொருவர்தாழார்
முந்தன்வந்தருளுமிர்த்தமெனமுன்னிமுயன்றுநோற்றார். (கஅ)

* ஊாமி—திரை.

வேதநாயகன்மொழிந்தவேலையைநோக்கியன்னோர்
மாதவமளப்பில்காலமருத்தியிற்புரிந்தார்மற்றம்
மேதையர்க்கருளவேண்டிமேலவன்கைலைநீங்கிச்
சோதிமால்விடைமேற்கொண்டங்குமையொடுங்கணங்கள்சூழ. ()

இல்லைமாநகரைநோக்கித்திருந்துபேரருண்மீக்கூர்ந்து
பல்லியவகைகள்யாவுந்தழங்கிடப்படருமெல்லைத்
தொல்லைமாதவர்களானோரிருவர்க்குந்தொல்லோனெய்த
லொல்லைமுன்னுரைத்தல்போன்றுதிருச்சின்னத்துறுஞ்சீரோதை. ()

திருக்கயிலாயமேயசிவபிரான்வந்தான்றெய்வ
மருக்குழலிமையவல்லிமணமகன்வந்தான்வேத
வுரைக்கடங்காதசீர்த்தியும்பர்தம்பெருமான்வந்தான்
கருப்பிறவியினன்டாவைக்கடப்பிக்குங்கடவுள்வந்தான். (உக)

மந்திரமைந்துமேனியாகினோன்வந்தான்வந்தா
னந்தமிலெழுத்தைந்தானவண்ணனுன்வந்தான்வந்தான்
பந்தமதகற்றியாளும்பராபரன்வந்தான்வந்தான்
வந்தனன்சம்புவென்றுவெழுந்ததுவானமீதே. (உஉ)

சின்னத்தினோசையிங்ஙன்றிசையெலாம்விழுங்கித்தங்கள்
கன்னத்தினுழையக்கேட்டகட்செவிக்கிறையுஞ்சீர்த்தி
யன்னத்தற்குவமைகூருமம்புலிப்பாதத்தானு
மென்னைத்தீங்தொனியீதென்றேயுசாய்த்தெளிந்திறும்பூதெய்தி. ()

அண்ணாந்துநின்றுசெங்கைசிரமுகுழ்த்தாடும்வேலை
யெண்ணார்ந்தமரீசியாதியேழ்பெருமுனிவர்தாமும்
விண்ணாளுமிந்திராதியெண்மரும்வேதன்விண்டுத்
தண்ணாரம்மதியம்பானுச்சித்தர்கந்தருவர்சார. (உ௪)

தேவர்கள்பரவுசீர்த்திபடைத்தவைங்கரத்துச்செம்மன்
மூவிருமுகத்துப்புத்தேள்முன்னெழுந்தருளவெள்ளைத்
தூவணமேனிவாய்ந்துதிசைசெவிடுறத்தொனிக்குந்
தாவில்சீர்மணிகள்சோதித்தாடிநால்கழுத்திற்பூண்டும். (உரு)

திரண்டுயர்ந்தொளிர்செயாணர்த்திவளொளிமணிப்பூண்பூண்ட
விரண்டுகொம்பினுந்தூவெள்ளையருவியினிரண்டுபோலும்
புரண்டசைந்திலங்கவெள்ளைக்கவரிகள்புனைந்தும்பொன்செ
யரண்டருகுடைதசெம்மேகமடுத்தெனவெரிநணிந்தும். (உசு)

* குடை—சலலனை.

எழில்வளரிமையமீதுசிகரமேக்கெழுதன்மான
வழகுறு * கருபங்கண்டமதற்குமேல்விளங்கக்கொண்டு
மொழுகிடுநுரையென்றோதுமுறுமலரணிவாயெய்துங்
கெழுமுறுதடித்திற்சோதிகிளர்சிலம்படியணிந்தும். (௨௭)

விண்ணவர்வழுத்திவீசும்பூமழைமேனியெங்கும்
வண்ணமாரணிகளாகப்பொருந்தியுமாட்சிமேவும்
புண்ணியவடிவமெய்தியதிட்டானமாகிப்பொன்று
வண்ணல்வான்கயிலையென்னவணைதருவிடையின்மீதே. (௨௮)

அருட்பெருங்கடலாய்நீங்காவானந்தவடிவாயாறு
விருப்பருள்வியப்புக்கெல்லாநிலைக்களமானமேலோன்
பரப்புசீர்வியாளப்புத்தேள்வியாக்கிரபாதனென்பார்
தருக்கிலாவன்பிற்காற்றவெளிவந்துதான்முனின்றான். (௨௯)

புண்டரமூன்றினுலேர்தரும்பொளிநுதலும்பொற்பின்
வெண்டிருநீறுபோர்த்துவிளங்குசெம்மேனிதானு
மண்டலப்பணங்கொடுத்திமாசுணத்தானகோதில்
குண்டலத்திலங்குப்யாணர்க்குருமணிக்காதிரண்டும். (௩௦)

ஆலத்திற்சிறப்புவாய்ந்தவழகுறுமிடறுஞ்சோதிப்
பாலத்திற்செந்தநோக்கும்பானுவெண்மதியென்றோதுங்
கோலச்சீர்விழியுமன்பரகக்கண்ணுக்கினிமைகூருஞ்
சீலச்செஞ்சோதிமேனிவிளக்கமுந்திருச்சொலவாய்ப்பும். (௩௧)

புன்சிரிப்பொடுபொருந்துந்திருமுகப்பொலிவுமால்வே
தன்சிரக்கோவையார்ந்துதயங்குபொன்மார்புஞ்சூல
மன்சுடர்க்கபாலம்வாவுமான்றுடிமழுக்கோதண்ட
மின்செயத்தரித்தேயச்சந்தெறூஉவரமிகவீகையும். (௩௨)

கருணையூற்றிருந்துபாயுந்திருக்கடைக்கண்ணும்வேணிச்
சுரநதியலைப்பினுலேதுயல்வருபிறைக்கொழுந்தும்
வரனுறவுடையனுகிவாக்கிற்கண்களிற்சிரிப்பி
னரியயன்கருபநாதர்க்கருள்சுடர்ப்பெருமான்றன்னை. (௩௩)

வலம்பெறுபரார்த்தமென்னுமளவிறந்தொளிமணிப்பொற்
சிலம்பூண்டொளிரிரண்டுதிருவடிப்போதுஞ்சோதி
நலம்படுகோசிகப்பொற்பட்டின்மேற்சுற்றுநல்ல
குலம்படுமணிகொள்யாணர்கொழித்திடுகாஞ்சிச்சீரும். (௩௪)

* கருபம—இமில்.

விளங்கிருளானமென்னச்சுணங்குபூத்தெழுந்துவிம்மும்
வளங்கெழுதனமென்றேதுஞ்சக்கரவாகத்தின்மே
லிளங்கதிர்க்கமலநாளம்போன்மெனவணிந்தயாணர்க்
களங்கறுசோதிமுத்தவெண்மணிவடக்கதிர்ப்புழ். (௩௫)

வரமிகுந்தொளிருஞ்சோதிமணிகொள்கங்கணஞ்சேர்வண்மைக்
கரமலரிரண்டும்வண்ணக்கழுத்தின்மூன்றிரேகைதம்மோ
டொருமையுற்றொளிருமூன்றுநித்திலத்தொடையுமொப்பி
லிருநிலவுமிழ்புன்மூரலிலங்கிடுவதனப்போதும். (௩௬)

இளந்தளிர்ச்சோதிவாய்ந்துவிம்பநற்கனியையெள்ளி
வளம்படுபவளவாயும்மான்பிணைநோக்கினோடு
விளங்குநீலோற்பலத்தைவென்றிருங்கருணையூறிக்
கிளர்ந்துபாய்ந்துயிராம்பைங்கூழ்கிளர்விக்கும்விழியின்சீரும். (௩௭)

கந்தநற்றுழைப்போதுஞ்சுகந்தமுங்காசில்சோதிச்
சந்திரகலையுங்கொண்டுதயங்குதம்மில்லச்சீரும்
விந்துமின்சூழ்ந்தாலன்னவண்ணமுமுடையளாகிச்
சுந்தரமுறப்பின்பாலுற்றுறத்தழீஇத்தோற்றமேவ. (௩௮)

இருந்திடுமவிளுபூதவிணையில்சிற்சத்தியோடு
புரிந்தமெய்த்தவத்தாற்கண்டுபதஞ்சலிபுலிக்காலண்ணல்
சுரந்தவானந்தவாரிப்படிந்துமெய்துளங்கவன்பால்
விரைந்துதாழ்ந்தெழுந்துபல்காற்புளகமெய்யரும்பமிக்கே. (௩௯)

அடிபெயர்த்திடமாட்டாமற்பரவசராய்ச்சலிப்பி
னெடுவிழிமோக்கமும்பர்நாயகனிமலஞான
வடிவினிலழுந்தவங்கண்மன்னினரநிதமன்னோர்
படிதவிர்கருத்துச்சென்றவவதியார்பகரற்பாலார். (௪0)

வேறு.

தூவிறத்துவம்யாவுந்தணந்தொளிர்
தேவதேவன்றரிசனசித்தியான்
மேவுமானந்தவெள்ளத்தமூழ்கியே
யேவுமன்பிவிணையபழிச்சுவார். (௪௧)

பூதம்யாவையுந்தந்தபுராதன
வேதம்யாவும்விளம்பரும்வித்தக
போதம்யாவும்விளக்குபுராணமெய்
யாதிமெய்யறிவானந்தபோற்றியே. (௪௨)

பத்தருக்கெளிதாம்பரபோற்றியா
றத்துவாவுமகல்பரபோற்றியோர்
சத்திேனாடசத்தானவிரண்டினு
மொத்துநிற்குமொருபொருள்போற்றியே. (சந)

வேறு.

செய்பவன்றானுஞ்செய்திப்பயன்கொளுவானுந்தேறி
யெய்திடுபொருளுமாகியிலங்குமப்பொருளேபோற்றி
பொய்தவிரட்டாங்கச்சீர்யோகத்தாற்புறத்துமுள்ளு
மெய்பெறவறிஞர்காணவிளங்குமெய்ச்சுடரேபோற்றி. (சச)

பார்முதற்குடிலையீறாய்ப்பரந்தபல்பொருளுமாகிச்
சீருருவாதியாம்பல்குணங்களாய்ச்சேதனத்தாற்
சார்தருகருமஞ்சாமானியஞ்சிறப்பாதியாயு
மோர்பெயருருவமின்றியோங்குசின்மயனேபோற்றி. (சரு)

வருபிரமாதாமேயமிதிமானமென்னுநான்கு
பிரிவுகளானாய்போற்றிபிறங்குமந்திரத்திேனாடு
கிரியைபாவனைதமக்குநிலைக்களமாகிக்கிட்டுஞ்
சொரூபனேபோற்றிசூழுஞ்சொற்பதங்கடந்தாய்போற்றி. (சசு)

செய்வினைமுயற்சியாலேயுயிர்த்தொகைதேடிக்காண
மெய்பெறநின்றாய்போற்றியானத்தில்விளைவாய்போற்றி
பொய்தவிர்சுவர்க்கமாதிபயனெலாம்பூப்பாய்போற்றி
யைதருபரையேயாதிவாக்குநான்கானாய்போற்றி. (சஎ)

பலந்தருபகுதியோடுவிகுதியாய்ப்பரந்தாய்போற்றி
புலந்தருமறிவுமற்றையறிவுமாய்ப்பொலிவாய்போற்றி
வலந்தருதொழில்களைந்துமெய்ப்பின்றிவகுப்பாய்போற்றி
நலந்தருபரமானந்தமுயிர்க்கருணாதாபோற்றி. (சஅ)

சச்சிதானந்தமாகித்தயங்குமுன்னிடத்திற்றங்கி
யிச்சகம்போக்கிேனாடுவருதலுற்றியலுமென்று
மெய்ச்சிவநீயேயென்றுமேலவரறிவர்கல்லாப்
பொச்சர்களுன்றனீர்மையறிந்துமெய்பொருந்தலெங்கே. (சகூ)

நாயகநாயினேமெய்ஞ்ஞானவானந்தமேவ
நீயெழுந்தருளிக்காட்சிபுரிதந்துநின்றாய்நந்த
மாயவல்வினைகள்யாவும்மாயமாநடங்காட்டென்று
நேயமொடங்கட்போற்றியிருவருந்தொழுதுநின்றார். (ரு0)

உறுவரிங்ஙனம்விளம்புந் துதிமகிழ்ந்தொப்பின்மேலா
மறுகுணக்குன்றமானசிவபிரானருளினீராற்
றுறுமுவெண்ணிலவின்கற்றைறதிசையெலாந்துலக்கவாங்குச்
சிறிதருணகைவழங்கித்திருவாய்விண்டருளுமன்னோ. (௫௧)

எம்வயிற்பதிந்தபத்திக்கிணையிலாமுனிவர்கேண்மி
னும்வயிற்கிளர்ந்திட்டோங்குங்கருணையாலுமையினோடுஞ்
செம்மையிற்றோன்றினின்றோஞ்சிரத்தையானீர்பழிச்சும்
பொய்ம்மையிற்றணந்தஞானத்துதிமாலைபுனைந்துகொண்டேம். ( )

அடியவர்தம்மிலேவரித்துதியாய்வோரன்னோர்
படிதவிர்செல்வம்யாவுமொருங்குபெற்றுயர்கபண்டா
லொடிதவிலுண்மைவாழ்வினோங்கவென்றருளித்தன்ம
விடபநின்றிலங்குதாதான்மியசத்தியுடனெழுந்தான். (௫௩)

எல்லையின்ஞானந்தானேயுருவானவீசன்ஞான
வல்லியோடங்கணீங்காதமர்ந்தினிதருளும்வண்ண
நல்லருள்கொண்டான்கொண்டநன்னரச்செவ்விச்சான்றீர்
தில்லைமாவனந்தலங்களெவற்றினுஞ்சிறந்தோங்கிற்றால். (௫௪)

பரமனாராணையாற்றோற்படர்தருபணியரான
பிரமனேமுதலாந்தேவர்கூட்டமும்பிரமஞான
வரமலிமுனிவர்பூதரீட்டமுங்கீதம்வல்ல
திருமிகுமமரர்மாதராட்டமுஞ்செறிந்தவங்கண். (௫௫)

களிமயிற்சாயல்வேய்த்தோட்கற்பகவல்லிச்செவ்வி
யிளமுலைத்தெய்வமின்னாரீண்டிமேனோக்கலாலே
வளிமிகுத்துலவுநீலவானமாவளாகமெல்லா
மொளிகொளுற்பலம்வாரிசமலர்தடத்தோற்றமொத்த. (௫௬)

நந்தியெம்பிரான்முழக்குந்தண்ணுமைநாதஞாலத்
தெந்தவாருயிர்ச்செவிக்குமானந்தமயமாயெய்தத்
துந்துபியோவாதேங்கத்தும்புருவோடுகூடி
முந்துநாரதனச்செவ்விக்கிசைகீதமுயன்றுபாட. (௫௭)

புகழ்விசுவாவசுப்பேர்படைத்திடும்புலமைசான்ற
பகுதிசாலிசைநூல்வல்லான்கின்னரப்பண்கள்பன்ன
மிகுதிசேர்விமானந்தோறும்விண்ணவர்மிடைந்துநின்று
தொகுதிசால்பஞ்சதாருப்பூமலர்தூவிவாழ்த்த. (௫௮)

அளப்பிலானந்தத்தன்பர்சயவொலியெழுப்பவங்கண்
வளப்படமாட்சிமேவிப்புண்ணியமயமாயின்பந்
திளைப்புறச்சிறந்தபாணிப்பரையொடுஞ்சிவபிரானூர்
துளக்கறத்தில்லைஞானத்தூயவம்பலத்தையுற்றார். (௫௯)

திருமுடிக்கங்கைவெள்ளமலைந்துமேற்கிளரச்சீர்சால்
பொருபுலித்தோலினுடையரையினிற்பொலிவுற்றாட
வரையினுங்கரத்துநாகமழகுறப்பொருந்தியார்ந்து
புரையில்சூத்திரமும்யாணர்க்கடகமுமாகிப்பொற்ப. (௬௦)

வரைக்குபமானமாகுமார்பில்வாசுகியென்றோது
முருக்கிளர்நாகம்பூணுயொளிர்தரநுதல்விபூதிக்
குருக்கிளர்குறிகண்மூன்றுங்குலவிடச்செந்தீநோக்கந்
திருக்கிளர்சோதிகான்றுதிசையெலாம்விளக்கஞ்செய்ய. (௬௧)

மணியின்மாண்டொளிருஞ்சோதிவயங்குதோட்டணியுமாமைப்
பணியின்மாண்டொளிருஞ்செவ்விபடைத்தகுண்டலமுமேய்ந்திட்
டணியின்மாண்டொளிருஞ்சோதியானனமாணவத்தீப்
பிணியின்மாண்டழலுஞ்சீவர்க்கருளயிர்தம்பெருக்க. (௬௨)

காசினிற்குயின்றமஞ்சீரத்தொடுகேடகம்பாதத்
தேசிறந்தொளிரயாணர்திருந்துபுன்சிரிப்பானந்த
மாசிறப்பருளப்பாதமலர்சதுரசசிரம்வாய்ந்
தாசையிற்காணுமன்பர்க்கானந்தவாழ்வுகூட்ட. (௬௩)

வலத்திருவடிப்போதாற்றன்முயலகன்முதுகின்மன்னி
நிலைத்திடவாமபாதமுயர்ந்துகுஞ்சிதமாய்நேர
நலத்துடனிடசகைவாமபாதநேர்குறுக்கேநண்ணப்
பலத்துடன்வலக்கையாணரபயமுத்திரைபரிக்க. (௬௪)

ஒளிமிகுத்துமிழ்சீர்க்காஞ்சியொலித்திடவுதரமாடே
கிளருமும்மடிப்புமாணப்புரள்தரக்கிளர்ந்திட்டோங்கு
முளரியையப்பரித்துமேலாய்விளங்கவோரிடக்கைமுந்து
மளவிலப்பிரணவச்சீர்த்தமருகம்வலக்கையார. (௬௫)

விளம்பிடுதாளமூன்றினடுவணதாகிமேவும்
வளம்படுதிரச்சிரப்பேர்த்தாளத்தைமண்டலம்வாய்ந்
துளங்களிபூறத்தோற்றித்திருவடியிரண்டுமொன்றத்
துளும்புசிரவினயங்கடோண்முதலுறுப்புத்துன்ன. (௬௬)

பரம்புசீர்ப்பதஞ்சலிப்பேர்முனிவரன்பணைச்சிரத்தி
னிரம்பொளிமணியினீராஞ்சனமுனமெடுப்பநின்றே
விரும்புபன்மலர்கடூவிவியாக்கிரபாதயோகி
யரும்புமாதரவினாலேயருமறைத்துதியெடுப்ப. (சுஎ)

புண்ணியநிருத்தானந்தப்புணரியிற்படிவான்போந்த
வெண்ணில்சத்திகளினோடுமிணைதவிர்சிவகாமிப்பேர்
நண்ணிடுஞானசத்திநடத்திறங்காணுந்தோறும்
பண்ணிறைமொழிவாய்விண்டுதுதித்திடப்பாங்கர்நிற்ப. (சுஅ)

மாயமுக்குணங்கடந்துமனமொழிக்கதீதமாகி
நேயவைந்தொழிற்கும்வித்தாய்நியதபூரணமெய்ஞ்ஞானத்
தூயவற்புதவானந்தசுகாதீதசொரூபமாகி
மேயதாண்டவத்தைச்சம்புவியத்தகப்புரிதலுற்றான். (சுகூ)

அருள்வளர்நீலகண்டப்பொருளருட்பரையென்றோதுந்
தெருள்கிளர்மின்னினோடுதில்லைமாவனத்தின்மேவி
யிருண்மலந்துமியவாடுமிணையிலானந்தக்கூத்தைப்
பெருமைசேர்நாகவேந்துபெட்டுநோக்குதல்வியப்பாம். (எ0)

அளப்பிலாமறைக்குமெட்டாவனாதியம்பரமவள்ளல்
வெளிப்படநின்றுசெய்யும்வியப்புறுநடனவின்பக்
களிப்புதவமிர்தந்தன்னைக்கண்களாஞ்சகோரந்தம்மா
லுளப்பரிவோடுயன்னோர்தெவிட்டிடவினிதினுண்டார். (எக)

உண்ணிறைந்தோங்குகின்றசிவானந்தவோதவெள்ளங்
கண்ணிணைவழியாலோடக்கையிணைதலைமேற்கூடப்
புண்ணியவடிவமெங்குமுரோமங்கள்பொடிப்பவாக்கு
நண்ணிடத்தழுதழுப்புநடச்சிவபோகந்துய்த்தார். (எஉ)

பரதனூலுரைக்குமாட்சியிலக்கணப்பகுதிமுற்று
மருவவாழ்சியபேதங்களனைத்துமிக்கார்ப்பவானோர்
விரைமலர்தூவிநின்றுமிகவுமேத்தெடுப்பவண்ணல்
புரிநடவின்பவேலைப்புலங்களிப்புறப்படிந்தார். (எங)

தற்பரஞானானந்ததாண்டவங்குயிற்றுமைய
னற்புதச்செய்யபாதகமலங்களன்பினான்ற
பொற்புடைப்புலிக்காலண்ணல்பதஞ்சலியென்னும்போத
நற்பெருமுனிவரானோருளத்தடமலர்ந்தநன்கே. (எச)

எழுதுசித்திரவிளக்கினிடப்பாகத்தியைந்துநிற்கு
முழுதுயிரீன்றவன்னைகரங்களாமுளரிப்போதார்
செழுமணிக்கங்கணத்தினெழுமிசைசிவனார்கூத்துக்
கழகுடையியமாயிற்றென்றருந்தவர்பழிச்சியிட்டார். (எரு)

அம்பகமிமையாடாமலளப்பிலெண்குணச்சீர்வாய்ந்த
நம்பனார்நடனந்தன்னைநயப்புடன்புறம்போலுள்ளுந்
தம்பெருமறிவாற்கண்டுசிவானந்தச்சலதிமூழ்கி
யெம்பெருமானீகேளென்றெடுத்துவிண்ணப்பஞ்செய்வார். (எசு)

ஒப்பில்சீர்த்தில்லையின்கணோங்குமிஞ்ஞானமன்றத்
தெப்பொழுதுமிவ்வண்ணமிணையிலானந்தக்கூத்தை
யிப்புவியண்டமுய்யவெம்பிரானுடல்வேண்டுந்
தப்பிலாவடிமைபூண்டேம்பொருட்டிதுதருகவென்றார். (எஎ)

கலக்கமின்ஞானயோகக்கண்ணினார்காட்சிக்கன்றிப்
புலப்படாநடனநீவிர்கண்டிடப்புரிந்தாம்பொல்லா
மலக்குறும்பெறிந்திருங்கள்பொருட்டிந்தஞானமன்றி
லுலப்பிலானந்தவாடலொழியாதுபுரிதுமன்றே. (எஅ)

உலகமூன்றினுமெந்நாமஞ்சிவகாமனென்றுமோவா
மலைமகடனதுநாமஞ்சிவகாமியென்றுமன்ற
விலகுகவென்றிவ்வாறுதிருவருள்புரிந்தானென்ப
வலைவிலாவடியர்க்கென்றுமெளிவருங்கருணையண்ணல். (எகூ)

கருணையேவடிவமானகௌரியோர்காமர்ஞானத்
திருவடிவுடையமூத்தவிநாயகக்கடவுள்செவ்வேள்
முருகவேண்முதலாயுள்ளமுதற்பெருங்கணத்தர்சூழப்
பரசிவன்றில்லைமன்றம்பிரியாதுபயிலுமாடல். (அ0)

பானிறச்சங்கமேந்தும்பவளவாய்க்கமலக்கண்ண
னான்முகக்கடவுள்பூர்வமுதலொருநாலிரண்டென்
றானதிக்கிறைவரோடுபதஞ்சலியரும்புலிக்கான்
ஞானமெய்த்தவனேயாதிமுனிவரர்நயப்பான்மன்றே. (அக)

தில்லையம்பலத்திலெம்மான்றிரோதானநீங்கநின்றே
யெல்லைதீர்கருணையாற்றுலியற்றுமானந்தக்கூத்தை
நல்லவாதரத்தாலென்றுந்தரிசித்துநயந்துபோற்றிச்
சொல்லரும்பரமானந்தந்துய்த்தனரிருந்தாரங்கண். (அஉ)

வரநதிமுதலாந்தீர்த்தவகைமிகுவளமைசான்ற
பரிமளங்கமழும்பாரிசாதமேமுதலாம்பஞ்ச
தருவொடுமேனகாதியரம்பையர்தாவிறெய்வப்
பொருவில்சீர்த்தில்லைத்தத்தங்கூற்றினாற்பொருந்தியுற்றார். (௮௩)

மிளிர்புலிப்பாதத்தண்ணல்வியாக்கிரசங்கரப்பேர்
கொளுமெழிலிலிங்கமொன்றைக்குடதிசைப்பதிட்டைசெய்தா
ளொளிமணிச்சுடிகைநாகர்க்கிறையதன்குடபாலோவா
தளிமிகுமனந்தீசப்பேர்க்குறிநிறீஇயருச்சித்திட்டான். (௮௪)

தந்நிகர்சௌனகாதிமுனிவருந்தத்தம்பேராற்
பன்னிடலிலிங்கமூர்த்திபற்பலபதிட்டைசெய்தார்
மன்னுசீர்வியாக்கிரத்தாண்மாதவன்றொடர்பாற்றில்லை
நன்னர்வான்புலியூரொன்றோர்நாமமுற்றதுதவத்தீர். (௮௫)

சின்மயவியோமரூபமாயென்றுந்திகழ்தலாலே
நன்மைசால்சிதம்பரப்பேர்நண்ணிடுந்தில்லைஞால
மின்னகக்கஞ்சமாகிவிளங்கலானதுதான்மேலுந்
தென்மலிபுண்டரீகபுரமெனுந்திருப்பேரெய்தும். (௮௬)

தேவர்கடேவனானசிவபிரானடத்துக்கெல்லை
மேவிடாப்பெற்றியாலேவியனடக்கிடமாமன்றந்
தாவில்சீருடன்விளங்குந்தப்பிரசபையென்றிந்த
மூவுலகத்துளாருமொழிந்திடத்திகழ்ந்துமுந்தும். (௮௭)

மூன்றினைத்தலைமேற்கொண்டமுப்பதுகோடிதேவர்
மான்றபஞ்சாக்கராங்கபட்டமாய்மருவலாலுங்
கோன்றிருக்கூத்தினென்றுமணிபெறீஇக்குலவலானு
மேன்றவுற்சவத்தினானுமேமமன்றெனும்பேரெய்தும். (௮௮)

இந்தவைந்திருப்பேர்தம்மின்மச்சிரத்தையாலெவன்கணிக்கு
மந்தமாபுருடன்மன்றவறமுதற்பொருள்களான்கும்
புந்தியினினைந்தாங்கெய்தும்புனிதவிப்பேர்களுள்ளே
சிந்தைமாசறுத்தீர்தேர்மின்சிதம்பரமதிகமென்றே. (௮௯)

கூத்துடைப்பிரானுக்கொப்பில்வடிவமாய்க்கோதிலன்பர்க்
கேத்துசீர்முத்தியீயுந்திருவெழுத்தைந்துமெங்ங
ளுத்தமந்திரங்கட்கெல்லாமதிகமாமங்ஙனிந்தச்
சீர்த்தவைந்திருப்பேர்தம்முட்சிதம்பரநாமமேலாம். (௯0)

ஆரணச்சிரசில்யோகவந்தணரிதயப்போதில்
யாரணித்திருக்கூத்தாடுமிறைவர்மற்றவரித்தில்லைக்
காரணச்சிதம்பரத்தேகணிப்பில்பல்லுயிருமுத்திப்
பூரணப்பெருவாழ்வெய்தத்திருநடம்புரிவரென்றும். (கக)

எவ்வுலகத்துளாருமேத்திடப்படுதலாலுங்
கவ்வைசேர்பாவமெல்லாங்கட்டறுத்திடுதலாலுஞ்
செவ்விதினறத்தைநல்கிச்சிவகதிக்கூட்டலாலுந்
திவ்வியமானதில்லையகத்தெனப்படுஞ்சிறந்தீர். (கஉ)

சம்புவினடனந்தன்னைத்தன்னிகரில்லாத்தில்லை
யம்பலந்தன்னிற்கண்டுதுதிக்குநரணிமாவாதி
நம்புமெண்சித்தியோடெண்ணருஞ்சிவசொரூப
மும்பெறீஇவீடுசேர்வருண்மைமற்றுண்மையீதே. (கங)

நிருமலவியாபியானசிவபிரானிருத்தமன்பி
னொருபொழுதேனுங்காணப்பெறுபவர்கடத்தற்கொண்ணாப்
பெரியவெம்பிறவிநீந்தியவன்றிருவடிக்கீழ்ப்பேரா
வரியபேரின்பவாழ்வையடைகுவரறவீர்மன்ற. (கச)

அண்டர்கள்தமக்குப்போலத்திருநடந்தொழுமாறண்ணு
மண்டலத்தவர்க்குமன்றவரந்தருமன்றவானன்
றண்டுளிவழங்குமேகந்தாமிடபேதநோக்கா
வெண்டகைமுனிவீர்சாதிவிகற்பஞ்சங்கரனுக்கில்லை. (கரு)

தாண்டவப்பெருமானுஞ்சம்புவினருளினாலே
நீண்டவிப்புவியினன்பரளப்பிலர்பிறவிநீந்தி
மாண்டமெய்ச்சிவப்பேறுற்றார்மற்றவர்குழுவுண்மாட்சி
பூண்டமெய்ப்புகழொருத்தர்திருத்தொண்டுபுகறுங்கேண்மின். (கசா)

திருநடனப்படலமுற்றிற்று.

## ஏமவன்மப்படலம்.

சரையுமாநதி
விரவயோத்தியா
னொருதன்னெனும்
பொருவின்மாமனு. (க)

காமனேருமத்
தோமனுக்குமந்
தாமனுக்கெழிற்
பூமினொத்துளாள். (உ)

மேருவின்மகள்
யாருமேத்துசீர்
நாரியின்முதற்
பாரியாயினாள். (௩)

காந்தியென்னும்பேர்
வாய்ந்துளாள்புனல்
வேந்தன்மாமக
ளேந்துசீரினாள். (௪)

அன்னநன்மனு
மன்னனுக்கொரு
பின்னைமாமனைப
பன்னியாயினாள். (௫)

பிரபையென்னுமுற்
றெரிவைதன்வயி
னைருதற்கொரு
குரிசிறோன்றினான். (௬)

மற்றைமாமனைப்
பொற்றொடிக்கணு
முற்றுளாரிரு
கொற்றமைந்தரே. (௭)

முந்தைநன்மனை
தந்தநாயகன்
விந்தைமிக்கருட்
சிந்தையொத்துளான். (௮)

குணங்களாற்சிறந்
துணங்கில்சீர்த்திபெற்
றிணங்கலார்கழல்
வணங்கமேயினான். (௯)

அங்கவன்பெயர்
சிங்கவன்மன்பிற்
றுங்கமைந்தரும்
பொங்குசீர்த்தியார். (௧௦)

தன்மமேவுசு
வன்மனென்பவோர்
மன்மதன்னிகர்
நன்மகன்பெயர். (௧௧)

தாவில்சீர்த்திசேர்
தேவவன்மனென்
றோவினற்பெயர்
மேவுமற்றவன். (௧௨)

முந்துசெய்வினையாற்காயம்வெண்ணிறமுற்றோனேனுந்
தந்தையும்ரவிதிருட்டாமுதலியவேந்தர்தாமும்
புந்தியாலருளால்வீரத்திறலினாற்பொருவின்மூத்த
மைந்தனையிளவேந்தாக்கன்மரபெனமனத்துட்கொண்டார். (௧௩)

மற்றஃதுணர்ந்துசிங்கவன்மனம்மனுவாந்தந்தை
பொற்கழல்வணங்கியெந்தாய்பூமியைப்புரக்கும்வேட்கை
யுற்றிலனரசுக்கேற்றமாணெழிலுறாமையாலே
கொற்றவெம்பியர்க்கேயுன்றனரசினைக்கொடுத்தியென்றான். (௧௪)

மனுவெனும்வேந்தனானோன்மற்றதுகேட்டுமாழாந்
தனையனுக்கிளையரானவடுதிறற்சிங்கமன்ன
வினைவலசுவன்மன்றேவதன்மனென்றிசைக்குமேன்மைத்
தனயர்கட்களித்தான்பாத்துத்தன்னரசுரிமைதன்னை. (௧௫)

அறிவுடைச்சிங்கவன்மன்பூமியையறத்தினாற்றான்
முறைசெயத்தம்பியர்க்குமொழிந்துதன்றாதைபொற்றா
ணெறியினிற்பணிந்துநின்றுநிருபர்கட்கேநேசம்பு
வுறைதிருத்தலங்களெங்கும்யாத்திரைசெயவுட்கொண்டேன். (கசு)

நல்விடைதருகவென்றானைருதனதுகேட்டைய
வொல்வதன்றுனக்கீதென்னத்தடுத்தனனுரைப்பக்கேளான்
செல்வமேதுணிபாக்கொண்டான்றிருமகன்றாதைமைந்தற்
புல்லியாத்திரைசெய்திங்குப்போகெனவிடைகொடுத்தான். (கஎ)

வெண்குட்டந்தீர்ப்பானெண்ணிவிடைபெற்றுச்சிங்கவன்மன்
றிண்பெற்றபுடவித்தீர்த்தந்திருத்தலமெங்குஞ்சேர்ந்து
மெண்பெற்றமறையோராசிமனுமருந்தெய்தப்பெற்று
மண்குட்டந்தீரக்காணான்மற்றுஞ்சாந்திகளயர்ந்தான். (கஅ)

அருட்சிவதீர்த்தமெல்லாம்விதியுளியாட்டயர்ந்தான்
றெருட்சிவஞானயோகர்க்களப்பிலதானஞ்செய்தான்
முரட்கொடும்பாவநீக்குந்தவம்பலமுயன்றான்மூடுங்
குருட்டகவிருணீக்கீசன்றளிபலகுறுகிச்சூழ்ந்தான். (ககூ)

பரிகாரமினையவாற்றாற்பலசெய்துங்குட்டநோய்தா
னிரியாதுநிலவக்கண்டவிளந்திறற்சிங்கவன்மன்
கரியானெஞ்சழன்றுமாழ்கிக்கவன்றனனிருக்குமேல்வைச்
சரியானோர்வேடர்சில்லோர்சடுதியிலவனைக்கிட்டி. (உ0)

மடங்கலேறனையாய்துட்டவன்றியொன்றிங்ஙனோடு
முடங்குநீயோடிக்கொல்லென்றுரைத்தனரதுகேட்டன்னோன்
கடுங்கணைசிலையிற்கோத்துமாவேறிக்கடிதுபோந்து [போனான்.
கொடுங்கனல்சொரிகட்பேழ்வாய்க்குரோட்டத்தைத்தொடர்ந்து

பொன்னிறக்காயவேனங்கடுகியேபொருவில்சிங்க
வன்மனைநீண்டதூரவரையிழுத்தலைத்துநேருஞ்
சின்மயத்தடாகமொன்றிற்றுடுமெனப்பாயச்சீறி
யன்னனுமதனைக்கொல்வானரியொடுமதிற்குதித்தான். (உஉ)

வாவியிற்குதித்தமைந்தன்கொம்மெனவெழுந்துவன்கட்
டவிழிக்கேழறன்னைத்தேடிமற்றியாண்டுங்காணான்
றூவுடைக்காயமேமவண்ணமாய்த்தோன்றக்கண்டா
னாவியப்பிதுவாமென்றேயகன்கரைமீதுவந்தான். (உங)

கணைக்கணங்கேறுமைந்தன்விம்மிதக்கடலுண்மூழ்கி
யுணைக்கடங்காமகிழ்ச்சியுற்றிதுவென்கனாவோ
புணைக்கழிமயக்கோவன்றியிந்திரசாலப்பொய்யோ
திணைக்கடற்புவியில்யாருந்தேறரும்புதுமைத்தீதால். (உச)

மனத்துயர்க்கடலைக்காணேன்மலியுடலிளைப்பைக்காணேன்
வினைத்துடக்கதனானேர்ந்தவெண்குட்டநோயைக்காணே
ணினித்தணைக்கண்ணேயாவனெக்கிணையென்றானங்க
மனைத்தையும்பல்கானோக்கிவிழியிமைப்பொழிந்தானம்மா. (உரு)

விடற்கருநோயைப்போக்கிப்பொன்னிறமீந்தவந்தத்
தடப்புனலேமவண்ணமாகியேதயங்கறூஉ
மடுத்ததைவாழும்புள்ளுஞ்சலசரந்தாமுமங்கேழ்
மடற்கமலாதியாவுமாழையாயுறலுங்கண்டான். (உசு)

மற்றிதிலிறங்கிமூழ்கலாலெனக்கேமவண்ண
முற்றதுமன்றவென்றுதுணிந்ததைவலம்வந்தொப்பில்
பெற்றிசேர்பேறான்றெய்தற்கிதுகுறியென்றுபேணி
நற்றடவிசேடந்தேர்வான்குதிரைமேற்கொடுநடந்தான். (உஎ)

பரியினைநடத்திச்செம்மனாலுபக்கமும்பார்த்தங்கு
வருகையிலோமதூமமலிதரமறைந்துதோன்றுந்
திருமலிபன்னசாலையிரண்டினங்கணத்திற்றெய்வ
விருடிகளிருவர்நிட்டையேறிவீற்றிருப்பக்கண்டான். (உஅ)

காண்டலும்பரியினின்றுமிழிந்துகைதலைமேற்கூப்பி
மாண்டபேரன்பினாலேகோத்திரப்பேர்வாய்விண்டு
நீண்டதண்டெனவிழுந்துநிலனுறப்பணிந்தானையத்
தாண்டுறையிருடிவேந்தரிருவருமாசிசொற்றார். (உகூ)

அதிசயமனத்தனாகிப்பொன்னொளிபரப்பவாகந்
துதிமலிநாவினோடுந்தொழுதெழுங்குமரரேற்றை
மதிதருமினியவாக்காலுபசரித்தனரம்மாண்ட
விதிவினையெல்லாமன்னோன்விண்ணப்பஞ்செய்தான்மன்னோ. (கூ0)

அரசிளங்குமரன்சொற்றவதிசயவிளைவைக்கேட்டுத்
திருவுளமகிழ்ச்சிபூத்துச்சிவகங்கைமகிமையெல்லா
முணாபுரிந்தறவரேமவன்மனென்றனையற்கோர்பேர்
பரவைசூழ்ஞாலம்போற்றக்காரணம்பற்றியிட்டார். (கூக)

சேடராதரத்தர்லேவவியாக்கிரபாதர்செவ்வி
நாடினர்தேர்ந்துமேலாஞ்சிவதீக்கைதன்னைநாளாற்
பீடுசேரேமவன்மப்பெருந்தகைபெட்பவாற்றி
நீடுசீரைந்தெழுத்தைநெறிப்படவுபதேசித்தார். (௯௨)

அவத்தினைவிளைக்கும்பொல்லாவாணவவிருடான்வீயச்
சிவத்துவவபிவியத்திபெருக்கினர்சிவனூலாற்றிற்
பவத்துயரொழிக்குந்தீக்கைப்பெரும்பேறுபடைத்தவாற்றாற்
றவத்திருவுடையவேந்தனிறப்பவுமேன்மைசான்றான். (௯௩)

முத்திபஞ்சாக்கரத்தைமுறைமையிற்கணித்திட்டன்பான்
மெய்த்திருமன்றவாணனடிக்கீழாதரமிருந்து
சுத்தமார்புலியூர்மேவியிருந்தனனிப்பாற்றொல்சீ
ரத்தன்மாநடனங்கும்பிட்டவன்பெறுமேன்மைசொல்வாம். (௯௪)

வேறு.

படிதவிர்வியாக்கிரபாதப்பேரனு
முடிவில்சீர்ப்பதஞ்சலிமுனியுமோர்பக
லடிநடுமுடிவிலாநடேசவங்கண
னடநவில்சேவடிவணங்கநண்ணினார். (௯௫)

நண்ணியமுனிவரர்நம்பர்தாண்டவங்
கண்ணிணைகளிப்புறக்கண்டுதாழ்ந்துநின்
றண்ணலேயிரணியவன்மற்கானந்தப்
புண்ணியநடனமெம்பொருட்டுக்காட்டென்றார். (௯௬)

அன்பர்காளும்பொருட்டரியுவானந்த
வின்பமார்தாண்டவமேமவன்மற்குத்
துன்பெலாமகன்றிடக்காட்டுதும்மெனா
மின்புரிமன்றிறையாடன்மேயினான். (௯௭)

பாட்டியற்கூத்தனார்பரமர்பார்ப்பதி
நாட்டியத்திறந்தெரிஞானநாயகி
கூட்டுயிர்த்தொகையின்பவீடுகூடுற
வாட்டுமத்திருநடமவர்க்கியற்கையாம். (௯௮)

நாட்டமானந்தநீர்பொழியநாயக
னாட்டினிற்கிளர்ந்தபேரின்பவாழியுள்
வாட்டிறலிரணியவன்மன்மூழ்கியே
வீட்டினன்வினையெனவிளம்பித்தாழ்ந்திட்டான். (௯௯)

இரணியவன்மகேளிவர்பொருட்டெனக்
கருநடங்காட்டினமன்புர்ம்வயிற்
பெரிதுநீயடைந்துநல்வரங்கள்பெற்றனை
யரியவாழ்வடைகெனவமலன்கூறியே. (சு0)

முனிப்பெருவேந்தர்காண்முதிருமன்புடைத்
தனிப்பெருமிரணியவன்மத்தாதற்குப்
பணிப்பெருஞ்சலதிசூழ்பார்வணங்கவின்
னினிப்பெருஞ்சீரபிடேகஞ்செய்கென்றான். (சுக)

பெருந்தவர்சிவபிரானுணைபேணியே
யிருந்தகைவினயனுமேமவன்மற்கு
வருந்திரைப்புவிக்கெலாமன்னனுகெனத்
திருந்தபிடேகநாட்செய்திட்டாரரோ. (சுஉ)

கங்கைநீர்கொண்டபிடேகங்காசில்சீர்த்
துங்கமாதவரிருவோருந்தூய்துற
வங்கண்மாமனுவினுக்காட்டுமன்னுழி
யெங்குநன்னிமித்தங்களெழுந்தசாலவே. (சுங)

மன்னுயிர்த்தொகையெலாந்தருமமார்க்கத்தைத்
துன்னினகுடியெலாந்துன்பகன்றன
பன்னெடுந்திசையெலாம்பரந்தபேரொளி
நன்னறுங்குளிர்வளிநயந்துலாயதே. (சுச)

தேவருக்காகவேதிருந்துசீரவி
நாவினுற்கொளுமரபுடையநல்லழ
லோவறவலஞ்சுழித்தெழுந்திட்டோங்கிற்று
நோவகன்றுயிரெலாநோன்மையுற்றவே. (சுரு)

நூற்றவர்பின்னர்மாஞாலவேந்தனு
மற்றடந்தோளுடையேமவன்மனீ
கொற்றமொடோங்கியேவாழ்வுகூர்கெனச்
சொற்றனராசிமேலினையசொல்வரால். (சுசு)

வேறு.

வென்றிவேன்மன்னகேண்மோநீக்கிதர்மேன்மைசான்றோர்
துன்றுசீர்ப்பிரமயோகவிருடிகள்சுருதிவல்லா
ரொன்றுசீர்மூப்பானூறந்தணர்களெம்முடனித்தில்லை
மன்றமர்பெருமானுடற்றிசித்திங்கிருந்தார்மன்னே. (சுஎ)

இருந்திடுகோலேவேதாயாகமொன்றந்தர்வேதிப்
புரிந்திடுவிக்கவன்ஞோர்தமையெலாமழைத்துப்போனான்
றிருந்துசீர்மறையோரீரைந்தாயிரம்யாண்டுசென்றும்
வருந்திறங்காணகில்லேமறனுடையரசரேறே. (௪௮)

மலரயன்வேள்விநீட்டித்திடுதலான்மாசில்வேள்வி
நலனுறப்புரியுமந்தநல்வினைக்கண்ணேநின்றார்
விலகிடப்பெறமாட்டாராய்விளம்பனமுற்றார்மன்ன
குலமணிப்பொற்றேரூர்ந்துபிரயாகைகுறுகிநீயே. (௪௯)

இரணியகருப்பன்மாடேயனுமதியையப்பெற்று
விரதநன்ஞானயோகவிப்பிரேந்திரர்கடம்மைத்
தருதியீண்டழைத்துவல்லேயென்றனர்தடந்தோண்மன்னன்
புரிவனும்பணியென்றேதிப்பணிந்துதேரேறிப்போனான். (௫0)

உலகெலாம்போற்றுஞ்சீர்த்திப்பிரயாகைதன்னையொல்லை
வலனுடைத்திகிரிவேந்தனெய்திவான்கங்கையோடங்
கலகில்சீர்யமுனைசேர்சங்கமம்படிந்தளப்பில்காலஞ்
சொலலருந்தவமுழந்தான்சுயம்புமற்றவன்முனுற்றான். (௫௧)

என்பெறவிரும்பிநோன்பிங்கியற்றுதியென்னமன்னன்
றன்பெருங்குறையையன்னேற்கிறைஞ்சினன்சாற்றியிட்டான்
மின்பிறழ்கமலப்புத்தேள்வேள்வியைநிரப்பிவல்லே
யின்புறவந்தணாளர்தக்கிணைபலவுமீந்தே. (௫௨)

எல்லைதீர்மறையீர்நீவிரிரணியவன்மனோடு
வல்விரைந்தடைமின்றில்லைமாவனந்தன்னையென்று
நல்விடையீந்தானென்பநற்றவமறையோர்வேந்தற்
புல்லினர்பொற்றேரேறிச்சடுதியிற்புலியூர்வந்தார். (௫௩)

வந்திடுமந்தணாளர்க்கிரணியவன்மவள்ளன்
முந்துசீர்முனிவரானோரிருவருமேவுமுன்னர்
மந்திரம்பலபொன்னானுமாமணியாலுஞ்செய்வித்
திந்திரதிருவுநல்கியினிதுபசாரஞ்செய்தான். (௫௪)

மும்மையாயிரவர்நம்முளொருவனைக்காணான்மூத்த
செம்மைசேர்திகிரிமன்னன்றெருமரலடையுஞ்செவ்வி
யெம்மையுமொருவராகவெண்ணிடென்றினியவாக்கா
லம்மையோடப்பனானடராசனருள்புரிந்தான். (௫௫)

மீதவத்தில்லைவாழந்தணர்செயும்வேள்வியாலு
மோதருமறைத்தனிப்பேரோதையிஞலுஞ்சூழு
மாதிரத்தொகைவிளக்குமாண்டவேள்வித்தீயாலும்
பாதவத்தில்லைமூதூர்விள்ங்கிற்றுப்பாரிஞேங்கி. (ருசு)

சிவன்றிருவடிக்கீழ்ப்பத்திசெழுமறைச்சைவநீதி
பவன்றிருப்பூசையாதியுலகெலாம்பயின்றிட்டோங்கத்
தவந்திகழேமவன்மச்சக்கிரவர்த்தியென்பா
ணிவந்தெழுகடற்பார்முற்றுங்கிரறச்செங்கோலுய்த்தான். (ருஎ)

இந்நெறியுயிர்களோம்பியிருந்தனனேமவன்மன்
முன்னவன்கஞவிற்ருேன்றியிவன்பெறுபேறுமுற்றும்
பன்னிடவுணர்ந்ததேவவருமனும்பரம்புசீர்ச்சு
வன்மனுந்தானைசூழத்தில்லைமாவனத்தையுற்ருர். (ருஅ)

சார்ந்ததம்பியர்கட்டம்முன்றபணியவடிவங்கண்டே
யார்ந்தபேரழகுவாய்ந்தவமரரைக்கண்டாலொப்பக்
கூர்ந்திடுவியப்பிஞேடுகளிப்புளங்குதிகொண்டோங்கச்
சேர்ந்துகைகுவித்துச்சென்னிசிரத்தையின்வணக்கஞ்செய்தார். (ருக)

வணங்குபின்னவரைமன்னன்கரங்களாலெடுத்துமார்பி
விணங்குறப்புல்லிச்சேமம்விஞயுபசரித்தானின்ஞேன்
குணங்குறிகடந்தமேலோனருளிஞற்கோளார்சியக்
கணமபதிஞயிரத்தின்வலிபெற்றுக்காட்சிமிக்கான். (கூ0)

அளவில்பேரழகிஞல்வேளனங்கஞய்மறையவென்றே
யிளவரியேறுபோலவிளங்கிளவேந்தலான
வொளிமிகுமேமவன்மப்பெருந்தகைதன்னையொப்பில்
களிமயிற்சாயல்வேந்தர்கன்னியர்காமுற்ருரால். (கூக)

குலவுபுல்வளங்கொண்டண்மும்யாறுகளோடுகூடி
நிலவுபல்வளங்கொளாழிவிளங்கிமேனிமிர்தன்மான
வலகில்பல்வளங்கொண்டண்முமரசகன்னியரோடொன்றி
யுலகமன்னவர்கோஞஞேனவனிமேல்விளக்கமுற்ருன். (கூஉ)

வளங்கெழுமேமமன்றவாணர்பேரருளிஞலே
விளங்குசீரணிமாவாதிசித்திகளெட்டும்வீரு
ரிளங்கிளரரியேறன்னவிரணியவன்மன்றன்னைக்
களங்கறவொருங்குவந்துகலந்தனநிலந்தன்மாடே. (கூ௩)

சித்திசாரோமவன்மன்றிங்கள்வாண்முகத்தாண்மந்தன்
புத்திரியானசீர்த்திச்சித்திரைபுகரில்வேற்கண்
வித்தகமயன்குமாரிசுமித்திரைவிறற்குபேரன்
பத்திசாறவத்தாற்பெற்றபழிப்பில்சீர்க்குந்தியென்பாள். (௬௪)

புனற்பெருவேந்தனீன்றபொம்மல்வெம்முலைவசந்தி
பனிக்களியமுதமூற்றும்பான்மதிபயந்தவாட்கட்
டனிக்கண்மாமலர்க்கொம்பன்னவிபுலையத்தழல்பயந்த
குனிக்கும்வின்னுதற்காரோதிச்சுலோசனையெனும்பேர்கொண்டாள். ௬௫

பருதியின்மகளாம்யாணரிராதையப்பழிப்பில்சீர்த்தி
நிருதியின்மகடேமுத்தவாணகைநியதியென்பாள்
பொருதிறற்பவனனீன்றபொற்றடமுலைச்சீராசை
திருமயித்திரிமந்தாரமஞ்சரித்திருமாதன்றே. (௬௬)

மாசில்வாசுகிபயந்தபத்திரையெனும்பேர்மங்கை
தேசுடைச்சங்கபாலன்றிருமகள்சுபத்திரைப்பெண்
ணாசில்வேள்பயந்தமாமைமாலதிமதுவினன்பா
ரோசில்சீர்த்தங்கையானமாதவியெனும்பேரோய்ந்தாள். (௬௭)

வருடபர்வங்களீன்றவித்தைவிசாலவக்கி
திருநிகர்வரோணிமிக்கதிறல்கொளாயுடன்றன்றங்கை
பொருவில்சீர்ச்சாமையோடுபுகழ்விசுவாவசுப்பேர்
மருவினோன்புதல்விசாயையெனுமிளிர்வடிவேற்கண்ணாள். (௬௮)

நற்குலக்கன்னிமார்களெனைப்பிறரையுநன்னாளாற்
யெற்புடையியங்களேங்கக்கடிமணம்புரிதந்திட்டா
னற்புடன்மகம்பல்வேட்டேயறப்பகையாகிவாழும்
பற்பலதீபமன்னர்ப்பகைகெடப்பொருதான்மன்னோ. (௬௯)

திறன்மிகுமாபத்தம்பரொடுசெயத்தம்பற்சேர்ந்தே
யறமிகப்பொருதுவாகைமாலிகைமலைந்தானன்றே
யிறைநடராசமூர்த்திக்கியாவருமிறும்பூதெய்த
மறைசிவநூலாற்செல்வவிழவெலாமலியச்செய்தான். (௭0)

சின்மயமானவம்மைசிவகாமித்தேவியர்க்கு
நன்மைசாலுற்சவங்களனைத்துநன்னூலாலேம
வன்மனார்புரிந்தாரோர்பேர்மாழையின்வண்ணந்தந்த
தன்மையாலிட்டாரோமசரசெனச்சிவகங்கைக்கே. (௭௧)

இன்னணம்பணிகளன்பானியற்றிடுமேமவன்ம
மன்னவர்பெருமானுக்குநடராசப்பெருமான்மாண்பார்
வின்மலிபுட்பகப்பேர்விமானத்துக்கிணையர்ம்யாணர்
துன்னுசந்திரகநற்பேர்ச்சோதிநீள்விமானமொன்றும். (௭௨)

வாடுதலின்றியென்றுநறுமணங்களுற்றும்வண்சீ
ரேடவிழ்கழுநீர்ப்பூவுமமிர்தமாலையுமிருஞ்சீர்
கூடுநீள்சிலையுமம்புக்கூடுநன்னவவிதங்கொள்
பாடுசான்மணிகொளாரப்பரம்பொளிவடமற்றொன்றும். (௭௩)

மாளுதலில்லாயாணர்மணிகொள்கங்கணமும்வாய்ந்த
காளகூடப்பேர்வாளுங்கருணையாலளித்தானென்ப
வாளுடைவியாக்கிரேசரருளினாற்புலிக்காலண்ணல்
வாளுடைமன்னவற்குவயப்பெருங்கொடியொன்றீந்தான். (௭௪)

அருளுடைப்பதஞ்சலிப்பேரறிஞர்கள்கோமான்மாண்பாற்
றெருளுடைத்திகிரிமன்னற்கவனியைத்தாங்குந்திட்பம்
வரனுறக்கொடுத்தான்வேந்தன்வசுந்தராநகர்களிற்போ
லுருளுடைத்தடந்தேர்வானமீதுமுய்த்தாடியுற்றான். (௭௫)

சுக்கிரவாளந்தொட்டுப்பூமிசக்கரத்தின்காறுந்
தொக்கபல்சனங்களெல்லாந்துன்பொரீஇநடராசன்சீர்
மிக்கபாதாரவிந்தப்பத்தியின்விளங்கியோங்கப்
பொக்கநீங்கிடமாஞாலம்பொதுநீக்கிப்புரந்தானம்மா. (௭௬)

விலைவரம்பறியலாகாமணிகளினாலுமிக்க
நிலவுசெம்பொன்னினாலுநிருத்தர்சன்னிதியிலெட்டைத்
தலைமிசைக்கொண்டநூறுதுலைகொளும்புருடதானம்
பலவிசேடங்கொடானவகையொடும்பணினான்மன்னன். (௭௭)

மீதலத்தேவரோடுபூதலத்தேவர்விஞ்சு
மாதரத்தாரவேள்வியளப்பிலசெய்தானென்று
மாதனத்தியாகத்திரோற்சவத்தினைச்சிவகாமிக்கு
நாதனற்புதநடேசமூர்த்திக்குநயப்பிற்செய்தான். (௭௮)

முருகவேளெனச்சீர்வாய்ந்துமூதுக்குறைவுடையநூறு
திருமகார்தம்மைப்பெற்றுச்சீருடையயோத்தியாதி
வரமிகுதேயந்தோறுமனுநெறியோம்பவைத்தான்
விரிகடற்புவியாள்வேந்தர்வேந்தனுமேமவன்மன். (௭௯)

அந்தநற்குமரராஞேரனைவருமளப்பில்சீர்த்தி
யிந்திரச்செல்வமெய்தித்தாமுறைமையிடங்கடோறு
முந்தனற்புதநடேசமூர்த்தியைப்பதிட்டைசெய்தார்
சந்ததிக்குழவிஞேங்குந்தபனியவன்மனென்பான். (அ0)

இம்முறைவிதியாற்பூசைநடராசப்பிரானுக்கென்றுஞ்
செம்மையிற்புரிவித்தன்பாற்சிவதன்மந்தவந்தியான
மம்மமிக்குளுற்றிநல்லவிராகமுற்றரியஞானங்
கைம்மிகத்தூக்கியாடுங்கழலின்கீழ்க்கலந்தொன்றுஞன். (அக)

இச்சுபசரிதந்தன்னைச்சிரத்தையினினிதுதேரு
மெய்ச்சிவபத்தராஞேர்க்களப்பில்சங்கரராமேலாஞ்,
சச்சிதானந்தநித்ததாண்டவநடேசராஞேர்
துச்சவல்வினைகணீக்கிச்சுகானந்தம்வழங்கநன்றே. (அஉ)

வேறு.

பதஞ்சலிவிரணியவன்மன்பாய்புலிப்
பதஞ்சலிப்பறப்பெறுமுனிவன்பார்த்துய
விதஞ்சலிலம்புனைவிமலர்செய்நட
விதஞ்சொவிஞுமினித்தீர்த்தம்விள்ளுவாம். (அஙு)

ஏமவன்மப்படலமுற்றிற்று.

## தீர்த்தவிசேடப்படலம்.

திகழ்சிதம்பரமகிமையுந்தாண்டவத்திறமு
மகிழ்வொடிங்குநீவாய்மலர்ந்துரைசெயக்கேட்டியா
முவகையங்கடற்படிந்தனமுரைமனங்கடந்து
மிகுசிதம்பரதீர்த்தமான்மியமுணர்விருப்பேம். (க)

ஆதலானமக்கருந்தவர்க்கரசவத்தில்லை
மாதலத்துளதீர்த்தங்களனைத்துங்கொண்மகிமை
போதமேவுறத்தனித்தனிபுரைதபவிரித்திங்
கோதுவாயெனமுனிவரர்வசிட்டன்கேட்டுரைக்கும். (உ)

நன்றுநன்றுநீர்கேட்டதுமுனிவிர்காணன்கு
துன்றிமேம்படுமறம்பொருளின்பொடுதூய்மை
யொன்றுவீட்டினையுதவியெவ்வுலகுக்குமினிதாய்
நின்றதீர்த்தமான்மியமுமக்கியம்புதுநெறியால். (ஙு)

### வேறு.

தில்லைமாவனத்திற்பாவமனுக்கிடுஞ்சிவதீர்த்தங்கள்
பல்லவுண்டவற்றின்மிக்கபிரசித்திபடைத்துமாண்பார்
சில்லதீர்த்தங்கள்கொண்டமான்மியந்தேறநீவிர்
சொல்லலுற்றனமிப்போழ்துசிரத்தையிற்றொடர்ந்துகேண்மின். (௪)

### ஏமபுட்கரணி.

சுருதிமந்திரங்கட்குள்ளே தூயவைந்தெழுத்துமெங்க
ளரியபேறெல்லாநன்குபயந்திடவல்லதங்ஙன்
பெருமைசேர்தீர்த்தந்தம்முளேமபுட்கரணிப்பேர்கொள்
வரமலிதீர்த்தமெல்லாச்சித்தியுமுடன்வழங்கும். (௫)

ஏமபுட்கரணிதன்னின்மார்கழிமாதத்தெய்துந்
தோமிலாதிரைநன்னாளிற்சூரியவுதயப்போழ்திற்
காமமாதிகணீத்தன்பான்முழுகிக்கோதானங்காசின்
மாமைசாலேமதானம்விதியுளிவழங்கிமன்னோ. (௬)

மௌனியாயெங்குமாகிவயங்கிடுஞானானந்தச்
சிவபிரானடனந்தன்னைத்தரிசனஞ்செய்வாரிங்கே
யுவமையில்ஜீவன்முத்தராகுவருண்மையீதா
லவமெலாமகற்றிமேலாமருந்தவந்தனமாக்கொண்டோர். (௭)

கரைந்திடற்கரியசீர்கொளேமபுட்கரணிதன்னி
னிரந்தபேரன்பான்மூழ்கித்தென்றிசையதன்பானீடிப்
பரந்தமாமறையான்மூலத்தானவீசுரனைப்பத்தி
புரிந்துகண்டிறைஞ்சுநல்லோர்புண்ணியபுருடராவார். (௮)

### பாசவிமோசனம்.

திகழ்சிவகங்கையென்றுசெப்புமித்தீர்த்தக்கீழ்பா
லிகழ்வறுபாசமோசனம்மெனவிசைக்கும்பேர்கொள்
புகழ்பெறுதீர்த்தமொன்றுபொருந்துமற்றதுதான்றன்னை
மகிழ்வுடன்மனனஞ்செய்வோர்பவப்பிணிமுழுதுமாற்றும். (௯)

வீறுசான்மாசிமாதமகத்தினில்விதியாலந்தப்
பேறுசாறீர்த்தந்தன்னுட்படிந்துறப்பிராகாரத்தை
மாறிலாமௌனியாகிவலம்வந்துமூலத்தானத்
தாறுசான்முடியினானைத்தரிசிப்பானறுக்கும்பாசம். (௧௦)

மேலொருகாலத்தின்கண்விப்பிரசித்தியென்னு
ஞாலவேந்தனுந்தரங்கநளிகடற்கிறைவன்றானும்
வேலிரும்படைகைக்கொண்டுகொடுஞ்சமர்விளைத்தார்வென்றி
சாலும்விப்பிரசித்திக்குச்சமுத்திரவேந்தன்றோற்றான். (கக)

தோற்றவவ்வருணனென்பான்பகைஞனைத்தொலைவுசெய்தற்
கேற்றிடுஞ்சூழ்ச்சியாதென்றெண்ணமுற்றிருந்தகாலைப்
போற்றுமாண்டளப்பானன்னதறிந்தந்தப்பொல்லாவேந்தற்
பாற்றவோருபாயநாடித்துணிந்துற்றான்வருணன்பாங்கர். (க௨)

வருணன்மற்றதனையோரான்விப்பிரசித்திமன்னன்
பொருவதற்கடைந்தானென்றுகலங்கினன்பொருவில்பாச
முரனுறக்கொண்டுமாற்றாற்கொல்கின்றேனென்றுள்ளூக்கிக்
குருவின்மேற்கொதித்தெறிந்தானவிசாரமுயிர்க்குக்கூற்றாம். (க௩)

கொடுந்திறற்பாசந்தன்னாற்குரவனெற்றுண்டுமாண்டு
நெடுந்திரைக்கடலில்வீழ்ந்தான்குருகத்திநேமிவேந்தை
யடர்ந்ததப்பொழுதுபன்னீராண்டுகாறுலியின்றிக்
கடுந்துயர்க்கடலுண்மூழ்கியுயிரெலாங்கலக்கமுற்ற. (க௪)

இப்படிநிகழுங்காலைத்தேவர்களியாருஞான
தப்பிரசபையின்மேவுந்தாண்டவப்பெருமான்றன்னை
மெய்ப்பரிவோடடைந்துவணங்கிவிண்ணப்பஞ்செய்தா
ரப்பெருங்குறைகேட்டெம்மான்வாய்மலர்ந்தருளிக்கூறும். (க௫)

மாசிமாதத்துமூலத்தானத்துக்கெதிரோமன்னும்
பாசமோசனத்தினீவிர்விப்பிரசித்திபாறித்
தேசின்மேம்படுமாவேண்டிற்றிரைக்கடற்கரசன்றன்னை
நேசமோடாடுவிக்கநீங்கிடுங்குருவின்கத்தி. (க௬)

எம்முடையாணையாற்றாற்பொன்னுவனுயிர்பெற்றெய்திச்
கொம்மெனவெழுமென்றிவ்வாறருள்செய்தான்சூழீஇயதேவர்
தம்மனவன்பாற்றாழ்ந்துதிருவிடைபெறறுத்தாவில்
சும்மைசேர்பாவநீக்கத்தூயதீர்த்தத்தையுற்றே. (க௭)

மணிமுடியாணையாற்றான்மலிபுனற்கிறைவன்றன்னை
விதியின்மூழ்குவித்தாரங்கண்மிக்கெழுகுருவின்கத்தி
கதுமெனநீங்கிற்றம்மவமைச்சனுங்கடிதெழுந்தா
னிதுவியப்பிதுவியப்பென்றியாவருமிறும்பூதுற்றார். (க௮)

அன்றுதொட்டந்தத்தீர்த்தமடர்பாசவிமோசனப்பேர்
நன்றுபெற்றுலகமூன்றுந் துதித்திடனண்ணுஞானந்
துன்றுசீர்முனிவிரிந்தத்தீர்த்தத்தைத்தொடருங்காதை
யொன்றுளததுபிதிர்ப்பிரீதியையோங்குவிக்கும். (௧௯)

மன்னுயிர்த்தொகுதியண்டப்பரப்பெலாம்வயங்கவீன்றுங்
கன்னிகைப்பருவநீங்காக்கருணைகூர்சிவபிராட்டி
முன்னொர்நற்பொழுதுபுண்டரீகமாபுரத்துமுன்னோ
னன்னர்மெய்ப்பாதப்போதில்வணங்கினளவிலலுற்றாள். (௨0)

நீக்கமதின்றியெங்குநிறைந்திடுநாதகாலப்
போக்கினெவ்வுலகுளாரும்பொருந்துவராரியவீடிங்
கூக்கிடிற்பிதிர்முத்தியுறுநெறிகாணேன்றூய
வாக்கினாலவர்தாம்வீடுமருவுறுமார்க்கஞ்சொல்வாய். (௨௧)

என்றருட்சிவபிராட்டியெடுத்திதுவினவஞான
மன்றமர்பெருமானன்புவாய்ந்தமாதேவியேகே
டென்றுசீர்ப்புரட்டாதிப்பூரட்டாதியுவாவிற்றொக்கே
யுன்றனோடியாமப்பாசவிமோசனத்துதயமாவேம். (௨௨)

கங்கைகாவிரிநற்றுங்கைகவேந்திரசையோர்வாய்ந்து
பொங்குகோதாவிரிப்பேர்ப்புண்ணியநதிபெருஞ்சீர்த்
துங்கமார்பேனரோகைதூய்மைசால்கிருட்டிணைப்பேர்
தங்குமாநதியேவேகவதிமுதற்சரித்தியாவும். (௨௩).

கொடுத்திடற்கரியசித்தியெவையவையெல்லாங்கூறும்
வடுத்தவிர்தீர்த்தமந்தச்செவ்வியில்வழங்கவற்றா
மடுத்ததின்மூழ்கியப்போழ்தெவன்பிதிர்கருமமாற்றுந்
திடத்தவன்பிதிரர்சேர்வர்நம்முருச்சிவையேயென்றான். (௨௪)

இன்னணமெம்பிராட்டிக் கீசனாரருளுநீரா
லன்னவேலையிலத்தீர்த்தத்தாடியேகருமஞ்செய்வோன்
றன்னுடைப்பிதிரர்நன்மைதழீஇச்சிவபதத்தைச்சார்வர்
பின்னர்மற்றனையனெய்துஞ்சிவமென்கைபேசல்வேண்டா. (௨௫)

நூபுரநதி.

பரிசித்தமாத்திரத்திற்பவங்கெடுத்தான்மசுத்தி
வரசித்தியளிக்கவற்றாய்நூபுரநதிப்பேர்வாய்ந்த
பிரசித்ததீர்த்தமொன்றக்கினிதிசைப்பிறங்குமான்றீர்
கிரசித்தமேவிமூழ்குஞ்சீரியோர்தமக்குச்சித்தி. (௨௬)

உடங்குறவுடனேநல்குமொப்பிலாநடராசன்றா
னடஞ்செயும்பொழுதோர்ஞான்றுநற்றிருவடியினின்றுந்
திடங்கொணூபுரங்கழன்றுதிருவருளாலிதன்கட்
கிடங்குறவீழ்ந்ததற்றாற்கிடைத்ததிப்பெயரிதற்கே. (உஎ)

ஆடிமாதத்திலோங்குமணையிறக்கடுகிப்பேனப்
பீடுசேர்பொன்னிதேங்கிப்பிரவாகித்திடுநற்போழ்திற்
பாடல்சால்குமரனள்ளும்பார்ப்பதியிடமுமாகக்
கூடுமெம்பிரான்முன்னீதிலாடுவான்வீடுகூடும். (உஅ)

யமதீர்த்தம்.

தக்கிணதிசையின்மாடேயமதீர்த்தமெனப்பேர்சாலு
மிக்கநற்றீர்த்தமொன்றுமேவுமற்றதிலோர்போழ்து
புக்குமூழ்குநர்கண்முன்னர்ப்புரிந்தமாபாதகங்க
ளக்கணந்தன்னின்மாயுமருஞ்சிவப்பேறுகூடும். (உகூ)

அந்தகன்மார்க்கண்டேயமுனிவனைவிரோதித்தந்நா
ணிந்தைசாறரப்புரிந்ததீவினையடரநீங்கு
முந்தைநல்லதிகாரத்தைமுன்புபோற்பெறுமாறாக்கி
யிந்தநற்றீர்த்தமாடியெம்பிரானருளினாலே. (கூ0)

தன்னதிகாரமெய்தித்தன்பதமடைந்தானற்றான்
மன்யமதீர்த்தமென்னவழங்கிடும்பெயரிதற்கோர்
நன்னர்மாசரிதமுண்டுநற்றவமுனிவிரன்ன
துன்னன்மாத்திரையிற்பத்தியுறுவிக்குநடராசன்கண். (கூக)

சீர்த்திசான்முனிவிரந்தத்திப்பியசரிதங்கேண்மி
ஹார்த்துவபாததேயத்தோதமிக்கொழுகுங்கோள
மாத்திருநதியின்மாடத்தியாசன்னபுரப்பேர்வாய்ந்த
நாத்துதிப்பரியசீர்சானற்பதிமற்றொன்றுண்டால். (கூஉ)

சந்தைசால்வேதநான்குமோதிடுந்தகுதிசான்ற
வந்தணர்துன்றிவாழுங்கிராமமற்றதனுக்கோர்பான்
முந்துநீளிடையினீசபதியொன்றுமுற்பட்டோங்கு
நந்தவொன்றொருவரந்தச்சேரிக்குநாதராவார். (கூகூ)

பிறந்தநாட்டொடங்கியீசன்பிரசநன்மலர்த்தாளின்கட்
சிறந்தவன்புடையராகிச்செய்வினைதிருந்தச்செவ்வே
யறந்தவாமரபினாற்றியொழுகுவார்பேரியாதி
திறந்தருதோலியங்கள்சிவலயங்களுக்கமைப்பார். (கூச)

சங்கரனடிக்கீழ்ப்பேணும்பத்தியேதனமதாக
விங்குறப்புரிந்துவாழ்வார்கெடுநெறியாதுமில்லா
ரங்கணனடியார்தம்மையவனெனக்கருதியன்பு
பொங்கிடவழிபாடாற்றியொழுகிடும்புலமைமிக்கார். (௫௫)

நிருமலன்றிருக்கோயிற்குநீளிடைவெளியேமுன்னின்
றொருமையிற்பாடலாடல்செவிமடுத்துவப்பாரன்னோர்
திருமலிதில்லைமேன்மைசிவனடியார்கள்சொல்லப்
பரிவுடன்கேட்டுக்கூத்தப்பிரான்கழல்பணிவேனென்பார். (௫௬)

நாடொறுமுதயப்போழ்தினடராசற்றொழுமாதில்லை
கூடுவனென்றெழுந்துந்தொழிறடையாகிக்கூர்த
னேடினர்நாளைப்போவேனென்றுநாணீப்பார்நாமம்
பீடுசாறிருநாளைப்போவாரெனப்பெற்றாரற்றால். (௫௭)

இறைவனூர்தில்லைகாணுமாசைமிக்கேறலாலே
கறையிலாநாளைப்போவாரொருபகற்கடிதெழுந்து
பறழ்கெழுமனையைவிட்டுப்புறப்பட்டாரதனைப்பார்த்த
வுறவராம்புலையோர்கூடியினையனவுரைக்கலுற்றார். (௫௮)

தில்லைமாமறையோர்வைகுந்திப்பியதலமற்றங்குச்
செல்லுதனீசராயவுமக்கடாதிரும்புகென்று
சொலவினர்தடுத்தார்தொண்டர்பத்தியாற்கேளார்தில்லை
யெல்லையைவல்லையெய்தியிறைஞ்சினரெழுந்துநின்றார். (௫௯)

விரிந்தசீர்த்தில்லைவாழந்தணர்செயும்வேள்வித்தூமம்
பரந்தெழல்கண்டும்வேதவொலிகேட்டும்பதைபதைத்தே
யிருந்தகையிதன்கணுயேனேகுதல்கடனன்றென்று
திருந்ததனெல்லையின்கணின்றனர்சிறந்தவன்பர். (௬௰)

பத்தியின்மிகுதியாலேவிதிநெறிபாராராகிச்
சித்திசாறில்லையுள்ளேசிறிதிடம்போய்வீதிக்கண்
மெய்த்தகைநாளைப்போவார்நின்றிட்டார்கண்டமேலோ
ராத்ததன்றுமக்கீதுள்ளேசென்றிடவொட்டேமென்றார். (௬௧)

முற்றுணர்முப்பானூற்றுமுனிவரரதுகண்டுள்ளே
யுற்றிடறகாதுவேதவேள்விகளோம்புவார்சேர்
நற்றலமிதுவாமென்றுநயம்படவுரைத்தாரன்னோர்
சொற்றிடுமுரைகேட்டன்பர்துணுக்குற்றுச்சிறிதுநின்றார். (௬௨)

எப்படியாலுமுள்ளேயேகுவனென்றுபின்னுந்
தப்பிலாநாளைப்போவாருக்கியுமறைச்சடங்கா
லொப்பில்வேதாகமத்தோடுயர்*சூதனொலிமாலைப்பேர்த்
திப்பியவொலியாலுள்ளேசெலப்பெறார்திரும்பியிட்டார். (சங)

திரும்பியநாளைப்போவார்சிதம்பரத்தினைத்தூரத்தே
யுரும்பிமிக்காருமன்பால்வலங்கொண்டோரிடத்தையண்மி
நிரம்பியகவலையோடுமிருந்திந்தநீசயாக்கை
பரம்பரன்றரிசனத்துக்கிடையூறாய்ப்பவித்ததென்பார். (சச)

ஆகுலக்கடலுளிங்ஙன்றிருநாளைப்போவாராழ்தல்
சேகுடைக்கனகமன்றிற்றிருநடம்புரிவாரோர்ந்து
பாகமிக்குடையவன்னோர்பயில்கனாவிடைவெளிப்பட்
டோகைமிக்கரும்புழுரன்முகத்தினொன்றுரைப்பாரானார். (சரு)

பத்தியெம்பாலினன்குபழுத்தமெய்யடியகேட்டி
யித்தனுவோடுமுள்ளேயேகன்மாதுமையன்றானீ
மொய்த்தசிரியமதீர்த்தம்படிந்துசெந்தீயுண்மூழ்கிச்
சுத்திசேருடலம்யாருந்துதித்திடப்பெற்றெழுந்தே. (சசா)

அந்தணரோடுகூடியளப்பிலானந்தநீடு
நந்தமாநடனந்தன்னைநயப்பினால்வியப்புநீட
வந்தனைகாண்டியென்றுமறைந்தனர்நாளைப்போவா
ருய்ந்தனனென்றுதுள்ளியுவகையங்கடலுட்டாழ்ந்தார். (சஎ)

அந்தணர்தமக்குந்தில்லைமன்றுளார்கனவிலண்மி
நந்தனென்றுளனோர்நீசனமக்கன் புமிக்கானானைச்
செந்தழற்குளிக்கவேட்டானமன்பெயர்த்தீர்த்தமாடே
வெந்தழனீவிர்யாரும்வளர்க்கநம்விதியாலென்றார். (சஅ)

நடராசனாணையீதாநாமெலாமங்கியோம்பக்
கடவேமென்றந்தணாளர்சாதிசங்கற்பநீத்தன்
புடன்யாருமெழுந்துகாலைக்கடன்முறையுனாற்றிநந்த
ரிடமேவிநம்பராணையெடுத்தவர்க்கினிதுகூறி. (சகூ)

அந்தகன்றீர்த்தமாடேயங்கியைவளர்த்துநன்கு
வந்தவர்க்கூவியன்பாலையோமற்றுமக்கா
வெந்தழல்வளர்த்துவிட்டேமென்றனர்கேட்டமெய்ய
ருய்ந்தனனென்றன்னோரைவணங்கினரொருமையன்பால். (ரு0)

---

* சூதனொலிமாலை—புராணம்.

தொழுதெழுநாளைப்போவார்மறலியின்றீர்த்தந்தோய்ந்தே
யெழிலதன்சேதுவின்கண்ணந்தணர்வளர்த்தயாகச்
செழியதீச்சுவாலைதன்னைவலங்கொண்டுசிவபிரான்றா
ளுழுவலன்பானினைந்தவ்வோங்குதீயுட்புகுந்தார். (௫௧)

புக்கவந்நாளைப்போவார்புலையுடலொழித்துச்சோதி
மிக்கமேனியுமுந்நூலும்விளங்குமான்றோலும்யாணர்
தொக்கநற்பலாசத்தண்டுமுஞ்சிபந்தனமுந்தோற்றத்
தக்கநற்பிரமசாரிமுனியெனத்தாமெழுந்தார். (௫௨)

அருமறைவாக்கியத்தோடளப்பில்சீர்ப்பெரியபஞ்சப்
பிரமமந்திரமும்வாயாற்பிறங்கவுச்சரித்துவேள்வி
யெரியினின்றெழுவார்தம்மையாகமாபுருடனென்று
திருமலிதில்லைவாழந்தணரெலாஞ்சிந்தைசெய்தார். (௫௩)

அந்தரநிரந்துதேவரலர்மழைபொழிந்தார்தேவ
துந்துபிமுழங்கியெல்லாத்திசையினுந்துன்னிற்றப்போழ்
திந்திமாதீர்த்தமேன்மையெவைக்குண்டென்றிறும்பூதெய்திச்
சந்தமாமறையோர்யாருந்தளாயுறவதைப்பணிந்தார். (௫௪)

தில்லைமாமறையோர்யாரும்பூசுரச்சிரேட்டராகி
யொல்லையங்கெழுந்தவேதமுனிவரைப்புகழ்ந்தாரொப்பி
னல்லமாமுனிவரன்னோருடன்வரநடந்துள்ளேபோய்ச்
செல்வர்வாழ்கின்றதூயசிதம்பரத்திடைமறைந்தார். (௫௫)

மறைந்திடக்கண்டவன்பர்துதியெடுத்தார்த்தார்மற்றச்
சிறந்தமாமுனிவரானோர்தூக்கியசேவடிக்கீழ்
நிறைந்தசாரூப்பியத்தையடைந்தனர்நேயமிக்க
வறைந்தசீரறுபான்மும்மையடியருளொருவரானார். (௫௬)

சிவபிரானுடனெஞ்ஞான்றுந்திகழ்கின்றார்சிவணியன்னோ
ரவர்களித்தீர்த்தந்தன்னையெய்திமூழ்கிடுவரின்று
முவமையிலிதனையாவருளத்தில்வைத்துபாசிக்கின்றா
ரவர்சிவப்பிரசாதத்தையடைகுவரறிவான்மிக்கீர். (௫௭)

இந்தநல்லியமதீர்த்தமகிமைதானியாவருக்கும்
புந்திசெய்திடற்பாற்றன்றுபுகன்றிடினியாவன்மிக்கு
முந்துமன்பாவிதன்சீர்கேட்டுவக்கின்றான்முன்செய்
நிந்தைவல்வினையினீங்கிச்சிவம்பெறுமவனிறைந்தே. (௫௮)

யாவன்மற்றிதன்கண்மூழ்கியிணையிலாநடேசன்றன்னை
யோவிலன்போடுசென்-றுதரிசிக்கலுறுகின்றான்மற்
றவனற்சாலோகாதிநான்கையுமடையுந்தேவ
தேவன்மெய்யறிவானந்தநடராசனருளின்சீரால். (௫௯)

யௌவனதீர்த்தம்.

பொருவில்சீர்த்திசால்யௌவனதீர்த்தமிப்புவியூ
ரொருதென்மேற்றிசையுளதுமற்றஃதிளம்பருவ
மருவமூழ்குவோர்பருகுவோர்தமக்கெலாம்வழங்கு
மருமருந்துநேரதற்குமோர்காதையுண்டறவீர். (௬0)

தம்மைக்கண்டிடுஞானக்கண்ணுடையர்கடம்மா
லம்மெய்க்காதைதான்புகழ்ந்திடப்பட்டதொன்றறவீர்
செம்மைச்சீர்த்திருநீலகண்டப்பெயர்சிவனு
மெய்ம்மைத்தொண்டரால்விளக்கமுற்றிடுமதுமிகவே. (௬௧)

பரந்தசீர்ச்சிதம்பரத்திலேபலகண்டகுலத்தில்
வருந்தகைத்திருநீலகண்டப்பெயர்மருவுந்
திருந்துசீர்த்தியாரொருவர்மற்றுளரவர்சிவனார்
பொருந்துகோயிற்குமட்கலம்வனையுமொப்புரவோர். (௬௨)

கூறுமற்றவர்சம்புவின்கோயிற்குமூந்நூற்
றறுபத்துநற்பாண்டநாடொறும்வனைந்தளிக்கு
மாறிலிப்பெருநியதியர்வனையுமத்தொழிலா
லூறுநற்பொருள்கொண்டுசீவனஞ்செயுமொழுக்கார். (௬௩)

வெற்பின்மேதகவிளங்குதோற்றத்தராய்விமல
னற்பின்மேம்படுமற்றிவர்க்கன்பினுற்சிறந்த
பொற்பின்மேம்படுகுணவிரத்தினுசலைபொருந்துங்
கற்பின்மேம்படுகடிமனைக்கிழத்தியாயினரால். (௬௪)

அனையதொண்டரில்லறந்திறம்பூவகையாற்றி
வினயமோடரனடியரைமிகவுபசரித்து
முனைவனார்திருப்பணிகளைமரபுளிமுயன்றே
யெனைவரும்புகழ்பான்மையிற்செய்துவந்திட்டார். (௬௫)

அண்டர்நாயகனன்பினிற்சிறந்திடுநீல
கண்டரோரிரவினிற்சிவாலயம்புகூஉக்காதல்
கொண்டவன்புமேம்படப்பரற்றரிசித்துக்கொண்டு
மண்டுபல்வளமனைக்குமீண்டனர்புகவந்தார். (௬௬)

வந்திடும்பொழுதிற்பெருமழையினனைந்து
சிந்தையின்றியோர்கணிகையின்மனையினிற்சென்று
முந்துவாயிலினோர்புடையொதுங்கிமுன்னின்றா
ரந்தநீர்மையக்கணிகையின்றாசிமற்றறியாள். (௬௭)

உண்டபாத்திரங்கழீஇயநீரினைமனையுண்ணின்
றண்டநாயகர்தொண்டர்மேனியிற்படவங்கைக்
கொண்டுவீசினள்பலகணியாற்றுணைநீல
கண்டனார்நனைந்திதுசெய்தார்யாரெனக்கனன்றே. (௬௮)

உரப்பினாரந்தவோதைகேட்டொளிவளைத்தளிர்க்கைப்
பொருட்பெண்டாயெனவெளிவந்துபுகுந்ததைநோக்கித்
திருச்சபேசரோநீரொன்றுதிருநீலகண்டர்
விரைக்கண்மென்மலரடிபணிந்தொதுங்கினள்விளம்பும். (௬௯)

அறிவிலாதுசெய்யபராதமிதனையெம்மடிகேள்
குறிகொளாதிவண்பொறுத்தருள்புரிகெனக்கூறிப்
பொறுதியாளரையழைத்தனளுட்கொண்டுபோந்து
நறியமஞ்சனமாட்டின்னறுஞ்சாந்துதிமிர்ந்தாள். (௭௦)

பின்னும்பன்முறைபணிந்தனள்பெருநீலகண்ட
ரின்முகத்தராய்மகிழ்ந்தவட்கின்மொழிவழங்கி
மன்விரைந்துதம்மனையிடைப்போயினார்மறுவி
னன்மனைத்தையலார்வருநாயகர்க்கண்டார். (௭௧)

காலம்வைகிடவந்ததுங்கடிகமழ்களபஞ்
சாலமேனியிற்றிகழ்வதுங்கண்டுநெஞ்சழன்று
வேலவிங்கலங்கரித்தவர்யாரெனவினவ
நீலகண்டனார்புகுந்ததைநிகழ்த்தினர்நெறியால். (௭௨)

கணவர்கூறியவார்த்தையைநம்பிலர்காதற்
குணமனைக்கொடியார்குற்றம்புரிந்திட்டீரெம்மை
யணுகலீரெனவுரைத்தகன்றணித்துகிற்றன்னால்
வணமிகுத்ததம்மேனியைமறைத்தனர்சினந்தே. (௭௩)

ஆசைமேம்படத்திருநீலகண்டரம்மனையார்
வாசமங்கையாற்பற்றியீர்த்தனரந்தமனையார்
கூசியெம்மைநீர்தொடுவீரேற்கோதிலாவாணை
யீசனார்திருநீலகண்டத்தின்மேலென்றார். (௭௪)

வேறு.

எம்மைநீர்தீண்டிலாணை திருநீலகண்டத்தென்றீ
ரும்மையோர்காலுந்தீண்டேனினியென்றுருயர்ந்தவன்பர்
மும்மைசேருயிர்கள்யாவுமளித்தருண்முதல்விக்கன்பு
செம்மையேபழுத்தமாதர்த்தீண்டிடாமேதுயின்றார். (எ௫)

அசிதாரவிரதமிங்ஙனவ்விருமோருமோம்பிக்
கசிவோடில்லறநன்றாற்றிக்கழிந்திடவிளமைவாளா
சசிவாழுஞ்சடிலத்தெம்மான்றிருத்தொண்டுதவாதுபேணி
யொசியாவன்புடையராகியொழுகிவாழ்நாளிலோர்நாள். (எசு)

இனையர்மாவிரதந்தன்னையாவர்க்குமுணர்த்தவேண்டி
நனையவிழ்கொன்றைவேணிநடராசப்பெருமான்யோகி
யெனவடிவொன்றுகொண்டுதிருநீலகண்டரொன்பார்
மனைவயிற்போந்தாரையர்மற்றவர்க்கண்டுதாழ்ந்தார். (எஎ)

இருந்தகையுடையீர்நீரொன்னிற்கெழுந்தருள்லாலே
திருந்துநல்வாழ்வுபெற்றேன்வருந்திறஞ்செப்புவீரொன்
றருந்திருநீலகண்டர்வினுயினுரரியயோகர்
கரந்தனிலோடுகொட்டிக்கட்டுரைபுகலலுற்றார். (எஅ)

இத்திருவோடுநீண்டகாலமெம்பாலிலேயும்
வைத்திருந்தியாங்கேட்கும்போழ்நீகுவீரொன்றுமாசின்
மெய்த்திருநீலகண்டர்கரத்தினிற்கொடுத்தார்மேலோ
ரத்திறமாகவென்று திருவோட்டையங்கையேற்றார். (எகு)

ஏற்றிடுந்திருவோட்டின்கண்முத்திரையையவிட்டுப்
போற்றினர்கொண்டுசென்றுமனைவயிற்புறம்போந்தன்பர்
நீற்றிஞல்விளங்குமேனியோகர்பின்னெடிதுசென்றார்
சாற்றிநீர்நில்லுமென்றுசிதம்பரஞ்சார்ந்தார்யோகர். (அ0)

சிலபகல்கழிந்தபின்னர்ச்சிவயோகியாருந்தாம்வந்து
மலர்புகழ்நீலகண்டர்தமைக்கண்டுவைத்தவோட்டை
நலமுறக்கொடுக்கவென்றார்நாயனுர்வணங்கிப்போந்தே
யிலனிடைமுன்னர்வைத்தவிடத்தினிலோட்டைக்காணுர். (அக)

மற்றிதுவியப்பாநாஞேடெடுத்திலன்வாய்மையீது
சிற்சபைவாணருக்கேதெரியுமிச்செய்தியென்று
நிற்பதற்கிசையார்நெஞ்சம்வருந்தியேவெளியேநின்ற
நற்றவர்க்குறுகித்தாழ்ந்துநடந்தவுண்மையினைச்சொல்வார். (அஉ)

நாயனீர்நீயிர்தந்தவோட்டினைநானில்வைத்தேன்
மாயமாய்மறைந்ததோடுபுதிதொன்றுவழங்குகின்றே
னாயதுகொள்கவென்றார்சிவயோகரவண்வெகுண்டு
தீயதிம்மாற்றநந்தந்திருவோட்டுக்கொப்பின்றென்றார். (அங)

அடியனேனோடுதன்னைத்திருடினேனல்லேனன்ன
கெடுவினையென்மாட்டின்மையாவருமறிவர்கெட்ட
படியஃதறியேனெந்தாய்பயமிகவுடையனேயேன்
கொடுமைமற்றிஃதிதற்கியான்செய்வதென்னெனக்குலைந்தார். (அச)

மெய்த்தனியோகமேலோரன்பர்விண்ணப்பங்கேட்டுப்
பத்திநன்குடையீரந்தப்பாத்திரங்கவர்ந்திலீரேன்
முத்தவாணகையில்லாளைக்கைப்பற்றிக்குளத்துண்மூழ்கிச்
சத்தியஞ்செய்கவென்றுசாற்றினர்சீற்றமூள. (அரு)

திருநீலகண்டர்யோகர்செப்பியமாற்றங்கேட்டுப்
பெருநீர்மையோகரோநீர்பேசிடும்வண்ணமெல்லாம்
பரிவோடுசெய்வேனில்லாள்கையினைப்பற்றலொன்றும்
புரியேனென்னுரைத்தார்கேட்டபுராதனர்புகலலுற்றார். (அசா)

மனைவியின்கையைப்பற்றிமூழ்கிடமாட்டேனென்றீ
ரனையகாரணத்தானீரேயவ்வோட்டையபகரித்தீ
ரொனுமிதற்கையமில்லையினியும்மைவிடமாட்டேமியாந்
தனிமறையவர்சபைக்குவருகவென்றிழுத்தார்தாமே. (அஎ)

இழுத்தனர்கொண்டுவல்லேதில்லையந்தணரிருக்கும்
விழுச்சபைதனையடைந்திவ்வேட்கோபரோட்டைவௌவிப்
பிழைத்தனரொன்றார்நீலகண்டனைப்பெரியதில்லை
விழுத்தவவந்தணர்பார்த்திதுவிளம்பலுற்றார். (அஅ)

திருநீலகண்டரோநீர்சிவபத்தரொன்றுந்தீதில்
பெருவாய்மையாளரொன்றும்பெரிதும்யாமறிதுமிந்த
வருயோகர்கொடுத்தவோட்டையபகரித்திட்டிலீரேல்
விரைவோடிங்கிவர்சொல்வண்ணஞ்செய்வதேவிதியாமென்றார். (அகூ)

அறிவுடைப்பெரியீர்நீவிர்விதித்திடுமாணைதன்னைச்
சிறியனேன்கடக்கமாட்டேன்சிற்சபையுடையாரொன்ற
னுறுதியைப்பெரிதுந்தேர்வர்சிவயோகியாருரைத்த
முறைவழிச்செய்வேனென்றுமொழிந்தனர்விரைந்துபோந்தார். (கூ0)

பத்தினியோடும்யாரும்பார்த்திடக்குளத்திறங்கி
மெய்த்தகையாளர்தாஞ்செய்விரதத்தையெடுத்துச்சொல்லி
யொத்தவேய்த்தண்டுபற்றியுடங்குநீருள்ளேமூழ்கி
யெத்திறத்தோருங்காணவிளமைபெற்றெழுந்தாரம்மா. (௧௧)

ஏமமின்முதுமைநீங்கியாவரும்விரும்புமின்பக்
காமர்சால்யௌவனம்பெற்றிருவருமெழுதல்கண்ட
தேமலிதில்லைவாழந்தணர்சிவனடியாரோடு
தாமதிசயித்தார்தேவர்பூமழைதவச்சொரிந்தார். (௧௨)

தப்பிரசபேசரானோர்தனிப்பெருஞ்சத்தியோடு
திப்பியவிடைமேற்றோன்றித்திருத்தகக்காட்சியீந்தா
ரப்பெருநீலகண்டரருமனைக்கிழத்தியாரோ
டொப்பிலாவம்மையப்பர்தமைத்தொழுதுவகைபூத்தார். (௧௩)

அருட்செல்வம்பெற்றோமென்றென்றானந்தக்கடலுண்மூழ்குந்
திருத்தொண்டர்தம்மைநோக்கிச்சிவபிரானருளிச்செய்யு
மருட்பந்தந்துமியநீர்செய்மாவிரதத்தைநன்று
பொருட்கொண்டுநுமக்குமுன்னர்வெளிப்பட்டோம்புரையிலன்பீர். (௧௪)

நாமேமண்ணோடுகொண்டுசிவயோகியாகிநண்ணி
யேமாறவும்மைவஞ்சித்திட்டனமென்றுமிந்தத்
தூமேனியோடிருந்துசகவாழ்வுபெறுகவென்று
மாமாதராளோடையர்மறைந்துமன்றிடத்தரானார். (௧௫)

திருநீலகண்டர்முன்செய்திடவிரதத்தைநீக்கி
யொருவாவன்புடையரானவுயர்மனையாரோடங்கட்
பொருணீடுதம்மில்லெய்திப்புனிதபோகங்களாற்றித்
தெருணீடுமெக்கடம்மைச்சிறக்கப்பெற்றினிதுவாழ்ந்தார். (௧௬)

புவிவாழ்வினினிதுவைகிப்புகலருஞ்சிறப்புவாய்ந்த
சிவஞானம்விளங்கப்பெற்றுச்சீவன்முத்தியினையெய்தி
யுவமானமில்லாவீசரொடுத்தசேவடிக்கீழொன்றித்
தவமார்நன்மனையாரோடுதனிப்பெருவாழ்வுபெற்றார். (௧௭)

இன்றுமத்தீர்த்தமெய்திமூழ்குவோர்க்கிளமையோடு
நன்றுமெய்ப்பேறுநல்குநவையிலாத்தானம்பூசை
யொன்றுறப்புரிவோர்மூழ்கியுயர்நடராசன்றன்னை
மன்றடைந்தென்றுமெல்லாப்பெரும்பேறுமருவிவாழ்வார். (௧௮)

வரம்பில்சீர்நீலகண்டர்வரலாற்றினேடுகூடி
விரும்புசீர்படைத்தவிந்தவியன்கதைதன்னைச்சுத்தி
யரும்புமுள்ளத்தினேடுகேட்பவரறமுன்னுன
விரும்பொருளுன்குமன்றவெளிதினிற்பெறுவார்மன்னே. (கக)

பாவிப்பார்க்கெளிதிலென்றும்வெளிப்படும்பரிசராகிச்
சேவிப்போர்க்கணியராகிப்பரம்பொருளாகிச்சீர்சால்
வாவித்தாமரைப்போதொக்குந்திருமுகமலரமன்றுர்
தேவுற்றஞானக்கூத்தர்திருவருள்பெருகமன்னே. (க00)

நாகதீர்த்தம்.

வேறு.

பெரியதாய்ப்பெரும்புண்ணியம்யாவையுந்
தருவதாய்விடந்தன்னைத்தவிர்ப்பதா
யரியநாகதீர்த்தம்மறிவான்மிக்கோர்
பரவவுற்றதுபச்சிமதிக்கிலே. (க0க)

சிறந்தசீர்த்திகொடீர்த்தமதன்கணே
யறந்தவாமறையாதியநன்குதேர்
துறந்துளோர்தொழுந்தூயபதஞ்சலி
யிறந்திடாவரமெய்தினன்மூழ்கியே. (க0உ)

போகிவேந்தன்பிலத்தின்வழிப்புகூஉ
மோகநீக்குமித்தீர்த்தத்தின்மூழ்கியே
யேகநாதன்றிருவருளெய்தலா
ஞகதீர்த்தப்பேர்நண்ணிற்றஃதரோ. (க0௩)

சுவேதநதி.

வேறு.

தூயசீர்படைத்துநீடுஞ்சுவேதமாநதிப்பேர்த்தீர்த்தம்
வாயுவின்றிசையின்மேவுமற்றதன்கரையின்மேனுட்
பாயசீர்ச்சுவேதமேலோன்பகரருந்தவஞ்செய்தான்ம
நாயகனுனஞானநடராசற்கணுக்கனுன். (க0௪)

பார்திகழ்புரட்டாதிக்கட்சுக்கிலபக்கந்தன்னி
னேர்தசமியிற்பொருந்துந்திருவோணநிகரினளிற்
கூர்சிவபத்தியோடித்தீர்த்தத்திற்குளிப்போர்பேர்கஞ்
சார்சிவப்பேறிரண்டுமெய்துவர்தவத்தின்மிக்கீர். (க0ரு)

குபேரதீர்த்தம்.

சீர்த்திசால்குபேரதீர்த்தந்திகழ்தரும்வடாதுதிக்கி
லார்த்தியோடாடுவாருக்காயுதப்புண்கண்மாற்று
மேத்துசீரதன்கரைக்கட்குபேரன்மெய்த்தவமியற்றிப்
பேர்த்தனியீசனுர்க்குத்தோழனும்பெரும்பேறுற்ருன். (க0சு)

தவலருந்திருவில்லைவகுஞ்சுராசுரர்தன்னேரில்லாச்
சிவபிரானுணையாலித்தீர்த்தத்திற்செவ்வாய்மூழ்கிக்
கவலறவுடம்பினுற்றகழிபெரும்புண்களீங்கி
யுவமையில்பளாவையர்ச்சித்துய்ந்தனரந்தணாளீர். (க0எ)

சிவகங்கை.

திருந்துமீசானதிக்கிற்சிவகங்கையென்னுந்தீர்த்த
மிருந்திடுமூழ்குவார்க்கஃதீந்திடுஞ்சித்தசுத்தி
பொருந்துமத்தீர்த்தந்தன்றற்பொருவிலாமூலத்தானம்
பரிந்துவீற்றிருக்குமாதிப்கவற்காட்டிடுகெபண்பால். (க0அ)

சித்திரைமாதந்தன்னிற்சிறந்தசித்திரைநன்னாளிற்
பத்தியிலிதன்கண்மூழ்குவார்பகைபணியவாழ்வர்
புத்தியின்சலனம்போக்கிப்புண்ணியமெய்துவார்கண்
மெய்த்துகோதானஞ்செய்வோர்விளங்குகோவுலகுசேர்வார். (க0க

சிதம்பரந்தன்னிலுள்ளதீர்த்தமான்மியத்தையிங்ஙன்
விதம்படப்புகன்றாந்தீர்த்தமான்மியமிதனைவேண்டி
யிதம்படக்கேட்போர்கற்போர்புண்ணியராவீரேரற்
புதம்பயிலின்பயாத்திரோற்சவம்புகல்வாமிப்பால். (கக0)

தீர்த்தவிசேடப்படலமுற்றிற்று.

# யாத்திரோற்சவப்படலம்.

சம்புவாகியதாண்டவப்பிரானுக்கித்தலத்தி
லும்பர்போற்றுசீருற்சவம்பன்னிரண்டுளவா
னம்புசீர்ப்பரமானந்தநல்விழாவவற்றை
யிம்பர்நீரறிதரவெடுத்திசைக்குதுமுறையால். (க)

மார்கழித்திருவாதிரைநாண்மன்றவாண
ரார்வமிக்கநற்றில்லைவாழந்தணரமலச்
சீர்கொளத்தனிக்காவிரித்தீர்த்தத்தின்மறைசொற்
றேருறப்புரியபிடேகமினிதுவந்தாடி. (உ)

அனகமன்றினில்வில்லைவரம்பறிவதற்கரிய
கனகவாதனமேவியேகருணைமீக்கூர்ந்து
புனிதநூன்முறைபூசைகொண்டருளியேழ்திறத்து
முனிவரஞ்சலிமுகிழ்த்தனர்முன்னின்றுபரச. (ங)

ஒருதலைப்பராசத்தியாஞ்சிவகாமியுடனே
திருமிகுத்திடுபுனிதமாவீதியிற்செல்வு
வருமறைத்தில்லையந்தணரண்மினர்குழுமி
யுரிமையிற்புரியுபசாரமுவந்துகொண்டருளி. (௪)

சிறப்புமேம்படத்திருவுலாப்போதந்துசீர்சா
லறப்பெருந்தனிக்கனகசிற்சபையினையடைந்தே
யிறப்பில்பேரின்பதரிசனங்கொடுத்தினிதமர்வார்
துறப்பின்மேம்படுமுனிவிர்காளின்னுமத்தொல்லோர். (௫)

இந்தமூவுலகேத்துதைப்பூசத்திலுலாப்போ
தந்துமன்றினையடைந்தமர்ந்தருளியேதங்கே
ரந்தணாளர்கொண்டுவந்துவந்தனர்நிவேதிக்குங்
கந்தமாவியமடியவர்கொளச்செய்வர்கருணை. (௬)

மாசிமூலத்திற்றுவசவாரோகணமன்று
ரீசராற்றியீரொன்பதுதினமெழில்வீதித்
தேசுறத்திருவுலாப்போந்துதிகழுத்தியான
வாசமண்டபத்துலகெலாம்வாழவீற்றிருந்தே. (௭)

பத்தர்செய்யுபசாரங்களேற்றருள்பாலித்
தத்தியைத்தலைக்கூடிமாமகத்துநீராடி
யெத்திறத்தவர்க்கும்பிரசாதமீந்தருளிச்
சுத்தமாமணிச்சோதிமன்றடைந்தருறுப்பார். (௮)

சிறந்தபங்குனியுத்திரஞ்சிதம்பரநாத
ரறந்தவாமறையந்தணர்பூசைகொண்டருளி
யிறந்திடாவளவீதிபோந்தியாவர்க்குங்காட்சி
மறந்தணந்திடவழங்கினர்மன்றணைந்தருள்வார். (௯)

ஏர்மிகுத்திடுசித்திரையின்னிளவேனிற்
சீர்மிகுத்திடுசித்திரைமுதற்றிருவவிட்டப்
பேர்மிகுத்திடுநாளிறுவாய்ப்பெருவீதி
யூர்மிகுத்திடுதிருவுலாப்போவர்மன்றுடையோர். (௧0)

புண்ணியந்திகழ்வைகாசிப்புனர்பூசமுதலா
வெண்ணிடுஞ்சுபவிசாகநாள்காறுமெல்லையில்சீர்
நண்ணிடுஞ்சிதம்பரசபாநாதனூர்வசந்தக்
கண்ணிறைந்திடுமுற்சவங்கருணையிற்கொண்டே. (௧௧)

அந்தமில்பலவாலயங்களினின்றுமாண்டு
வந்தமங்கலபாடகர்முதலியோர்வளஞ்சேர்
சந்தமானந்தமேம்படப்பாடினர்சாரச்
சிந்துசேர்ந்துலகுய்யவாடினர்மன்றுசேர்வார். (கஉ)

ஆனிமாதத்தினத்தராமம்பலவாணர்
வானளாவுபொற்றம்பத்தான்வரைந்தமாத்துவச
மேனிலாவிடவேற்றிமாலயன்முதல்விண்ணோர்
ஞானயோகியர்முனிவரர்நாடினர்வழுத்த. (கங)

சித்திரந்திகழ்வீதியிற்றிருவுலாப்போதந்
துத்திரத்திருநாளின்மஞ்சனமுவந்தாடி
யெத்திறத்தினர்தமக்குமானந்தவாழ்வீந்து
நிமத்துசீர்மன்றமேவியேதரிசனமீவார். (கச)

வேறு.

தக்கிணாயனத்துநேருமாடிமாதத்திற்சாரும்
பக்கமார்கரையின்முத்தப்பருமணிவரன்றியோங்கு
மிக்கநூபுரப்பேர்யாணர்வியனதிக்கரையின்மேவுந்
தொக்கசீர்மண்டபத்திலுவகெலாந்தொழவமர்ந்தே. (கரு)

பரிமளதயிலந்தோய்ந்துபகருமந்நதியிலாடி
வரமுறுமுனிவர்வானோர்மானிடர்தங்கட்கெல்லாம்
புரைதபச்சுத்தியீந்துபொன்னினம்பலத்தைச்சேர்வ
ருரையொடுமனங்கடந்தேயோங்குமன்றுடையவீசர். (கசு)

அணிமிகுமாவணிக்கட்டிருவோணத்தச்சபேசர்
மணிவளர்பவித்திரோற்சவங்கொள்வர்புரட்டாதிக்கட்
டணிவுறவொலிக்குமோதத்தனிப்பாசவிமோசனத்தை
னணியருந்தீர்த்தமீந்துசிற்சபைசேர்வர்நம்பர். (கஎ)

ஐப்பசிப்பூரத்தின்கணம்பிகைப்பிராட்டியாளு
டப்பிலாவறமெண்ணான்கும்வியத்தகத்தானன்காற்ற
வெப்பொருளும்மாந்தில்லையீசர்பானிதிகள்பெற்றே
யொப்பிலாவடியரோடுமுலாப்போந்துதிருவீதிக்கண். (கஅ)

விளங்குநற்றானம்யாவும்விதியுளிமேவச்செய்து
துளும்புசீர்மறையோராதியடியர்க்கங்கருள்சுரந்து
வளங்கெழுகோயினண்ணிவானவர்முனிவர்போற்றக்
களங்கறுத்தமரர்க்காத்தநடராசர்க்கலந்துவாழ்வார். (ககூ)

நாடுகார்த்திகைப்பேர்வாய்ந்தநன்மதியுவாவொடண்மும்
பீடுசேரார்ஞானிற்பெரியதீபோற்சவங்கொண்
டாடுவார்தில்லைநாதரனையர்நல்விழவீதன்பிற்
பாடுவாரென்றுநீங்கார்நல்விழாப்பரமவாழ்வே. (உ0)

பஞ்சவாவரணத்தோடுவிளங்கிடும்பைம்பொன்மன்றத்
தஞ்சுபேரறிவுநாடுமென்பர்தங்கண்ணேயாரக்
கஞ்சவாண்முகத்தானந்தக்கௌரிகண்டுவப்பவாடுஞ்
செஞ்சடைக்கூத்தர்மேலாந்திருவருள்பெருகமன்றே. (உக)

மேதைசான்முனிவிரோமவியன்சபாநாதர்மேன்மை
காதலானீவிர்தேறவியம்பினுமிதனைக்கற்போ
ராதரவதனாற்கேட்போரடுத்தபல்வினையனுக்கித்
தீதில்சித்திகளினோடுசிவப்பேறுகூடிவாழ்வார். (உஉ)

இந்தமான்மியத்தையோர்காலெனினுமாதரவிற்கேட்போ
ரந்தமாபோகம்யாவுமிம்மைதுய்த்தளப்பிலாமெய்
விந்தைமூவாறுமுற்றுமேலவராகிநீடி
முந்துசிர்படைத்துமேலாம்பயனெலாமுறையினெய்தி. (உங)

தவந்தானந்தியானம்பூசைதனியோகநியமந்தம்மா
னிவந்துசேர்பயனோடெல்லாவிட்டந்தானினைந்தாங்கெய்தி
யவந்தாழமன்றவாணர்திருவடிக்கீழங்கண்மிச்
சிவந்தாமேயாகியொன்றியானந்தந்திளைத்துவாழ்வார். (உச)

மாமறைத்தொகையுமின்னுமளப்பருமாட்சித்தாய
வேமசிற்சபையில்வாழுநடராசரினையின்மேன்மை
நாமெடுத்துறைக்கற்பாற்றோஞானமாமுனிவீரன்றோ
சேவடிக்கமலங்காட்டுந்திறத்தொருசிலசொற்றேமால். (உரு)

வேறு.

தூன்றிவான்முகில்வழங்குகபுனனணிசுரந்து
வென்றிவேந்தர்செங்கோன்முறைதிறம்பிடார்விளங்க
வென்றுமீருயிரிடரகன்றின்புறவினையின்
மன்றுளேடோங்குகவைதிகசைவமாநிலமே. (உசா)

யாத்திரோற்சவப்படலமுற்றிற்று.

## சிதம்பரசபாநாதபுராணமுற்றிற்று.